Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 18.00

දිනමුරසු වාරමලර්

ஜூன் 09 - 15, 2005

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 617

## மீண்டுமொரு யுத்தமா...?

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## ஈ.பி.டி.பி. யின் அரசியலும் கிழக்கு மாகாணமும்

அரசியல் அலசல் வ



## பிரச்சினைகளை தோற்றுவிக்கும் பெண்களின் மட்டுச் செழிப்பு


## தியா + லக்ஷ்மிராய் இளமைப் பேட்டி

சினி விசிட்

## மண்டை ஓடு திருடப்படுகிறது!

# மத அனுஷ்டானம் வளரும் போது வன்முறைகள் குறையும்

## ஆன்மீகம்



அர்த்தமுள்ள இந்து மதம் கூறும் அற்புதத் தத்துவங்கள் எல்லாம் விஞ்ஞானத்தோடு கூடியவகையாகவே இருக்கிறது.

இந்துக் கோயில்களில் நடைபெறுகின்ற கிரிகை முறையிலான பூஜைகள்கூட வாழ்க்கை நடைமுறையைச் சிறப்பாக வாழ உள்ளத்தில் அமைதியை உறைய வைக்கும் உன்னத காரணியாக அமைகின்றது.

அலைபாயும் மனதுக்கு ஆலய மணி ஓசையும் தீபாராதனையும் தெய்வீக மாந்திரீக ஒலியும் புனித ஆலயச் சூழலும் நிம்மதியைத் தருகிறது.

என்னதான் விஞ்ஞானயுகமானாலும் இக்கலிகால யுகத்தில் இப்போது கடவுள் வழிபாடு, கடற்கோள் அனர்த்தத்தின் பின் அநேகரது நெஞ்சங்களில் நிறைந்துள்ளதையும், இறைவனே தஞ்சமென்று வணங்குவதையும் காணக்கூடியதாய் இருக்கிறது.

அபூர்வமான சில சம்பவங்களும், சுனாமி தந்த பாடங்களும் இறைவழிபாட்டை மேலும் கூட்டியுள்ளது. மத அனுஷ்டானம் வளரும் போது வன்முறைகள் குறையும்.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.

# மகிழ்ச்சியாக வாழ்வோம்

இறை அன்பின் நிலைத்து என்றும் அவருக்கு பிரமாணிக்கமாக வாழ நாம் பழகிக் கொள்வோம். எமது அயலவரின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து அவர்களுக்கு உதவுவதில் இறைவன் எமக்கு மிகுந்த இரக்கத்தைத் தருவார். இதனால் துன்பப்படும் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ முடியும். "உன்னைப் போல் உன் அயலாரையும் நேசி" என்பது கூட, இறைவன் எமக்கு வழங்கும் இனிய அழைப்பு. நாம் எம்மை எவ்வளவு தூரம் நேசிக்கிறோமோ, அவ்வளவுக்கு அதிகமாக மற்றவர்களையும் நேசிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆனால் இன்று அயலாரை நேசிக்கும் பக்குவம் யாருக்கும் இல்லாமல் போய் விட்டது. காலம் கடந்தாலும் இனியாவது எமது பாவத்தை உணர்ந்து என்றும் இறைவனில் மகிழ்ச்சியாக வாழ்வோம்.

சு.லசா, கொழும்பு.

# அந்நிபாக் – நயவஞ்சகம்

இஸ்லாம் வெறுக்கின்ற ஒரு மோசமான பண்பாகவும், சமூகத்தில் காணவே கூடாத ஒரு கீழ்த்தரமான பண்பாகவும் அந் நிபாக்கை (நயவஞ்சகத்தை) இஸ்லாம் கருதுகின்றது. ஒரு மனிதனின் அகமும் புறமும், சொல்லும் செயலும் ஒரே விதமாக அமைய வேண்டும். இதற்கு மாற்றமான செயல் முறை அனைத்தும் நிபாக் ஆகும். நயவஞ்சகனின் பண்புகள் மூன்று. அவையாவன:-

பேசினால் பொய் பேசுவான், வாக்களித்தால் மாறு செய்வான், நம்பினால் துரோகம் செய்வான்.

ஒவ்வொரு முஸ்லிமிடமும் இஸ்லாம் கூறுகின்ற ஒழுக்க விழுமியங்கள் காணப்பட வேண்டும். உள்ளத்தில் ஒன்றும் வெளியில் ஒன்றும் வைத்துப் பேசுபவன் நயவஞ்சகனில் அடங்கும். நயவஞ்சகனைப் பொறுத்தவரை அவனிடம் நேர் எதிரான பண்புகள் காணப்படும். எவரிடத்தில் நான்கு குணம் இருக்கிறதோ அவன் முனாபிக்காவான். யாரிடத்தில் அதில் ஒன்று இருக்கிறதோ அதை அவன் விடும் வரை அவனிடம் நயவஞ்சகக் குணத்தில் ஒன்று இருக்கும். நான்கு குணங்களும் பின்வருமாறு:-

பேசினால் பொய் பேசுவான். உடன்படிக்கை செய்தால் மோசடி செய்வான். வாக்குறுதியளித்தால் மாறு செய்வான். தர்க்கம் புரிந்தால் சத்தியத்தை விடுவான். எனவே நாம் நயவஞ்சகத் தனத்தில் இருந்து மாறி நல்லடியார்களாக மாற வல்லவன் அருள் புரிவானாக! ஆமின்.

றஸீன் றஸ்மின், றஹ்மத்புரம்.

## கவிதைப் போட்டி இல.614



### சடலங்கள்

### புனிதம்.....!

சிதறிக் கிடக்குது
மனிதம்.
வருமா மண்ணுக்கு
புனிதம்.....!?

– நஸீஹா சம்சபாத்,
புத்தளம்.

செத்துவிட்ட
மனசாட்சி
செத்துக்
கொண்டிருக்கும்
மனிதம்
இவற்றினது
சிதைவுகள்தான்
இவையோ....!

– சங்கம ஹிஷாம்,
திருகோணமலை.

பரிசுக்குரிய கவிதை

### நீதிமன்றம்

நாட்டு நடப்புக்குப்
புறம்பான நீதிமன்றம்
இடக்கு முடக்காக
இயம்பத் தொடங்கிவிட்டால்
நடுச் சந்திகளில்
சடலங்கள் விழுந்து விடும்.

சீ.தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

### நம் தவறுகள்!

ஆர்ப்பாட்டங்கள் வன்முறையாகி,
வன்முறைகள், உயிர்ச்சேதம்,
உடைமைச் சேதம் செய்து
வருங்காலத்தின் வரலாற்றில்
இறந்தகாலத்தின் நம் தவறுகள்
இரத்தம் படிந்த தழும்புகளாகவும்,
நாம் குற்றவாளிகளாகவும்
சுட்டிக்காட்டப்படும்.

– வ. சந்திரபிரசாத்,
மாமாங்கம்.

### புரியவில்லை

வீட்டில் இருந்தாலும் வேட்டு
வீதிக்கு வந்தாலும் வேட்டு
படுமோசப் படுகொலைகள்
பணத்திற்காகவா? இனத்திற்காகவா?

– எம்.சி. கலீல்,
கல்முனை – 05.

### நரப் பசி!

பாம்பு தின்னும்
ஊரென்றால்
நடுத்துண்டு
நமக்கென்பார் மத்தியில்.....
மனிதனையே! மனிதன்
புசிக்கும்
இவ்வூரில்
எத்துண்டு
எமக்கென்பதில்தான்
இவர்களிடையே
இத்தனை கலவரமோ?

– கே. நௌஷாத்,
ஏறாவூர் – 03.

### மனித நேயம்

மதி மழுங்கி
விதி விலகி
சதி ஓங்கி - குருதியால்
புவி சேறாகியது போதும்.
யாவரும்
யாவரையும் மன்னிப்போம்;
மனித நேயம் காப்போம்.

– அ.கா.மு.றிஸ்வின்,
மூதூர் – 01.

### மலிவு விலை

மனித மாமிசம்,
மலிவு விலையில்!
ஈரான், ஈராக்கில்
மட்டுமல்ல;
நம் இலங்கையிலும்தான்.
எம்மைப் படைத்த
இறைவன்
கூலி கொடுப்பான்!

– மோ. ஏரகன்,
கல்முனை – 03.

## கவிதைப் போட்டி இல.617



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 15.06.2005.

கவிதைப் போட்டி இல.617
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### எங்கும் கலகங்கள்!

இழவு விழுந்தாலும்
இழுபறி விழாமல்
ஈட்டிக் கொள்ளும்
வெற்றிக்காக.....
இங்கே - அமளி துமளி
உலகம் முழுதும் - இப்படியே.
எங்கும் கலகங்கள்.

– காமீம் – செய்னுலாப்தீன்,
கிண்ணியா – 05.

### உயிரின் விலை....?

சாதிச் சண்டைகளும்
மதக் கலவரங்களும்
நிரம்பி வழியும் நாட்டில்
மனிதனுக்கு....
மலிவு விலையில்
கிடைப்பது - அவனது
அடுத்த சகோதரனின்
உயிர் மட்டும்தான்!

– மீராமுகைதீன் – இர்ஷானா,
ஏறாவூர் – 03.




### சித்தாந்தம் வருமா....?

அநியாயங்கள்
நிறைந்து விட்டன - இனி
இரத்தத்தில்.....
எப்படிச் சித்தாந்தம் பேசுவது?

– எஸ்.பி.பாலமுருகன்.

# உங்கள் பக்கம்

## தலைநகரில் தமிழின் அவலம்

உருக்குலைந்த ஓவியங்களும் இடிந்து விட்ட இதிகாச உண்மைகளும் மறைந்து விட்ட தமிழன் பெருமையை மனதில் உலவ விடும் இக்கால கட்டத்திலே, தற் சமயம் நமது தலைநகரில் உள்ள பெரிய அரச மருத்துவமனைக்கு நோய் காரணமாகச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டது. அங்கு முதன் முதலாக நோயாளர்கள் இலக்கங்களைப் பெறும் இடத்தில் உள்ள அறிவிப்புப் பலகையில் "அரை.15" என்று தமிழில் எழுதி இருந்தது. ஆனால் ஆங்கிலத்தில் "Room No.15" என சரியாக எழுதப்பட்டிருந்தது.

அடுத்து, குருதிப் பரிசோதனைக்கான அறிவிப்புப் பலகையில் "ஆய்வ கூடம்" என்று தமிழில் எழுதப்பட்டிருந்தது. மற்றைய பகுதிகளுக்கு நான் செல்லாதபடியினால் அங்கு என்ன எழுதப்பட்டிருந்ததோ தெரியவில்லை. ஏன் இந்த அவல நிலை தமிழுக்கு?

நூற்றுக் கணக்கானோர் தொழில் புரியும் கொழும்பு மகா வைத்தியசாலையில், கேவலம் தமிழ் வாசிக்க, படிக்கத் தெரிந்த ஒருவர் கூட இல்லையே என்ற மன வேதனையுடன் வீடு திரும்ப நேரிட்டதையிட்டு பெரிதும் மனம் வருந்துகின்றேன்.

லொயிட் பெர்னாண்டோ,
கருக்குப்பனை.

# வாசக(ர்) சாலை

### உனக்கு நீயே நிகர்

தித்திக்கும் முரசே
தேனூட்டும் உன்
சுவையான செய்திகள்
என் உள்ளத்தை
சுவாரசியப்படுத்துகிறது.
காலம் கடந்த
பல செய்திகளை
நீ எமக்கு நினைவூட்டுகையில்
உனக்கு நிகர் நீயேதான்.

அன்பு வாசகன்,
ம. வாசன்,
திருகோணமலை.

### அன்பான தினமுரசே,

தினம் உனது ஆக்கங்களை படிக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். அரசியல் தொடக்கம் அதிசயங்கள் வரை நீ எல்லோருக்கும் உண்மையை சொல்லுவதில் வீரன். காலங்கள் அழிந்தாலும் உன் சேவை தொடர என் வாழ்த்துக்கள்.

பிரிய வாசகி,
சு. ராணி, பண்டாரவளை.

### வணக்கம்

வளர்ந்து வரும் கவிஞர்களின் கவிப்பசிக்கு பாலூட்டிக் கொண்டிருக்கும் கவிதைப் போட்டிக்கு வாழ்த்துக்கள். படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுவதென்பது ஒரு வித்தியாசமான முறை தான். அதனை இலங்கையில் அறிமுகம் செய்த பெருமை தினமுரசையே சாரும்.

சங்கம ஹிஷாம், திருகோணமலை.

### முரசே,

பயன்தரும் பல ஆக்கங்களை எமக்கு தித்திப்புடன் வாரந்தோறும் வழங்கும் தினமுரசுக்கு எனது பல்லாயிரம் வாழ்த்துக்கள். மூட நம்பிக்கைக்கு முரசு முற்றுப் புள்ளி. இதில் அடங்கியுள்ள சகல அம்சங்களும் தித்திப்பூட்டுகிறது என்னமோ உண்மைதான்.

சுபாஷினி, மட்டக்களப்பு.

### வளமுடன் வாழ்க!

இளம் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்து ஊக்குவிக்கும் தினமுரசே, உனது பணிசிறக்க எனது இதயம் கனிந்த வாழ்த்து. தேன் கிண்ணம் தித்திக்கிறது. வளரும் கவிகளின் கவித்துவம் கற்கண்டு, கட்டுரைகள் உண்மையை எடுத்து விளாசுகின்றன. எந்த ஊடகமும் துணிந்து தராத உண்மைகளை உன்னில் காண்கிறேன். எதிர்ப்புகள் வந்த போதும் துணிச்சலுடன் பணிபுரிய உனக்கு எப்படி இவ்வளவு திறமை வந்தது? வாழ்க - வளர்க - வளமுடன்.

ஆ. றீனா, வத்தளை.


மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -4-514282
தொலை நகல் (Fax):–4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# பொதுக்கட்டமைப்பு : பந்து புலிகளின் பக்கம்

## எந்த அரசியல் பேரலைகளையும் தாண்டி மாற்று வழியைக் கையாள ஜனாதிபதி உறுதி

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சகல அரசியல் அலைகளையும் சுழிகளையும் தாண்டி பொதுக்கட்டமைப்பை அமைப்பதற்கான இறுதி முயற்சியில் விரைவில் வெற்றி பெறுவாரென தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தமிழ்பேசும் மக்கள் மிகப் பெரும்பான்மையாக வாழும் வடக்கு - கிழக்கே மிகவும் கூடுதலாகப் பாதிக்கப்பட்டபடியால் புலிகளையும் உள்ளடக்கி பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டுமென்ற பரவலான கோரிக்கைக்கு ஜனாதிபதி தேசியவாத சிங்களச் சக்திகளின் எதிர்ப்புக்கு மத்தியிலும் துணிச்சலுடன் முன்வந்துள்ளார். சகல தரப்பினரின் ஆலோசனைகளையும் பெற்று ஜனநாயக ரீதியாக, பன்முகத்தன்மையுள்ள கட்டமைப்பொன்றினை அமைக்க வேண்டியதன் அவசியத்தை இந்தியா, நோர்வே, ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன் உட்பட அனைத்து நாடுகளுமே வலியுறுத்தி நிற்கின்றன. இந்த நிலையில் எமது நட்பு நாடான இந்தியாவின் ஒப்புதலோடு முன்வைக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பு யோசனைகளை இலங்கையிலுள்ள நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கிளிநொச்சிக்கு எடுத்துச் சென்று புலிகளின் அரசியல் பிரமுகர் தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடியுள்ளார். வடக்கு - கிழக்கில், 15 அல்லது 20 சதவீத நிலப்பரப்பையே தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் புலிகள் அரைவாசிக்கும் அதிகமான பிரதிநிதித்துவத்தைக் கோருவது நியாயமல்லவென்று அரசின் நிலைப்பாட்டை பிரட்ஸ்கர் தமிழ்ச்செல்வனிடம் எடுத்து விளக்கியுள்ளார். வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையாகவும் சிறுபான்மையாகவும் வாழும் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் இல்லாமல் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப் படுவதை எவருமே விரும்பமாட்டார் என்றும் ஜனாதிபதியின் கருத்தை அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார். புலிகளின் பிரதிநிதிகள் என்று கூறப்படும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எம்.பி.க்களே பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்க முடியாத நிலையில், புலிகளைப் போன்ற ஏனைய அரசியல் சமூகப் பிரதிநிதிகள் ஏன் அங்கம் வகிக்க முடியாது என்ற மாற்றுத்தரப்புக் கோரிக்கையையும் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தமிழ்ச்செல்வனிடம் சுட்டிக்காட்டியுள்ளார். இந்நிலையில் நெகிழ்ச்சித் தன்மையுடன் புலிகள் பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்க வரமுடியுமா என்றும் அவர் கேட்டுள்ளார். பந்து இப்போது புலிகளின் பக்கம் இருக்கிறது என்று அரசாங்கம் கூறுகிறது. புலிகள் இயக்கம் வடக்கு - கிழக்கு மக்களின் நிவாரண மற்றும் மீள்கட்டுமாண பணிகளில் பங்குபற்றத் தவறினால் மாற்றுவழிகளை யோசிக்க வேண்டுமென்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.



வன்னியிலுள்ள முழங்காவில் மாவீரர் முன்பள்ளிச் சிறுவர்கள், புலி இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு விசுவாசமாகச் சத்தியப்பிரமாணம் செய்வதைப் படம் காட்டுகிறது. கடந்த வாரம் இப்படம் பிடிக்கப்பட்டது.

## புலிகளின் விமானப் படையணி உறுப்பினர்கள் நால்வர் தப்பியோட்டம்

புலிகளின் விமானப் படையணியிலிருந்து தப்பிச் சென்றிருக்கும் யோகேஸ் மற்றும் மூவரைத் தேடி பிரபாகரனின் உத்தரவின் பேரில் புலிகளின் புலனாய்வுப் பிரிவு உறுப் பினர்கள் கொழும்புக்கும், திருமலைக்கும் விரைந்துள்ளனர். 'சுயாத்' என்றழைக்கப்படும் இந்தப் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர் களான யோகேஸ் (இயற்பெயர் நிர்மல்) மற்றும் இவருடன் தலைமறைவாகியுள்ள எழிலரசன், றீகன், சோதீஸ் ஆகிய மூவரையும் தேடி வலைவிரித்துள்ளனர். இவர்களோடு தப்பிச் சென்ற றீகன் என்பவர் நீர்கொழும்பில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். புலிகளின் ஊடறுத்துத் தாக்கும் பிரிவிலும், வேவுப் பிரிவிலும் முக்கியஸ்தராகச் செயற்பட்ட யோகேஸ், பிரபாகரனின் மிகவும் நெருக்கத் துக்குரியவரென்ற காரணத்தால் 1997ஆம் ஆண்டில் பிரபாகரனாலேயே புலிகளின் விமானப் படையணியில் நியமிக்கப்பட்டவ ரென்று வன்னி வட்டாரங்கள் கூறுகின்றன. வண்ணான்குளம், கொக்காவில், முல்லைத்தீவு, கிளிநொச்சி, பூநகரி உட்பட்ப் பல தாக்குதல்களில் புலனாய்வு அணியில் பங்கேற்றவர் யோகேஸ் என்றும் கூறப்படுகிறது. யோகேஸைக் கொலைசெய் வதற்குக் கடந்த வருடம் நவம்பர் மாதம் 24ஆம் திகதி திருமலை அன்புவழிபுரத்தில் புலிகள் தாக்குதலொன்றினை நடத்தினர். ஆனாலும் அவர் அத் தாக்குதலிலிருந்து உயிர்தப்பினாரென்பதும் இப்பொழுதும் புலிகளால் தீவிரமாக தேடப்பட்டு வருகிறார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

## நயினை ஆலய வீதியை திறந்துவிட நடவடிக்கை

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைப் பிரதிநிதிகள் குழுவொன்று இந்து சமய அலுவல்கள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து விடுத்த வேண்டுகோளையடுத்து, ஆலயத்துக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியைப் பக்தர்களின் பாவனைக்குத் திறந்துவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார். கடந்த எட்டாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான உற்சவம் எதிர்வரும் 23ஆம் திகதிவரை நடைபெற வுள்ளதால் பக்தர்கள் சிரமமின்றி ஆலய தரிசனம் செய்வதற்கு வழிசெய்யும் வகையில் ஜனாதிபதி மற்றும் முப்படைத் தளபதிகளுடன் கலந்துபேசி அதற்கான ஒழுங்குகளைச் செய்துவருகிறார். கடற்படை முகாம் அமைந்திருப்பதால் இந்த வீதி கடந்த 83ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. பலத்த சோதனையின் பின்னர் இவ் வீதி வழியாகப் பஸ்களில் செல்லவே மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

## சேது திட்டத்தில் மாற்றங்கள்

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா, இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கிடம் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தினால் இலங்கைக்கு ஏற்படப்போகும் சாதக பாதகங்கள் பற்றி எடுத்து விளக்கியதையடுத்து, இரு நாட்டு அதிகாரிகளும் இப்போது இதுபற்றி மீளாய்வு செய்யத் தொடங்கியுள்ளனர். 2367 கோடி ரூபா செலவில் அடுத்த மூன்றரை ஆண்டுகளுக்குள் இக் கால்வாய்த் திட்டப் பணிகளைப் பூர்த்தி செய்ய இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருந்தது. சுமார் 145 ஆண்டுகளுக்கு முன்னர் வைக்கப்பட்ட இத் திட்டத்தின் மூலம் மன்னார் வளைகுடாவையும் பாக்கு நீரிணை ஜலசந்தியையும் இணைக்கும் வகையில் கால்வாய் வெட்டி ஆழப்படுத்தவும் அகலப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கையைச் சுற்றிக் கப்பல்கள் பயணம் செய்யும் பாதையைக் குறுக்கி, பாக்கு நீரிணைக்கூடாகச் செல்லமுடியும். இதனால் இலங்கைக்குக் கிடைக்கும் துறைமுக வருவாய் வீழ்ச்சியடையு மென்பதோடு சூழல் பாதிப்புகள் ஏற்படுமென்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து ஜனாதிபதி, இந்தியப் பிரதமரிடம் நேரடியாக எடுத்து விளக்கியதையடுத்து சேது சமுத்திரத் திட்டத்தில் மாற்றங்கள் செய்ய இந்தியா இணங்கியுள்ளது. புலிகள் இயக்கம் இத்திட்டத்தை எதிர்த்தமைக்கு அவர்களது சொந்தக் காரணங்கள் இருந்தன. தமது ஆயுத மற்றும் விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கு சேது சமுத்திரத் திட்டம் அச்சுறுத்தலாக அமையுமென்பதே அவர்களின் காரணமாகும். இவற்றையெல்லாம் கவனத்தில் எடுக்காமல் இரு தரப்புக்கும் உசிதமான முறையில் திட்டங்களில் மாற்றங்கள் செய்ய இந்தியா இணங்கியுள்ளது.

## கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலக அதிகாரிக்குக் கல்தா

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தின் தலைவர் மிகுல் பேர்மியோவை கொழும்பிலிருந்து திருப்பி அழைக்குமாறு ஐ.நா. சபையை இலங்கை அரசாங்கம் கோருமென நம்பகமாகத் தெரியவருகிறது. இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்த அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் சுனாமி மீட்புப் பணிகளுக்கான ஐ.நா. விசேடப் பிரதிநிதியுமான பில் கிளின்டன் அண்மையில் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மகாநாட்டின் போது தமிழ்நெட் இணையத்தள புகைப் படப்பிடிப்பாளர் ஒருவரை கூட்ட மண்டபத்திற்குள் அனுமதித்தமை தொடர்பாகவே இச்சர்ச்சை எழுந்துள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பாக இப்புகைப்படப் பிடிப்பாளர் கூட்ட மண்டபத்துக்குள் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். இச்சம்பவம் குறித்து கொழும்பிலுள்ள ஐ.நா.அலுவலகப் பேச்சாளர் ஒருவரைக் கேட்டபோது, அவர் எவ்வாறு உட்புகுந்தார் என்று தமக்குத் தெரியாதென்று குறிப்பிட்டார். கொழும்பிலுள்ள ஐ.நா.அலுவலக முக்கியஸ்தர் ஒருவர் புலிகளின் அனுதாபியாகத் தென்படுகிறார் என்று ஏற்கெனவே குற்றச்சாட்டுகள் எழுந்தமை குறிப்பிடத் தக்கது. இலங்கை வெளிவிவகார அமைச்சு பேர்மியோவை இருதடவைகள் எச்சரித்திருந்தது. ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விஜயம் செய்ய வேண்டும் என்று தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் அவர் முதற்தடவையாக எச்சரிக்கப்பட்டார். புலிகளின் மட்டு. - அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கொலை தொடர்பாக கொபி அனான் அனுதாபச் செய்தி விடுப்பதற்கு தூண்டுதலாகத் திகழ்ந்தார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் அவர் இரண்டாவது தடவையாக எச்சரிக்கப்பட்டிருந்தார். நாட்டின் உள் விவகாரங்களில் தேவையற்ற விதத்தில் தலையிட்டார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் ஏற்கெனவே கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத் தலைவர்களில் இருவர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## கொழும்புப் படுகொலைகள் எழுப்பும் புதிய சந்தேகம்

வடபகுதியைச் சேர்ந்த பிரபா அணிப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர்கள் கொழும்பில் வைத்துச் சுட்டுக்கொல்லப்படும் சம்பவங்களுக்குப் பின்னணியில் கருணா அணியினர் இருக்க முடியாது. கட்டுக்கோப்பும் இரகசியத்தைப் பேணும் தன்மையும் மிக்கவர்களெனக் கூறிக்கொள்ளும் இந்தப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள், சுட்டுக் கொல்லப் படுவதற்கு புலி இயக்கத்துக்குள் புதிதாக எழுந்திருக்கும் முரண்பாடுகள் காரணமாக இருக்கலாமென்று அரசியல் இராணுவ விமர்சகரான சந்துன் தேவப்பிரிய தெரிவிக்கிறார். யாழ்ப்பாணத்திலிருந்து சனிக்கிழமை காலை கொழும்புக்குப் புறப்பட்ட யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த இளைஞர்கள் இருவரும் கொழும்பு மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இறங்கி, செட்டியார் தெரு வழியாகச் சென்று கொண்டிருந்தபோது ஞாயிறு அதிகாலை கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்துக்கருகே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களிடம் நான்கு அடையாள அட்டைகளும் புலிகள் வழங்கிய பயண அனுமதிப்பத்திரமும் இருந்துள்ளன. இவர்களின் கொழும்பு வருகை குறித்து இயக்கத்துக்குள்ளிருந்தே தகவல் கொடுக்கப்பட்டிருக்கலாமென்றும் அவர் தெரிவித்தார். இதேபோன்று வெள்ளவத்தையில் சுட்டுக்கொல்லப்பட்ட கிளிநொச்சி பூநகரியைச் சேர்ந்த இளைஞரும் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவரென்றும் இவரின் கொழும்பு வருகை குறித்தும் இவர் கொழும்பில் தங்கியிருந்த இடம் குறித்தும் தெரிந்து கொண்டவர்கள் யாரென்றும் கேள்வி எழுப்பப்படுகிறது. இக் கொலைகளைத் தடுத்து நிறுத்துமுகமாக கொழும்பில் இராணுவ, பொலிஸ் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## பாராளுமன்றத்திலுமா காட்டுத் தர்பார்

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியா கடந்த ஏழாம் திகதி பாராளுமன்ற அமர்வுகளின்போது உரையாற்றிக் கொண்டிருக்கையில் தமிழ்த் தேசியக் கட்டமைப்பு எம்.பி.யான சிவாஜிலிங்கம் அவரை மிரட்டும் வகையில் முன்னேறிச் சென்றமை காட்டுத் தர்பார் கலாசாரத்தைப் பாராளுமன்றத்துக்குள் கொண்டுவரும் முயற்சியாவென பிரபல ஊடகவியலாளர் மோகன் சமரநாயக்கா கேள்வி எழுப்புகிறார். எதனையும் அடித்தும் அடக்கியும் தமது நோக்கங்களை மேற்கொள்ள முனைபவர்களின் முகவர்களாகச் செயற்படும் இவர்களுக்குப் பாராளுமன்ற சம்பிரதாயங்கள்பற்றி அறிவுறுத்துவதோடு இவ்வாறு பாராளுமன்றத்தை அவமதிக்கும் இவர்கள் மீது நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகிறார் சமரநாயக்க.

## கருணா அணி இளைஞர் சுட்டுக் கொலை

மதுரமேனன் என்றழைக்கப்படும் சுந்தரலிங்கம் சுரேஷ் என்ற கருணா அணி உறுப்பினர் கடந்த ஐந்தாம் திகதி வெலிக்கந்தை, ரெஜித்தனைப் பகுதியில் வைத்து பிரபா அணியினரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார். 22 வயதான இந்த இளைஞர் களுதாவளையைச் சேர்ந்தவர். இவரது இறுதிக் கிரியைகள் மட்டக்களப்பில் நடைபெற்றன.

## தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்கு உலக வங்கி உதவி

தெல்லிப்பளை புற்றுநோய் ஆஸ்பத்திரியின் ஜி.ஜி.பொன்னம்பலம் சிகிச்சைப் பிரிவுக்கு உலக வங்கி வழங்கிய பன்னிரண்டு கோடி ரூபா நிதியைக் கொண்டு மேலும் பல சிகிச்சை உபகரணங்கள் பெறப்பட்டுள்ளதோடு, சிகிச்சைப் பிரிவும் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையோடு இணைந்து தெல்லிப்பளை புற்றுநோய் ஆஸ்பத்திரி செயற்படுவதால் வட மாகாண நோயாளர்களுக்கு இது வரப்பிரசாதமாக அமையுமென்று நம்பப்படுகிறது.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 'நிர்வாகக் கட்டணம்'

இலங்கையின் வடக்கு, கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதாகக் கூறிக்கொள்ளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமென்றத் தன்னார்வத் தொண்டர் நிறுவனத்தின் கணக்கு வழக்குகள் அண்மையில் அவுஸ்திரேலிய கணக்காய்வு அதிகாரிகளின் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. அவுஸ்திரேலியாவில் நிவாரண நிதியென்ற போர்வையில் திரட்டப்படும் நிதியில் நாற்பது சதவீதமானவை நிர்வாக நிதியென்ற போர்வையில் கழிக்கப்படுவதாகக் கூறப்படுவதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் வடக்கு, கிழக்கு நிவாரண மீள்கட்டுமாணப் பணிகளுக்கான நிதியைத் தம்மிடம் நேரடியாக வழங்குமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கோரியமையும், புலிகளுடன் நேரடித் தொடர்பிருப்பதாக நம்பகமான தகவல் கிடைத்திருப்பதால் அவ்வாறு வழங்க முடியாதென அவுஸ்திரேலிய அரசு மறுப்புத் தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும். அவுஸ்திரேலியாவில் மட்டும் புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்தும், ஏனைய உதவியாளர்களிடமிருந்தும் பத்து இலட்சம் டொலர்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திரட்டியுள்ளதாகத் தெரியவருகிறது. சிட்னி முருகன் ஆலயத்தை நிர்வகிக்கும் 'சைவ மன்றம்' 85,000 டொலர்களை சிட்னி புனர்வாழ்வுக் கழகத்திடம் வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இதில் 26,00 டொலர்கள் நிர்வாகக் கட்டணமாகக் கழிக்கப்பட்டிருக்கிறது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தொண்டர் அடிப்படையிலேயே ஆட்களை வேலைக்கு அமர்த்தியுள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. சுனாமிக்குப் பிந்திய இலங்கையில் இவ்வாறு உதவிகள் கையாடப்பட்டமை குறித்து ஆய்வாளரும் கல்விமானுமான முத்துக்கிருஷ்ண சரவணானந்தன் என்பவர் எழுதிய ஆய்வுக் கட்டுரையில் புலிகளையும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தையும் சாடியுள்ளார். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியில் நிலவும் பாரிய சுனாமிப் பேரழிவு அனுதாபத்தைப் பயன்படுத்தி பெருந் தொகைப் பணத்தைச் சுருட்டிக் கொண்டுவிட்டனர் எனவும். ஐம்பது கோடி அமெரிக்க டொலர்களைப் பல்வேறு தரப்புகளிடமிருந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திரட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பாண்டிருப்பில் ஆண்டிகள்

கல்முனை, பாண்டிருப்புப் பகுதியைச் சேர்ந்த இரு கிராம சேவையாளர்கள் நஷ்டஈடு மற்றும் நிவாரணங்களைப் பெறுவதற்கான அத்தாட்சிப் பத்திரங்களைக் கொடுப்பதற்கு இலஞ்சம் கோருகிறார்களென்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். ஒருவர் பாதிக்கப்படாத தமது சொந்த பந்தங்களுக்குத் தாராளமாக உதவுவதாகவும், பாதிக்கப்பட்டவர்களை ஏசி விரட்டுவதாகவும் கூறப்படுகிறது. மற்றவரோ நஷ்டஈடு வழங்குவதென்றால் அரைப் பங்கோ, கால் பங்கோ தமக்கு ஒதுக்கித் தருமாறு கேட்கிறாராம். இவரிடமிருந்து வெளிநாடு செல்வதற்கான ஆவணங்கள் பெற வேண்டுமா? கட்டணம் இரண்டாயிரம் ரூபா ஆகும்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## பாதுகாப்புக்கு சவால் விடும் தொடரும் படுகொலைகள்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

**தொடரும்** மனிதப் படுகொலைகள் போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும், சமாதான எதிர்பார்ப்புகளையும் கேள்விக்குள்ளாக்கி வருகின்றன. மட்டக்களப்பில் தொடரும் கொலைகளும், திருகோணமலை புத்தர் சிலை விவகாரமும் எந்நேரமும் ஒரு பதற்றமான சூழலை ஏற்படுத்தலாமென்ற நிலையில் கொழும்பில் அதிகரித்து வரும் கொலைகளும் மேலும் நிலைமையை மோசமடையச் செய்துள்ளன. நாடு தழுவிய ரீதியில் 32 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை ஒருவர் படுகொலை செய்யப்படுகிறார் என்று பாதுகாப்புத் தரப்புத் தெரிவித்துள்ளது. மேஜர் முத்தலிப்பின் மீதான புலிகளின் படுகொலைக்குப் பின்னர் கொழும்பு நகரின் பாதுகாப்பை பலப்படுத்தியிருப்பதாகவும், மூன்று பாதுகாப்பு வலயங்களாகக் கொழும்பைப் பிரித்து கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகவும் அரசு அறிவித்து ஒரு சில மணி நேரத்துக்குள்ளாகவே அடுத்தடுத்து நான்கு படுகொலைகள் கொழும்பில் நடந்திருப்பதானது அரசின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏதாவது அசம்பாவிதம் நடந்த உடன் தடாலடியாக பாதுகாப்பை விஸ்தரிப்பதும், படையினரை உஷார் படுத்துவதும், ஒரு வாரத்திற்குப் பின்னர் இந்த ஏற்பாடுகள் யாவற்றையும் மறந்து, "பழைய குருடி கதவைத் திறவடி" என்ற கதையாக தொடரும் பாதுகாப்புத் தரப்பினரின் அசமந்தப்போக்குமே அசம்பாவிதங்கள் இடம்பெற வழி வகுக்கின்றன. ஒவ்வொரு கொலைச் சம்பவத்தின் போதும் பாதுகாப்பைப் பலப்படுத்தும் அரசாங்கத்தால் மட்டக்களப்பில் இடம்பெறும் கொலைகளைக் கட்டுப்படுத்த அல்லது நிறுத்த முடியாமலிருக்கின்றது என்பதை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். இதே நிலை தொடருமாயின் கொழும்பிலும் அவ்வாறான சூழல் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாத, கையாலாகத்தனமே ஏற்படும். அரசாங்கத்துக்கு இவ்வாறான நெருக்கடி நிலையை ஏற்படுத்துகின்ற முயற்சியில் புலிகள் மிக உறுதியாக இருப்பதால் கொலைகளும் தொடரவே போகின்றன.

அமெரிக்காவும், இந்தியாவும் புலிகள் சமாதானத்துக்கு வருவார்கள் என்ற நப்பாசையில் தொடரும் கொலைகள் குறித்து பராமுகமாக இருப்பது இராஜதந்திர ரீதியில் இலங்கை அரசுக்கும் - இலங்கை வாழ் மக்களுக்கும் செய்யும் துரோகமாகும். கொலை செய்யாமலோ, யுத்த பீதியை ஏற்படுத்தாமலோ, சுமுக சூழலைக் குழப்புகின்ற விதமான பரபரப்பை ஏற்படுத்தாமலோ யுத்தப்பிரியர்களால் உயிர் வாழ முடியாது. இந்த இக்கட்டான நிலையில் இலங்கை அரசு எடுக்கப்போகும் இறுதி முடிவு என்ன? அதற்கு மக்கள் காட்டப்போகும் சமிக்ஞை என்ன?

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# மீண்டும் யுத்தம் மூளுமா?

இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்து மூன்றாண்டுகள் கழிந்து விட்ட நிலையிலும் யுத்தமுமில்லை, சமாதானமுமில்லையென்ற நிலையே தொடர்ந்தும் நிலவுகிறது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் அடுத்த கட்டம் இருதரப்பையும் ஆக்கபூர்வமான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து வருமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அந்த எதிர்பார்ப்பு இழுபறி நிலையிலேயே இன்னமும் இருக்கின்றது. இரு தரப்புக்குமிடையில் பாரிய மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லையென்றபோதிலும் சமாதானத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஏட்டிக்குப் போட்டியான படுகொலைகள், ஆட்கடத்தல்கள் என்பன தொடர்ந்து இடம்பெறவே செய்கின்றன. இடைக்காலத் தீர்வையும், இறுதித் தீர்வையும் நோக்கி இரு தரப்பினரும் செல்வார்களென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தையோடு புலிகள் அதிரடியாகச் சமாதான மேசையை விட்டு வெளியேறினர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கும் மண்ணுக்குமான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் தொடர்பாக இரு தரப்பினரும் இணைந்து அமைத்த இரு கமிட்டிகளும் உதவப் போவதில்லையென்று குற்றஞ்சாட்டியே புலிகள் பின்வாங்கினர். பின்னர் இடைக்காலத் தீர்வா? இறுதித் தீர்வா? எதனை முதலில் பேசுவதென்ற இழுபறி நிலை சில காலம் நீடித்தது. இடைக்காலத் தீர்வை இடையிலே நிரந்தரமாக்கிவிட்டுப் பின்னர் இறுதித் தீர்வுக்குப் போகலாமென்பது ஒரு கட்டத்தில் புலிகளின் நிபந்தனையாக அமைந்திருந்தது. புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் தொடர்பாக நிலவிவந்த இழுபறி நிலையைப் பின்தள்ளி சமாதானப் பேச்சைத் தொடங்குவதற்கு ஓர் ஏறுபடியாக சுனாமி கடற்பேரழிவைப் பயன்படுத்த விரும்பிய இலங்கைக்கு உதவும் உலக நாடுகள் வடக்கு, கிழக்கிற்கான ஒரு பொதுக் கட்டமைப்பு யோசனையை முன்தள்ளின.

பல்வேறு இடியப்பச் சிக்கல்களுக்கு மத்தியில் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கான முன்னெடுப்புகளில் ஜனாதிபதி துணிச்சலோடு இறங்கியுள்ள போதிலும், இங்கும் பல பிரச்சினைகள் முளைவிடக் கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன. பொதுக்கட்டமைப்பு தொடர்பாகவும், இந்தியத் தலைவர்களுடன் பரஸ்பர கலந்துரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, இலங்கை விமானப்படையின் வினைத்திறனை அதிகரிப்பது சம்பந்தமாகவும் வானப்பரப்பு, கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பந்தோபஸ்து நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பேசியுள்ளார். புலிகளின் விமானப் படையணியும் கடற்புலி அணியும், இலங்கையின் இறைமைக்கும் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக அமையக்கூடுமென்ற இரு நாடுகளின் எச்சரிக்கையும், அதனை எதிர்கொள்ள இரு தரப்பும் கூட்டாக எடுக்கும் நடவடிக்கைகளும் புலிகளின் வாலை முறுக்கும் சங்கதியென்பதை மறுத்துவிட முடியாது. அத்தோடு பொதுக்கட்டமைப்பில் ஜனநாயகமும், பன்முகத்தன்மையும் பேணப்பட வேண்டுமென்று இந்தியா வலியுறுத்தியிருப்பதும் புலிகளை உலுக்குமென்பதில் ஐயமில்லை.

இந்த நிலையில்தான் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பி.யும், பௌத்தக் கட்சிகளும் தெரிவிக்கும் எதிர்ப்புகளைப் பயன்படுத்துவதற்குப் புலிகள் காத்துக் கிடப்பார்களென்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். வீழ்ந்த பக்கம் குறி சுட்டு விட்டுப் பழியை மறுதரப்பினர் மேல் போடுவது அவர்களின் வழமையான தந்திரமாகும். எனவே பொதுக்கட்டமைப்பும் ஒரு வாரோட்ட விவகாரமாக மாற்றப்படுமா? இல்லையா? என்பதையும் நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். எனவே யுத்தமொன்று ஆரம்பமாகக் கூடிய உடனடியான சூழல் நிலவுகிறதா என்பதே இங்கு முக்கியமான கேள்வியாகும்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் பிரபாகரன் நிகழ்த்திய மாவீரர் தின உரையில் யுத்தம் வெடிக்கக் கூடிய சூழ்நிலை நிலவுவதாக எச்சரித்திருந்தமையை நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது அவரது பாஷையில் சொல்வதானால் "தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வையும், சமாதானப் பேச்சையும் அரசு தொடர்ந்தும் இழுத்தடிக்குமானால் யுத்தம் வெடிப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்று அவர் எச்சரித்திருந்தார். யுத்தமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் ஒன்றில் மறுதரப்பின் குற்றங்களைப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். அல்லது மறுதரப்பின் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்துக் கொண்டு தாக்குதலை ஆரம்பிக்க வேண்டும். இதேவேளை, கடந்த டிசம்பர் மாதம் உலகின் பல நாடுகளிலுமுள்ள சுமார் 168 புலி முக்கியஸ்தர்கள் வன்னியில் கூடியதாகவும், யுத்தம் பற்றிப் பேசியதாகவும் செய்திகள் கசிந்துள்ளதை நாம் இங்கு குறிப்பிட்டுத்தானாக வேண்டும். "யுத்தத்தை நாமாக ஆரம்பிக்க மாட்டோம். ஆனால் யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால் நாம் இறுதிவரை போராடுவோம்" என்று அக் கூட்டத்தில் பிரபாகரன் சூளுரைத்திருந்தாரென்றும் செய்திகள் வெளிவந்திருந்தன.

ஏற்கனவே மூன்று ஈழ யுத்தங்களை ஆரம்பித்தவர்கள் புலிகள்தான். இந்த மூன்று யுத்தங்களுக்கான முதல் வேட்டுக்களும் கிழக்கில்தான் தீர்க்கப்பட்டன. அப்படியானால் நான்காவது ஈழயுத்தத்தை இப்போதைக்குப் புலிகள் ஆரம்பிக்கக் கூடிய சாத்தியம் தென்படுகிறதா? கிழக்கு, இப்போது கொதிகளமாக மாற்றப்பட்டிருக்கிறது. நான்காவது ஈழயுத்தமொன்று ஆரம்பிக்கப்படுமானால், அது கிழக்கிலேயே மையம் கொண்டு வெடிக்கும் என்பதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவே தென்படுகின்றன. ஆனாலும் அவை வெறும் கொதிநீர்க் குமிழிகளாக உருவாகி வெடிக்கும் என்பது, இப்போதைக்கு யுத்த வேட்டுக்கள் தீர்க்கப்படக் கூடிய சாத்தியங்கள் இல்லையென்பதும் அரசியல், இராணுவ ஆய்வாளர்களின் கருத்தாகும். கிழக்கின் கொந்தளிப்பும், குமுறலும் கொழும்புவரை நீண்டிருக்கிறது. புலிகளின் புலனாய்வுப் பிரிவு முக்கியஸ்தர் நியூட்டன் கடத்தப்பட்டமை, புலிகளுக்கெதிரான விசாரணைகளை முன்னின்று நடத்திய இன்ஸ்பெக்டர் ஜெயரட்னம் கடத்தப்பட்டமை ஆகியன ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள்தான். பிரபா அணியின் பிரசாரப் பீரங்கியாகச் செயற்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராம் கடத்திக் கொல்லப்பட்டமை, வன்னியில் ஊடுருவி பல வெற்றிகரமான தாக்குதல்களை நடத்தியவரென்று கருதப்படும் மேஜர் ஜெனரல் துவான் முத்தலிப் கொல்லப்பட்டமையும் இவற்றின் தொடர் நிகழ்வுகள்தான் கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்துக்கருகே புலிகளின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டமையும், கொழும்பு, வெள்ளவத்தை நெல்சன் வீதியில் புலி உறுப்பினரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டமையும் மேகங்கள் கறுப்பாவதைக் குறிக்கிறது. இதே போன்று புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கொலையையும் நாம் பார்க்க வேண்டும். கருணா அணியும் தாக்குதல்களை முடுக்கி விட்டிருப்பதை எரிகிற நெருப்புக்கு எண் ணெய் ஊற்றும் சங்கதியாகக் கருதலாம். இவையனைத்தையும் தூரத்து முழக்கங்களுக்கான முன்னோடி அதிர்வுகளாகவே கருத வேண்டியுள்ளது.

அரசாங்கமும் புலிகளும்கூடத் தாக்குதல் நடத்தக்கூடிய நிலையில் இல்லை. தற்காப்பு நிலையிலேயே இரு தரப்பினரும் உள்ளனர். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இந்த வெல்ல முடியாத யுத்தத்தை இனியும் நடத்துவதால் பயனில்லையென்று களைத்துப் போய் நிற்கிறது. போதாக்குறைக்கு அரசாங்கம் சமாதான முன்னெடுப்புகளை மேற்கொண்டால்தான் டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட 4.5 பில்லியன் டொலர் நிதி வழங்கப்படுமென்றும், உலக நாடுகளின் கோடிக்கணக்கான சுனாமி நிவாரண நிதி வழங்கப்படுமென்ற உறுதி மொழியும் அரசின் தலைக்கு மேலாகத் தொங்கிக்கொண்டிருக்கின்றன. யுத்தமொன்றைத் தவிர்ப்பதில் இந்தியா உட்படச் சர்வதேச நாடுகள் காட்டும் அக்கறையும் அரசுக்கு அழுத்தம் கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. அதுமட்டுமல்ல, ஆயுதப்படைகளிலிருந்து பல்லாயிரக் கணக்கானோர் ஓடிப்போய்விட்டமையும், அரசுக்கும் ஆயுதப்படைக்கும் ஒரு பின்னடைவே. ஆனால் தூரத்தில் யத்தமேற்படக் கூடிய சாத்தியத்தை எதிர்கொண்டு முன் தயாரிப்பு வேலைகளை அரசு எடுத்து வருகிறதென்பதையும் மறுத்துவிட முடியாது. உத்தேச இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம், விமானப்படையின் வினைத் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆகியவற்றை நாம் உதாரணத்துக்குக் குறிப்பிடலாம். தேசிய மட்டத்திலும்கூட யுத்தத்துக்கெதிரான அபிப்பிராயமே வலுவாக இருப்பதும், மிகக் கூடுதலான மக்கள், யுத்தத்தை விரும்பவில்லையென்பதும் அரசின் சமாதானப் போக்குக்கு அழுத்தம் கொடுக்கிறது. அத்துடன் இனப்பிரச்சினையை பெரிதாக்கிய காரணிகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் கையாள்வதற்கே ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கமும் விரும்புமென்பதும் புதிய யோகந்தான்.

மறுபுறத்தில் புலிகள் இயக்கமும் உடனடியாக யுத்தத்தை ஆரம்பிக்க முடியாத நிலையிலேயே இருக்கிறது. பல தேசிய, சர்வதேசக் காரணிகளால் புலிகள் இயக்கமும் தாக்குதல் நிலையிலில்லாமல் தற்காப்பு நிலையிலேயே இருக்க வேண்டிய சூழ்நிலை நிலவுகிறது. கடந்த வருடம் மார்ச் மாதம் உச்சமடைந்த கருணா - பிரபா அணிப் பிளவு அதற்கு முக்கிய காரணமாகும். பிரபாகரனாலேயே சிறந்த தளபதியென வர்ணிக்கப்பட்ட கருணா அம்மான், கிழக்கில் சுமார் ஆறாயிரம் பேரைக் கொண்ட படையணிகளைக் கலைத்து விட்டமை இதற்கு முக்கிய காரணமாகும். கருணாவால் விடுவிக்கப்பட்ட சிறுவர்களை மீண்டும் புலிகள் பலாத்காரமாகத் தமது படையணிகளில் சேர்த்துக் கொண்டாலும்கூட, கருணா காலத்து நிலைமைக்கு கிழக்கைக் கட்டியெழுப்புவது கடினமாகும். கிழக்கில் பிரபா அணிப் புலிகளின் செல்வாக்கு வீழ்ச்சி கண்டிருப்பதாலும் யுத்தமொன்று ஆரம்பிக்கப்பட்டால் படையினர் கருணா தரப்பினரைப் பயன்படுத்துவார்களென்பது நிச்சயமென்பதாலும் பலவீனமான நிலையில் யுத்தத்தைத் தொடங்குவதற்கு புலிகளொன்றும் முட்டாள்களல்லர். யுத்தம் தொடங்கப்பட்டால், கிழக்கில் புலிகள் பெரும் அழிவைச் சந்திக்க வேண்டியிருக்கும். அத்துடன் சர்வதேச அழுத்தமும், இந்தியாவின் நெற்றிக்கண் பார்வையும் புலிகளை 'அடக்கி வாசிக்க' வைக்கிறது. அவ்வப்போது யுத்த மிரட்டல்களைப் புலிகள் விடுத்தாலும் யுத்தத்துக்குப் போகமாட்டார்கள். சமாதானத் தீர்வுக்கும் வரமாட்டார்கள். ஒரு நீண்ட கால நோக்கில் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்காக காலம் கடத்தும் தந்திரோபாயத்தையே அவர்கள் கடைப்பிடிப்பார்கள். பொதுக்கட்டமைப்புப் போன்றவற்றில் தமக்கும் சமபங்கு கேட்பதன் மூலம் நிதிகளைப் பெற்று ஆயுதங்களையும் ஆட்பலங்களையும் பெற அவர்கள் முயற்சிக்கலாம். அல்லது முடிந்தால் சமாதான வழிமுறைகளுக்கூடாகத் தமது இலக்குகளை அடைய முயற்சிக்கவும் கூடும்.

> **அரசும் புலிகளும் தாக்கும் நிலையில் இல்லை. தற்காப்பு நிலையிலேயே இருதரப்பும் உள்ளனர் இப்போதைக்கு யுத்தம் வெடிக்காது ஆனால் தூரத்து முழக்கங்களுக்கான அதிர்வேட்டுக்கள் இப்போதும் கேட்கலாம்.**

புலிகளைப் பொறுத்தவரை தென்னிலங்கையில் ஆட்சி அதிகாரங்களை மாற்றுவதற்கு தேர்தல் சமயங்களில் தாக்குதல்களை நடத்துவது வழக்கம். தமக்குச் சாதகமான ஆட்சியை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதே அவர்களின் நோக்கமாக இருந்து வருகிறது. ஜனாதிபதி பிரேமதாசாவோடு பேச்சுவார்த்தை நடத்தி, ஆயுத உதவி, நிதியுதவி ஆகியனவற்றைப் பெற்று இந்தியப் படையை இங்கிருந்து வெளியேற்ற பிரேமதாசாவுக்கு உதவிவிட்டுப் பின்னர் அவரையே கொன்றார்கள். காமினி திசாநாயக்கா உட்படப் பல ஐ.தே.க. தலைவர்களைத் தொட்டலங்கா குண்டு வெடிப்பில் கொன்று ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுத்தனர். இதேபோலச் சந்திரிகாவையும் கொழும்பு மாநகரசபைக் குண்டுவெடிப்பில் கொலை செய்ய அவர்கள் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இதே பாணியிலான சில தாக்குதல்களைப் புலிகள் நடத்தக் கூடும்.

இன்றைய சூழ்நிலையில் கொழும்பில் ஓர் ஆட்சி மாற்றத்தையே புலிகள் பெரிதும் விரும்புகிறார்கள். புலிகளோடு பேச்சுவார்த்தையை ஆரம்பித்த ரணில் விக்கிரமசிங்க, புலிகளுக்குப் பல சலுகைகளை வழங்கினார். உதாரணத்துக்கு ஆயுதங்களின்றிப் புலி உறுப்பினர்கள் அரசியல் வேலைகளுக்காக அரசு கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடமாடு வதற்கும், இராணுவ ஹெலிகொப்டர்களைப் புலிகள் பயன்படுத்துவதற்கும் சலுகைகள் வழங்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். இராணுவமோ, பொலிஸோ ஆயுதங்களின்றிக்கூட இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குச் செல்ல முடியாது. இது ரணில் வழங்கிய சலுகைகள். யுத்த நிறுத்தத்தை முறித்துவிடக் கூடாதென்பதற்காக அவற்றைச் சந்திரிகா அரசும் கடைப்பிடிக்கிறது. சுதந்திரக் கட்சி அரசியல் தலைமையோடு நேரு - எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா காலத்திலிருந்து இந்தியத் தலைமைகள் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பும் புலிகளுக்குப் பாரிய அச்சுறுத்தலாக இருக்கிறது. சிறிமாவோ - இந்திரா காலத்தில் தீர்க்கப்பட்ட கச்சதீவுப் பிரச்சினை போன்றவற்றையும் குறிப்பிடலாம். இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தங்களுக்கான ஆரம்ப முன்முயற்சிகளை மிலிந்த மொரகொட, ரணில் விக்கிரமசிங்க போன்றோர் மேற்கொண்டாலும், அதனைத் தொடர்ந்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்படக்கூடிய கடைசிக் கட்டம்வரை கொண்டு வந்தவர் சந்திரிகா என்பதும் இங்கு குறிப்பிடக்கூடியது. சோனியாவின் முற்போக்குக் கூட்டணி அரசில் (மத்திய அரசு) தமிழகக் கட்சிகள் பல இருப்பதால் இந்த ஒப்பந்தம் இப்போதைக்குத் தாமதப்படுத்தப்பட்டாலும் மாற்று வழிகளில் இலங்கையின் கடற்பரப்புக்கும், வான்பரப்புக்கும் இந்தியா உதவுவதும், உதவ முன்வந்திருப்பதும் புலி எதிர்ப்பு நடவடிக்கைகள்தானே. ஐ.தே.க., இந்தியாவைவிடக் கூடியளவு மேற்குலகச் சார்பானதென்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மேற்கு நாடுகளை விட கூடியளவு இந்தியச் சார்பு கொண்டதென்பதும் இங்கு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படக் கூடியவை.

சிங்களக் கட்சிகளோ, தேசியக் கட்சிகளோ இந்திய விஸ்தரிப்புவாதமென்ற பதத்தையே மறந்து போய்விட்டன. ஆனால் புலிகளோ இந்தியாபற்றியோ, விஸ்தரிப்பு வாதம்பற்றியோ சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் அந்தரப்படுகின்றனர். வடக்கில் 45 ஆயிரம் இலங்கைப் படையினரைப் புலிகள் சுற்றி வளைத்துவிட்டார்கள் என்ற செய்தி வந்தபோது நேரடியாகத் தலையிடாமல் நிலைமையைக் கையாள இந்தியா முன்வந்தமை புலிகளின் திட்டங்களுக்கு 'வாய்க்கரிசி' போட்டமையும் புலிகளுக்கு நினைவிருக்கும். அத்துடன் இலங்கையின் இறைமையும், பிரதேச ஒருமைப்பாடும், இன சௌஜன்யமும் பாதிக்கப்பட அனுமதிக்க மாட்டோமென்ற இந்தியாவின் எச்சரிக்கை வேட்டும் புலிகளின் காதுகளில் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது. உலகின் நான்காவது பெரிய படையைக் கொண்டிருந்த இந்தியாவோடு மோதி வென்றவர்களென்று புலிகள் பீத்திக்கட்டியமையும் காதுகளில் விழத்தான் செய்கிறது. இந்தியப் படைகளுக்கு உரிய இடத்திலிருந்து உத்தரவு கிடைத்திருந்தால் புலிகளை வேரோடும் வேரடி மண்ணோடும் களையெடுத்திருப்பார்கள். ஜெயவர்த்தனாவுக்குப் பின்னர் ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்ட பிரேமதாசா, இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டையெடுத்து இந்தியப் படைகளை வெளியேற்றக் கோரியதோடு, இந்தப் பொதுநோக்கத்துக்காக புலிகளோடு இணைந்து செயற்பட்டமையும், இந்தியாவுக்கு நெருக்கடியாக அமைந்தது. ஆனால் இப்போது எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுக்கப் போவதில்லை. இந்தியாவோடு யுத்தத்திலீடுபட்ட பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளும் இந்தியாவோடு உறவுகளைச் சீர் செய்யும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. இவையெல்லாம் புலிகளை 'அம்போ' நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளன.

இத்தகைய சூழ்நிலைகளில் நான்காவது ஈழ யுத்தத்தைப் புலிகள் உடனடியாக ஆரம்பிக்கமாட்டார்கள். ஆனாலும் யுத்த மிரட்டல் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டேயிருப்பார்கள். யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலிலிருக்கும்போதே யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடுவதுபோல், தம்மைச் சமாதானப் போராளிகளாகக் காட்டிக் கொண்டே சமாதானத்துக்கு விரோதமாக மாற்றுத் தரப்பினரைச் சுட்டுத் தள்ளுவது போல, யுத்தத்தை உடனடியாக ஆரம்பிக்காவிட்டாலும் யுத்தத்துக்கான முன்தயாரிப்பு மிரட்டல் வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டேயிருப்பார்கள்.

இலங்கை அரசாங்கம் இந்தியாவோடு இணைந்து புலிகளுக்குக் கிடுக்குப்பிடி போட்டிருப்பதால், அதனைத் தளர்த்துவதற்கான உத்திகளில் புலிகள் ஈடுபடுவார்கள் என்பது உண்மையே.

தற்போது பெரும் அரசியல் நெருக்கடிக்குள் சிக்கியுள்ள அரசாங்கத்துக்கு தலையிடி கொடுப்பதற்காகச் சில குண்டு வெடிப்புக்களை அவர்கள் மேற்கொள்ளக் கூடிய சாத்தியங்கள் நிலவுகின்றனவென்று கூறப்படுவதை வெறும் பூச்சாண்டியெனத் தட்டிக் கழித்துவிட முடியாது. இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணமும், லெப்டினன்ட் கேர்ணல் துவான் முத்தலிப்பும் கொலை செய்யப்பட்ட பின்னர் படுகொலைப் போட்டி புதிய பரிமாணத்தை எடுத்துள்ளது. இதன் நீண்ட வளர்ச்சிப் போக்கே அடுத்த கட்டத்தை நிச்சயமாகத் தீர்மானிக்கும். அது உடனடி யுத்தமல்ல, நான்காவது ஈழயுத்தமுமல்ல.

# ஈ.பி.டி.பி.யின் அரசியலும் கிழக்கு மாகாணமும்

*சென்ற வாரத் தொடர்ச்சி......*

கிழக்கு மாகாண மக்களின் வாழ்வில் புலிகள் ஏற்படுத்திய காயங்கள் - வடுக்கள் அதிகமானவையாகும். வடக்கை விடவும் கிழக்கு மாகாணத்தில் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட, கடத்தப்பட்டவர்களின் மனைவிமார், பிள்ளைகள், பெற்றோர்கள் அநாதரவாகிப் போயுள்ளனர். ஏனைய மாவட்டங்களை விடவும் கூடுதலான விதவைகளைக் கொண்டிருக்கும் மாவட்டமாக மட்டக்களப்பு உள்ளது. இந்தச் சாதனைகளுக்குச் சொந்தக்காரர்கள் புலிகளாவர். இதில் துரதிர்ஷ்டவசம் என்னவென்றால் இக்கொலைகளானது இன்னும் ஈவு இரக்கமின்றித் தொடர்வதுதான். கிழக்கு மாகாணத்தின் ஏனைய பிரதான மாவட்டங்களான திருகோணமலையிலும், அம்பாறையிலும் அவ்வப்போது கொலைகள் இடம்பெறத்தான் செய்கின்றன. கருணாவின் பிரிவுக்குப் பின்னர் ஒட்டுமொத்த மட்டக்களப்பு மக்களும் பிரபாகரனுக்கு எதிரிகளாக அல்லது துரோகிகளாகத் தெரிகின்றார்கள். கருணா என்னதான் நியாயம் சொன்னாலும் தனது மக்களைவிட்டு ஓடியதும், அந்த மக்களை அன்றாடம் பலிகொடுத்துக் கொண்டிருப்பதும் எந்த வகையிலும் நியாயமாகாது. 'குட்டக்குட்ட குனிபவனும் மடையன் குனியக்குனியன் குட்டுபவனும் மடையன்' என்று சொல்வதைப் போல் புலிகளும் மக்களும் என்று நினைக்கையில் வெட்கித் தலை குனிய வைக்கிறது. புலிகள் தமது கொலைகளை நிறுத்தப்போவதில்லை. ஆகவே மக்கள் இதற்கு எதிராக கிளர்ந்து எழ வேண்டும். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் கருணாவும் - சகாக்களும் அன்றாடம் பலியாவதா இல்லை. ஒரு முடிவுக்கு வருவதா என்பதை சிந்திக்க வேண்டிய கடைசிக் கட்டம் வந்துவிட்டது. சொந்த மாவட்டத்தில் சொந்த மக்களுக்குள் வன்னிப் புலிகளுக்குப் பயந்து மறைந்து வாழ்க்கை நடத்துவது எத்தனை நாளைக்கு என்பதை தமக்குள் கேட்டுக் கொள்வதும் அவசியமாகியுள்ளது.

புலிகளின் கிழக்கு மாகாணம் குறித்த அணுகுமுறை இவ்வாறு இருக்க ஜனநாயக வழிமுறையில் நம்பிக்கை கொண்டு சாத்தியமான அணுகுமுறையில் பிரச்சினைகளை கையாள்வதாகவும், நிரந்தரத்தீர்வுக்கு உழைக்கும் அதேவேளை மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் உடனடித்தீர்வு காண்பதுமே தமது அரசியல் பணியாகும் என தெரிவிக்கும் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியினர், எவ்வாறு கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளை பார்க்கிறார்கள், அக்கட்சியின் தலைவரான டக்ளஸ் தேவானந்தாவும் வடக்கைச் சேர்ந்தவர் என்பதால் அவர் கிழக்கு மாகாண மக்கள் மீது தனது செயற்பாடுகளை எவ்வாறு மேற்கொள்கிறார் என்பதைப் பற்றியும் ஆராய்ந்து பார்ப்பதும் இன்றைய தேவையாகும்.

1990ஆம் ஆண்டு ஈ.பி.டி.பி. இலங்கையில் தனது அரசியல் பணியை ஆரம்பித்திருந்தது. அப்போது வடக்கு கிழக்கின் சகல மாவட்டங்களிலும் பரவலாக தமது அலுவலகங்களை திறக்காது விட்டாலும், படிப்படியாக திருமலை, மட்டக்களப்பு - அம்பாறை என்று தமது கிளைக்காரியாலயங்களை விரிவுபடுத்தியது.

1994ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்ட ஈ.பி.டி.பி.யினர் ஒன்பது பிரதிநிதிகளைப் பெற்றனர். ஆனாலும் ஈ.பி.டி.பி.யினர் கொண்டிருந்த பரந்த வேலைத்திட்டத்தின் காரணமாக மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட அழகையா இராசமாணிக்கம் என்பவரை யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினராக்கி, அவரை மட்டக்களப்பு மக்களுக்கு பணியாற்றும் வேலைத்திட்டத்தை வகுத்தது. அதேபோல திருமலை மாவட்டத்துக்கு வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த சந்திரகுமார் என்பவரை பாராளுமன்ற உறுப்பினராக்கி திருமலை வாழ் மக்களின் தேவைகளைக் கவனித்துக் கொள்வதற்காக நியமித்தது. இம்முறையானது போராட்டத்தின் துன்பகரமான அனுபவங்களோடு வாழ்ந்து கொண்டிருந்த வடக்கு கிழக்கு மக்களுக்கு ஒரு வழிகாட்டும் நடவடிக்கையாக அமைந்தது. அதாவது யாழ்ப்பாணத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கிழக்கு மாகாணத்தில் பணிபுரிந்தனர்.

தமிழர் அரசியலில் இது ஒரு திருப்புமுனையாக அமைந்தது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை 1989ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை தமிழ் மக்கள் கொண்டிருக்கவில்லை. 1994ஆம் ஆண்டு தேர்தலின் போதுகூட-அதில் யாரும் போட்டியிடக்கூடாது என்றும் போட்டியிடுபவர்களும், வாக்களிப்பவர்களும் துரோகிகளாக கருதப்படுபவர்கள் என்றும் புலிகள் எச்சரிக்கை விடுத்திருந்தபோதும், ஈ.பி.டி.பி.யினர் துணிந்து போட்டியிட்டு தமக்குக் கிடைத்த 9 பிரதிநிதித்துவத்தையும் பகிர்ந்தனர் என்பது வரலாறு.

## திருகோணமலையில் ஈ.பி.டி.பி.யின் அரசியல் பணி

யுத்தகாலத்தில் மக்களுக்கும் அரசுக்கும், அரச படையினருக்கும் இடையில் தொடர்பாடல்களை புலிகள் துண்டித்திருந்தனர். அவற்றை சீர்படுத்துவதும் அரசிடமிருந்து மக்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான சலுகைகளை, தீர்வுகளை ஈ.பி.டி.பி. பெற்றுக்கொடுத்தது.

அதேவேளை இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்று அகதிகளாக நாடு திரும்பிய மக்களுக்கும், UNHCR அகதி முகாமிலும் மற்றும் மூதூர், தென்னைமர வாடி, திரியாய் போன்ற பகுதிகளிலும் இருந்துஇடம் பெயர்ந்த மக்களுக்கு நிரந்தர குடியேற்றத்திட்டங்களை ஈ.பி.டி.பி.யினர் ஏற்படுத்தினர். இதன் பயனாக தேவா நகர், ஆனந்தபுரி, நித்தியபுரி ஆகிய குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இது தவிர, லிங்கநகர் காணிகள் இராணுவத்தின் பயிற்சிக்காக அபகரிக்கப்பட எடுக்கப்பட்ட முயற்சிகளை ஈ.பி.டி.பி. முழுமூச்சாக எதிர்த்தது மட்டுமல்லாது, அக்காணிகள் தமிழ் மக்களுக்கே கிடைக்க வேண்டும் என்பதற்காக வழக்குத்தாக்கலையும் செய்து போராடியுள்ளது. இதேபோல் 1999ஆம் ஆண்டு கப்பல்துறை - பாலம் போட்டாறு ஆகிய கிராமங்களுக்கு இடைப்பட்ட காணிகளில்

> **கிழக்கு மாகாணத்தில் இத்தனை பணிகளைச் செய்வதற்காக எந்தச்சந்தர்ப்பத்திலும் மக்களை பலாத்காரம் பண்ணி வீதிக்கு இறக்கவோ இரத்தம் சிந்தவோ தான் இடமளிக்கவில்லையென்றும், பிரச்சினைகளை அந்தந்த காலப்பகுதியில் மக்கள் தமக்கு அளித்த வாக்குகளின் பலத்தில் நின்று சாத்தியமான முறையில் அணுகியதாகவும் கூறினார்**

சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டபோது அதற்கு எதிராக போராடிய ஈ.பி.டி.பி.யினர் ஒரு மணி நேரத்துக்குள் அக்குடியேற்றங்களை தடுத்து நிறுத்தியது இங்கு குறிப்பிடத்தக்கது. இதுதவிர, சுமார் 48 பாலர் பாடசாலைகளை அமைத்ததோடு மட்டுமல்லாமல் அவற்றுக்கு வேதனங்களையும் வழங்கியுள்ளனர். கிண்ணியாவில் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையே புலிகள் முறுகலை தோற்றுவித்தபோது இரு சமூகங்களுக்குமிடையே சமரசத்தை ஏற்படுத்துவதில் ஈ.பி.டி.பி.யினர் பிரதான பங்கை வகித்துள்ளனர். இவ் வேலைத்திட்டங்களின் பலனாக ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான விஜயன், பாண்டியன், குஞ்சன் ஆகியோரைப் புலிகள் சுட்டுக் கொன்றுள்ளனர் என்பதேயாகும். இவை தவிர வேலைவாய்ப்புகள், கோவில் புனரமைப்புகள், தொழில் முயற்சிகளுக்கு உதவுதல் என திருமலையில் ஈ.பி.டி.பி.யினரின் அரசியல் பணியின் பட்டியல் நீளமானது.

## மட்டக்களப்பில் ஈ.பி.டி.பி.யினரின் அரசியல் பணி

1994ஆம் ஆண்டு ஒரு பாராளுமன்ற உறுப்பினரை வழங்கியது போக பெரிய கல்லாறு சந்தைக் கட்டிடம் கட்டிக் கொடுக்கப்பட்டது. மகிளூர் வாசிகசாலை, செட்டிபாளையம் நெசவுச்சாலை என்பன ஈ.பி.டி.பி.யினரால் கட்டப்பட்டன. இதுதவிர, வைத்தியசாலை, பாடசாலை ஆகியவற்றுக்கு சிற்றூழியர்களுக்கான நியமனங்கள் வழங்கியது, சமுர்த்தி நியமனம் வழங்கியது, பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர் நியமனம், தொண்டர் ஆசிரியர் நியமனமும், வேதனமும், அபிவிருத்தித் தொண்டர் நியமனமும், வேதனமும், சுகாதார சிற்றூழியர் நியமனம், வங்கி நியமனங்கள் என்று ஏகப்பட்ட தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

கோவில்கள், பள்ளிக்கூடங்களுக்கு புனருத்தாரணத்துக்கான நிதி ஒதுக்கீடுகளைச் செய்தது. இவைதவிர இன்றுவரையும் சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சிப்பதும், அதற்காக குரல் கொடுப்பதுமாக ஈ.பி.டி.பி.யினரின் அரசியல் பணி தொடர்கிறது. இதற்காக மட்டக்களப்பில் ஈ.பி.டி.பி.யினரின் கணிசமான உறுப்பினர்களை புலிகள் சுட்டுக் கொன்றுள்ளனர். விஜி, நிவாஸ், நவம் ஆகியோரை புலிகள் கடத்திச் சென்றனர். இதுவரை என்ன நடந்தது என்று தெரியவில்லை. சதீஸ்கரன், தயா, நந்தன் சுடப்பட்டார்கள். மணாளன் என்பவர் கடத்தப்பட்டார். தாசன், ரஞ்சித் ஆகியோர் ஈ.பி.டி.பி.யின் ஆதரவாளர்கள் என்பதற்காக சுடப்பட்டார்கள் இதுதவிர வரதன், வினோத் ஆகியோரும் புலிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இன்றுவரையும் கூட ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மீதான தாக்குதல்களும், கொலை மிரட்டல்களும் தொடரவே செய்கின்றன.

## அம்பாறையில் ஈ.பி.டி.பி.யின் அரசியல் பணி

1994ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் மார்க்கண்டு குணசேகரம் (சங்கரை) யாழ்ப்பாண பிரதிநிதித்துவத்துக்கு நியமித்து அம்பாறையில் அரசியல் பணிகளை செய்தனர். அந்தக் காலப்பகுதியில் திலாக்கேணியில் காணிகளை வாங்கி தமிழ் குடியேற்றங்களை அமைப்பதற்கான திட்டத்தைக் கொண்டு செயலாற்றிய போதும், புலிகளால் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல், சில அரசியல் தலையீடுகள், அரசியல் மாற்றம் காரணமாக அது கை கூடவில்லை. அதுபோக 2000ஆம் ஆண்டு மார்க்கண்டு குணசேகரம் அவர்களை சுயேச்சையாக நிறுத்தி அம்பாறை மக்களுக்கு தமிழ் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொடுத்தது. அதற்கூடாக சமுர்த்தி தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம், வேதனம்,அபிவிருத்தித் தொண்டர் நியமனமும் வேதனமும் வழங்கப்பட்டது. தவிரவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தகரம், கதிரைகள், தையல் இயந்திரம், கணனிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வள்ளங்கள், அலுமாரிகள் என்று பொருட்களை தாராளமாகவே வழங்கியது. அத்தோடு நின்று விடாமல் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து ஈ.பி.டி.பி.யினர் தொடர்ந்தும் பணியாற்றியுள்ளனர்.

இப்பணிகளானது சுனாமி தாக்கத்தின் பின்பும் மிக மும்முரமாக முன்னெடுக்கப்பட்டதை உணரமுடிகிறது. இதற்காக புலிகளினால் வாகீசன், ஜெகதீஸ், நிமால், கமலன், சுரேஸ் என்ற ஈ.பி.டி.பி.யின் முக்கிய உறுப்பினர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஈ.பி.டி.பி.யினர் கிழக்கு மாகாணத்தில் செய்த பணிகள் இரண்டு வகைப்படுகின்றன. முதலாவதாக சில கொடுப்பனவுகளையும் பல உதவிகளையும் தமது சொந்தப் பணத்திலிருந்து வழங்கியபோதும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போதும், அமைச்சராக இருந்தபோதும் குறிப்பாக முன்னர் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக இருந்தபோதும் அவரின் கடுமையான முயற்சி காரணமாக கிழக்கு மாகாணத்திலும் கூடுமான பணியைச் செய்தார். அதற்கு மக்களே சாட்சி

அலசுவது
**- மதியூகி -**


என்று அடிக்கடி சொல்வார். இப்போது கொண்டிருக்கும் அமைச்சுப் பொறுப்பைக் கொண்டு பெரியளவில் எதுவும் செய்யமுடியாத போதும் இந்து சமய அமைச்சைக் கொண்டு நாடு தழுவிய ரீதியில் கோயில் புனரமைப்பு, புதிய நிர்மாணங்கள், அறநெறிப்பாடசாலைகள், கலாசார மண்டபங்கள் அமைத்தல், குரு குலங்களை அமைத்தல் என்று தன்னாலான சகல வழிகளிலும் கிழக்கு மக்களுக்கு சேவையாற்றி வருகிறார்.

இதுபற்றி அவரிடம் ஒரு தடவை கேட்ட போது, கிழக்கு மாகாணத்திலிருந்து கணிசமான பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைக்குமாக இருந்தால் இதைவிடவும் பெரும்பணியாற்ற முடியும் என்று தெரிவிக்கும் அவர், மேற்படி கிழக்கு மாகாணத்தில் இத்தனை பணிகளைச் செய்வதற்காக எந்தச்சந்தர்ப்பத்திலும் மக்களை பலாத்காரம் பண்ணி வீதிக்கு இறக்கவோ இரத்தம் சிந்தவோ தான் இடமளிக்கவில்லையென்றும், பிரச்சினைகளை அந்தந்த காலப்பகுதியில் மக்கள் தமக்கு அளித்த வாக்குகளின் பலத்தில் நின்று சாத்தியமான முறையில் அணுகியதாகவும் கூறினார்.

ஆகவே, பிரபாகரன் காட்டும் பாதைக்கும் - டக்ளஸ் தேவானந்தா காட்டும் பாதைக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை இனியாவது மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டு செயலாற்ற முன்வரவேண்டும் என்பதைத்தான் கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களிடம் உரிமையுடனான வேண்டுகோளாகவே விடுப்பதாகத் தெரிவித்தார். எது சரி எது பிழை என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை மக்களிடமே விட்டுவிடுவது பொருத்தமானதாகும். ◎

---

# அதிரடி அய்யாத்துரை



**தலைநகரில** கொம்பு யூட்டர் சென்ரர் நடத்திறவை கொஞ்சம் கவனமா இருங்கோ. காகத்தின்ர கூட்டிலை குயில் குஞ்சு பொரிக்கிறமாதிரி படிச்சுப் போட்டு கொம்புயூட்டர் படிக்கிற சாதாரண பிள்ளைய ளோடை ரெண்டெழுத்தாரும் படிக்கிற சாட்டிலை தலைநகரிலை திரியினம் எண்டு தகவல்கள் தாவித்திரியுது. புதுமுகங்களை உள்வாங்கேக்க கொஞ்சம் அவதானமா இருங்கோ. பிறகு உங்கை படிச்சுக் கொண்டே உளவு பார்ப்பினம். அனுமதி கிடைச்சவுடன போட்டுத்தள்ளுவினம். பிறகு கொம்பு யூட்டர் படிப்பினம் எண்டதுதானாம் பொட்டருடைய திட்டம். இனி பொழுது போக்கா படிக்க வாறவையில ஒரு கண்ணை வைச்சுக் கொள்ளுங்கோ.

**அண்டை** நாட்டுக்கு அதிகார அம்மணி போய் இருக்கேக்க அண்டை நாட்டுக்காரர் ரொம்பக் கவலை தெரிவிச்சினமாம். ரெண்டெழுத்தார் விமானம் வச்சிருக்கினம் எண்டதாலை தானாம். என்ன செய்யிறது. வளரக் கூடாதது வளரும் வரைக்கும் சும்மா வாய்ச் சவடால் அடிச்சுக் கொண்டு இருப்பினம். வளர்ந்தாப் பிறகு குய்யோ முறையோ எண்டு கத்துவினம். அது மட்டுமே, பொதுவான கட்டமைப்பைப் பற்றி கதைக்கேக்க ரெண்டெழுத்தாரைக் குறிப்பிட்டுச் சொல்லாட்டியும் உங்கட பிரண்ட்டை உள்வாங்குங்கோ எண்டு சொல்லிச்சினமாம். அதிகார அம்மணியின்ர பிரண்ட் யார் எண்டது தெரியுந்தானே? அதுதானுங்கோ வீணைக் கட்சிக் காரரின்ர தலைவர் தேவமான வரைத்தான் அம்மணியின்ர பிரண்ட் எண்டிச்சினமாம். உவர் பார்ளிமெண்டுக்குத் தெரிவானவுடன, அந்தப் பிரதிநிதித்துவத் தையும் தங்கட எண்டு அம்மணி கணக்குப் பார்த்தாவெல்லோ, அது தானாக்கும் அவை உப்பிடிச் சொல்லியிருக் கினம்.

**கோயிலிலை** உண்டியல் வச்சுப் பாத்திருப்பியள், டொயிலட்டிலை உண்டியல் வச்சுப் பாத்திருக்கிறியளோ? பார்க்க வேணுமெண்டால் வாங்கோ முகமாலைக்கு. படைத்தரப்பு கட்டி வச்சிருக்கிற டொயிலட் ஃபிரீ. ஆனால் ரெண்டெழுத்தார் கட்டி வச்சிருக்கிறதுக்குப் போனால், வாசலில ஒரு உண்டியல் கட்டி விட்டிருக்கினம். குத்தியைப் போட்டுட்டு டொயிலட்டை யூஸ் பண்ணுங்கோ எண்டதுதான் அர்த்தமாம். வெள்ளைக்காரனுக்குக்கூட வராத ஐடியா வெல்லாம் எங்கட பெடியளுக்கு எங்க இருந்துதான் வருகுதோ எண்டு சனம் கையில வாய் வைக்குதுகள். சொறி.... சொறி.... வாயில கை வைக்குதுகள். போகிற போக்கைப் பார்த்தால் ரெண்டெழுத்தாரின்ர கட்டுப்பாட்டு பூமியில நடக்கவும் வரிகட்ட வேணும் போல இருக்கு. போராட்டம் போகிற போக்கைப் பார்த்து பொக்கை வாய் திறக்காமை சிரியுங்கோ.

**புரிந்துணர்வு** ஒப்பந்தம் அமைதியைக் கொண்டுவராட்டிலும் கொஞ்சப் பெடியளின்ர வாழ்க்கையில விடியலைக் கொண்டு வந்திருக்குதுங்கோ. ரெண்டெழுத்தாரின்ர இயக்கத்தில இருந்து கொழும்புக்கு உளவு பார்க்க அனுப்பி வச்சதில இருபத்தொரு பேர் வெளிநாடுகளுக்குப் பறந்திட்டினமாம். இப்ப இயக்கத்தில இருக்கிறவையிலையும் கணிசமான பெடியள் கல்யாணம் கட்டிப் போட்டினமாம். கொஞ்சப் பேர் கல்யாண அப்பிளிக்கேஷன் போட்டிருக்கினமாம். அவ யின்ர தலைவருக்கு ஒரே தலையிடியாம். அவனைச் சுடுங்கோ, இவனைச் சுடுங்கோ எண்டு ஓடர் போட்டு சும்மா ஒரு பரபரப்பைக் காட்டினாச் சரி பெடியள் பெட்டிப்பாம்பா கிடப்பினம் எண்டு போட்ட கணக்குத் தப்பிப் போச்சுதாம். பெடியள் லௌகீகத்தில லயிச் சுப் போட்டினமாம். இவ்வளவு காலமும் போராடினவங்களை இனியாவது வாழ விட்டால் நல்லதுதான். அவர் என்ன முடிவு பண்ணியிருக்கிறாரோ?

**மீன்பாடும்** நகரில இருந்து வன்னிக்கு அழைக்கப்பட்ட முக்கியமான முப்பத்திநாலு பேரை தலைமை திரும்பி அனுப்ப மறுத்துப் போட்டுதாம். அவைக்கு சந்தேகம் வலுக் கவும் கேட்டிச்சினமாம், ஏன் தலைவர் எங்களைப் போக விடுகிறாரில்லையெண்டு. அவைக்குத் தெரியாதுங்கோ. இவையை மீன்பாடும் நாட்டுக்கு அனுப்பினால், அவை அம்மானுக்குச் சப்போர்ட் பண்ணிப் போடுவினம் எண்ட காரணத்தாலைதானாம் தலை, அவைக்குத் தாயகம் திரும்பத் தடா போட்டிருக்கெண்டது.

**சு.ப.** சுற்றித்திரிஞ்ச நாடுகளுக்கு சுற்றுப்பயணம் போயிருக்கிறார் சங்கரியார். என்ன திடீரெண்டு உலகம் சுற்றித் திரியிறியள் எண்டு கேட்டவைக்கு சங்கரியார் சொன்ன பதில் யோசிக்க வைக்குதுங்கோ. ரெண்டெழுத்தார் இல்லாததையும் பொல்லா ததையும் சொல்லித் திரியினம். அதனால தான் உண்மையைச் சொல்லப் போனனான் எண்டு பெரும் போடாய்ப் போடுறாராம். கடுங் குளிருக்கையும் மனிசன் கொண்ட லட்சியத்தில கரிசனையா இருக்கிறாராம். முதுகெலும்பு உள்ள மனிசனுக்கு குளிரென்ன, வெயிலென்ன எண்டு கேக்கிறார் அவரின்ர பழைய சகா ஒருவர். என்ன செய்யிறதுங்கோ, ஏத்துக்கொள்ளத்தானே வேணும். ஏன் தெரியுமோ? களத்திலை நிராயுதபாணியா நிண்டு ரெண்டெழுத்தாரை விமர்சிக்கிற மனிசன் எண்ட பிளஸ் பொயிண்ட் அவருக்கு இன்னும் இருக்கத் தானே செய்யுது....

**சின்ன** வாண்டு ஒண்டு சினிமாப் பாட்டொண்டை உப்பிடிப் படிக்குதுங்கோ. என்ன பாட்டெண்டு நீங்களும் ஒருக்காப் படிச்சுப் பாருங்கோ.

*தெருவோரமா தமிழன் ஒருவன் சுட்டுக் கிடந்தா*
*புலிதான் சுட்டதெண்டதைப் தெரிஞ்சுகோ!*
*தமிழ்ப் பொம்பிளை ஒருத்தி பொட்டில்லாமப் போனா*
*பொட்டன்தான் காரணமெண்டதைப் புரிஞ்சுக்கோ.*

# சரியும் சர்வாதிகாரிகளின் சாம்ராஜ்யங்கள்

சென்ற வாரத் தொடர்ச்சி......

தென் அமெரிக்காவைப் பொறுத்தவரை ஆர்ஜென்ரீனாவின் இராணுவச் சர்வாதிகாரிகளால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளே அதிகம். 1976க்கும் 1983க்கும் இடையே இந்த இராணுவ ஆட்சியாளர்களால் 30 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர். இக் கொடுமைகள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை ஒரு கறுப்புப் புத்தகத்தை வெளியிட்டுள்ளது. கடத்தல், கைது செய்தல், கொலை, காணாமல் போதல், குழந்தைகள் கடத்தப்படல் இவை அனைத்துமே ஆர்ஜென்ரீனாவில் இந்த இராணுவச் சர்வாதிகாரிகள் நடத்திய அராஜக ஆட்சிமுறை. சர்வதேச நிர்ப்பந்தங்களும் ஆர்ஜென்ரீனா மக்களின் தொடர் போராட்டங்களும் புதிய அரசாங்கங்கள் இந்த இராணுவ ஆட்சியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தொடர்ச்சியாக வழி கோலியுள்ளது. இதன் காரணமாகவே ஜோர்ஜ் விடேலோ, முன்னாள் அட்மிரல் மஸேட்ரா போன்றவர்கள் தண்டனைக்குள்ளாகி வருகிறார்கள். இந்தப் பிரதேசத்தின் இன்னுமொரு மோசமான சர்வாதிகாரி பராகுவேயின் அல்.'.பிரடோ ஸ்ரோஸனர். இவரே உலகின் மிகநீண்ட கால சர்வாதிகாரி. 35 வருடங்கள் இவரது இரும்புக் கரங்கள் பராகுவே மக்களின் சிரங்களை நெரித்தன. 1989ஆம் ஆண்டு இவரது சர்வாதிகார ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின், இவர் இப்போது பிறேஸிலில் அகதியாக, ஆனால் அரச வாழ்க்கை வாழ்கிறார். ஆனால் பினாசெயின் கைது இவரது அடிவயிற்றிலும் புளியைக் கரைத்திருக்கும்.

இந்த சர்வாதிகாரிகள் வரிசையில் இன்னுமொரு அதிர்ச்சியூட்டும் சர்வாதிகாரி 'பேபி டொக்' என அழைக்கப்படும் ஹெயித்தியின் யேன் குளோட் டுவாலியே. உலகின் மிக ஏழ்மை நாடான ஹெயித்திலிருந்து சூறையாடிய 200 மில்லியன் டொலர்கள் சொத்துக்களோடு 1986ஆம் ஆண்டு நாட்டைவிட்டு வெளியேறிய டுவாலியேக்கு, அமெரிக்காவின் நிர்ப்பந்தத்துக்கு இணங்கி பிரான்ஸ் 8 நாட்கள் விசா அளித்தது. இவரது அகதி அந்தஸ்து கோரும் விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டது. 12 ஆண்டுகளுக்கு மேலாக பிரான்ஸில் செல்வந்தர்கள் வாழும் பகுதியான Coted Azur பகுதியில் மாளிகையில் வாழ்ந்து வரும் இவரது சரியான முகவரி தமக்குத் தெரியாது என பிரெஞ்சு வெளிநாட்டமைச்சும், பிரான்ஸில் உள்ள ஹெயித்தி தூதரகமும் இதுவரை சொல்லி வந்தது. ஆனால் பினாசெயின் கைதினால் மனிதஉரிமை அமைப்புகள் பெற்ற புதிய உந்துசக்தி இப்போது இவரை நீதிமன்றத்துக்கு அழைத்துள்ளது. பிரான்ஸில் வதிவிடப் பத்திரமற்றிருக்கும் பல நூற்றுக்கணக்கான வெளிநாட்டுமக்கள் அரசாங்கத்தால் நாடு கடத்தப்படும்போது வதிவிடப் பத்திரமற்றிருக்கும் டுவாலியேயை நாடு கடத்த வேண்டும் என்ற வழக்கை மனித உரிமை அமைப்புகள் கிறீஸ் நகர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளன. இதுகுறித்த நீதிவிசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது குறித்து பிரெஞ்சு உள்நாட்டு அமைச்சர் யேன் பியர் செவன்மா கருத்துக் கூறுகையில் பொலிஸாரின் கையில் டுவாலியே சிக்குண்டால் அவர் நாடு கடத்தப்படுவார் எனக் கூறியுள்ளார். இது சர்வாதிகாரிகள் தொடர்பாக அரசாங்கங்களின் புதிய அணுகுமுறையைக் காட்டும் இன்னுமொரு சம்பவமாகும்.

சர்வாதிகாரிகளின் பட்டியலில் அடுத்துவரும் எல்சல்வடோரின் பாதுகாப்பு அமைச்சரான ஜோஸ் கில்லர்மோ கார்ஸியாவும் பல ஆயிரக்கணக்கான படுகொலைகளின் சொந்தக்காரன். இவனது படுகொலைகளுக்கும் இடதுசாரி எதிர்ப்பு என்ற பேரவையில் அமெரிக்கா பக்கபலமாக இருந்தது. அது மட்டுமல்ல இவர் இப்போது அமெரிக்காவில் வளமாக வாழ்கிறார். இச் சம்பவங்களின் மூலம் இந்தச் சர்வாதிகாரிகளின் ஆட்சிகளுக்கு அமெரிக்கா எப்படிப் பக்கபலமாக இருந்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆபிரிக்காவும் சர்வாதிகார சாம்ராச்சியங்களுக்குள் மிக மோசமாகச் சிக்கித் தவித்த பிரதேசங்களில் ஒன்று. ஆபிரிக்காவின் முன்னாள் சர்வாதிகாரிகளில் இப்போது எஞ்சியுள்ளவர்கள் நான்கு பேர். எண்ணற்ற கொடுமைகளுக்கு, கொலைகளுக்கு காரணமான இவர்கள் தமது குற்றச் செயல்களுக்காக நீதியின் முன் நிறுத்தப்படாது தமது சொகுசு வாழ்க்கையைத் தொடருகின்றனர். 14 வருட சர்வாதிகார ஆட்சியின்பின் எதியோப்பியாவில் மெங்கிஸ்து ஹெய்லே மரியம் 1991ஆம் ஆண்டு பதவியிலிருந்து இறக்கப்பட்டார். இவரது ஆட்சிக்காலத்தில் 1 இலட்சத்திலிருந்து 2 இலட்சம் வரையிலான மக்கள் கொல்லப்பட்டனர். எரித்திரிய மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் மிலேச்சத்தனமாக நசுக்கப்பட்டது. தற்போது ஸிம்பாப்வேயில் அரசுக்குச் சொந்தமான ஆடம்பர வாசஸ்தலமொன்றில் சொகுசு வாழ்க்கை நடத்திவரும் மெகிஸ்துவுக்கு கடந்த ஆண்டே அடிஸ் அபாவிலுள்ள நீதிமன்றம் ஒன்று தண்டனை விதித்தது. ஆனால், அவர்மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆபிரிக்கப் பிரதேசத்தின் இன்னுமொரு மூர்க்கமான சர்வாதிகாரியின் பெயரைக் கேட்டாலே இரத்தம் உறைந்துவிடும். அவர்தான் உகண்டாவின் இடி அமின் டாடா. இவரது எட்டு வருட சர்வாதிகார ஆட்சி பெரும் பயங்கரங்கள் நிறைந்தது. எதிர்ப்பாளரின் இரத்தத்தைக் குடித்து மனித மாமிசத்தை உண்ணும் வழக்கமுள்ள இடி அமின், எண்ணக்கணக்கற்ற பெண்களை மனைவிகளாக்கிக் கொண்ட ஒரு பாலியல் வெறியன். உகண்டாவின் வளங்களை

**இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்ட இந்த இருபதாம் நூற்றாண்டு உலகின் பலபாகங்களிலும் பல்வேறுபட்ட குணாம்சங்களைக் கொண்ட சர்வாதிகாரிகளைச் சுமந்து நின்றது. குறிப்பாக இலத்தீன் அமெரிக்கா மோசமான சர்வாதிகார வரலாறுகளைக் கொண்டுள்ளது. இந்த இராணுவச் சர்வாதிகாரிகள் ஆர்ஜென்டீனாவில், பொலிவியாவில், பிறேஸிலில், சிலியில், பராகுவேயில், உருகுவேயில் தமது விஷக் கரங்களைப் பதித்தார்கள். எதிர்க் கருத்துள்ளோரை வேட்டையாடினார்கள். இந்த நாடுகளில் எல்லாம் கொலை, கைது, காணாமல் போதல் என்பனவே அன்றாட வாழ்க்கையாயிற்று.**

மாத்திரமல்ல காலம் காலமாக வாழ்ந்து வந்த ஆசியர்களை விரட்டியடித்து, அவர்களது சொத்துக்களையும் சூறையாடினான். இப்போது இவர் சவூதி அரேபியாவில் தனது பிள்ளைகளுடன் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். இவருக்குப்பின் உகண்டாவின் ஆட்சியைக் கைப்பற்றிய இன்னுமொரு சர்வாதிகாரி மில்ரன் ஒபடே. இப்போது லுஸாகாவில் தனது ஆடம்பர வாழ்வைத் தொடர்கிறார். தென்னாபிரிக்காவின் காட்டுமிராண்டித்தனமான நிறவெறி ஆட்சிக்கும், கறுப்பு இன மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகங்களுக்கும் காரணமான தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான பீற்றர் பொதா, தென்னாபிரிக்காவிலேயே ஒரு சுதந்திர மனிதனாக வாழ்கிறார்.

எது எப்படியிருப்பினும் பினாசெயின் கைது நேற்றைய மற்றும் இன்றைய சர்வாதிகாரிகளின் வயிற்றில் அமிலத்தைச் சுரக்கச் செய்திருப்பது உண்மை. சர்வாதிகாரிகளின் கொடிய ஆட்சிக்காலகட்டங்களின்போது கொல்லப்பட்ட, காணாமல்போன தமது உறவுகளுக்காக அப்பாவி மக்கள் ஓய்வில்லாமல் நடத்திவரும் வீதியோரப் போராட்டங்கள் வீண்போய்விடவில்லை. அதைப்போலவே பிலிப்பைனன்ஸின் மார்க்கோஸையும், நிக்கரகுவாவின் சமோசாவையும், பாகிஸ்தானின் யாஹியாகான் மற்றும் ஸியா உல்ஹக்கையும் ஈரானின் ஷா போன்றவர்கள் பாதுகாத்தது போல இன்றோ நாளையோ

## அமரர் உமாகாந்தன் எழுதியதிலிருந்து.....

பாதுகாக்கமுடியாது என்ற நிலைக்கு அமெரிக்காவும் அதன் சகபாடிகளும் வந்துவிட்டன. இந் நிகழ்வுகள் இந்த நூற்றாண்டுக்கான முடிவுரை எழுதப்படும்போது சர்வதேச சர்வாதிகாரத்திற்கான முடிவுரையும் எழுதப்பட்டுவிடும் என்ற நல்லநிலையே இன்று தோன்றியுள்ளது. இது சர்வாதிகாரத்துக்கு எதிரான போராட்டத்துக்கும் மனித உரிமைகளுக்கான போராட்டத்துக்கும் கிட்டியுள்ள நல்ல சமிக்ஞையாகும். மக்களின் ஜனநாயக உரிமைகளை மிதித்தவர்கள்..... மிதிப்பவர்கள் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்ற நிலை இன்று தோன்றியிருப்பது இருபத்தோராம் நூற்றாண்டுக்கான ஒரு நல்ல ஆரம்பமாகும்.

*நன்றி :- தோற்றுத்தான் போவோமோ...*

(முற்றும்)


## லண்டன், பாரிஸ்
### இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

**டாக்டர் ஆர். தியாகராஜன்** DHMS, AMRSH (LON)

01.06.2005 முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார். மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes), எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை, பேறின்மை (Strillity), ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையான பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

முன்கூட்டிய பதிவுக்கு - லண்டன் தொலைபேசி:
**02087678004 - 07984803488 - 07833341693**
**E-mail : homoeocare@rediffmail.com**
இந்தியா - 0091-9843051099 இலங்கை - 0094-777602513
ஜூன் மாத இலங்கை விஜயம் 21.06.2005 முதல் 25.06.2005 வரை



## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Goverment Approved Charity Regd No - HA/4/BT/219
**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)**

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் – மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ∴பக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Srilanka
Head Office
Batticaloa

தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமையகம்
மட்டக்களப்பு

Tele/Fax : 065-2224825,00940777488219. Balu Sothidar @ hotmail.com.

*"வாழ்வினிருளை நீக்கி ஒளியேற்றுவோம்"*
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"



## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத் தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்



மலையாள மாந்திரிக சக்தி

(1) மலையாள தேசத்தில் வசிப்பவளே ஸ்ரீ துர்க்கா தேவி ! ஸ்ரீ துர்க்கா தேவியின் பீடம் மலையாளமே! மலையாள தேசத்தின் தனி மகத்துவம் மலையாள மாந்திரிகம். அது மட்டுமா? விதியின் விபரணம் சாஸ்திரம், சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளமே! **மலையாள மாந்திரிக பேரரசர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N) J.P ஐயா அவர்களே**

(2) இலங்கையில் தொண்டு தொட்டு 46 வருடகாலமாக நுவரெலியாவிலும் கொழும்பிலும் ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயங்களை அமைத்து அன்றாடு 6 மணித்தியால அக்கினி குண்டலி பூஜை நடை பெருவதாலேயே! எண்ணியது எண்ணியவாறு நிறைவேறுகிறது

(3) உண்மைக்கு எடுத்து காட்டாக இது ஒரு வரையருக்கப்பட்ட தனியார் துரை P.K. Saamy Associate (Pvt) Ltd நிறுவனமாக இயக்கி வருவதால் வாங்கும் பணத்திற்கு ரசீதும் மாந்திரிக சித்த ஞானத்தால் காரியம் நிறைவேறும் திகதியை உடனே கூறிவிடும் சக்தி இங்கு இருக்கிறது.

(4) மேலும் ஐயாவின் பிரதான அனுசரனையுடன் வழங்கும் ஞாயிறு தோறும் சக்தி தொலை காட்சியில் இரவு 7 மணிக்கு **வேலன்** தொடரை தொடர்ந்து பார்த்து வேலன் மகிமையை கண்டறியுங்கள். மேலும் **கை அளவு உலகு** ஐரோப்பா முழுவதும் வெள்ளிதோறும் London நேரப்படி காலை 9.30 மணிக்கு கை ரேகை தொடர் நிகழ்ச்சியை Vectone TV பார்க்க தவறாதீர்கள். மேலும் விபரம் அறிய வெப்தலத்தை நாடுங்கள் www.drpksamy.com www.gangatharan.com

(5) இங்கு தீய வேலைகளுக்கு ஒருபோதும் இடமில்லை மனித ரூபத்தில் ஸ்ரீ துர்க்கா தேவியின் மகிமையை கண்டறிய மாதம் தோறும் இறுதியில் நடைபெறும் 11 மணித்தியால அக்கினி குண்டலி யாக பூஜையில் கலந்து கொண்டால் இவ் அற்புதத்தை கண்டறியலாம். அன்று அன்னதானமும் அடியார்களுக்கு வழங்கபடும்

(6) **இனி உங்கள் பிரச்சனை என்ன?**
தீராத நோய் தீர வேண்டுமா? ஆஸ்மா நோயால் அவஸ்தையா? பாரிச வாதமா? பக்க வாத விளைவுகளா? கை கால் உழைச்சலா? மன பேதளிப்பா? விரக்கிதியா-பட படப்பா? பில்லி சூனியமா? பேய் சேட்டையா? எதிரிகளின் சதிதிட்டத்தில் விடுபட வேண்டுமா?

(7) மற்றும் பிரிந்து போன கணவன்-மனைவி-காதலன் காதலி ஒன்று சேர, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரயாணத்தடை நீங்க, மது போதையில் இருந்த விடுபட, குபேர வாழ்வு அச்சர கூடு அணிந்து கொள்ள, கல்வி ஞான கவசம் பெற, தலைமுடி உதிர்வதை தடுத்து கொள்ள, இளம் நரையை போக்க, தலைமுடி வளர, சோம்பலை தவிர்க்க, வியாபாரம் விருத்தியடைய, ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் நன்மை பெற, கடற் தொழில் வியாபாரம் முன்னேற, வண்டி (வாகனம்) இலாபத்துடன் செயல்பட, விரும்பிய தொழில் கிட்ட, சென்றவர்கள் தேடிவர, முன்வினை தோஷம் கரும தோஷம் செவ்வாய் தோஷம் பரிகாரம் செய்து கொள்ள, குழந்தை பேறு கிட்ட, அதிஸ்டகல் மோதிரம் அணிந்து கொள்ள, இன்னும் உங்கள் குறைகளுக்கு நேரில் என்னை சந்தித்து ஆலோசிக்கவும்.(வெள்ளி ஞாயிறு கிழமை தவிர்த்து)

(8) இன்னும் அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே! பிழைத்தது இல்லை நடந்தது நடக்கபோவது, நடக்க இருப்பது, எத்தனையாம் திகதி திருமணம், எத்தனை மணிக்கு எத்தனையாம் திகதி பிரயாணம், எத்தனையாம் திகதி-எண்ணியது நடக்கும், சரிவருமா? சரிவராதா? என்பது இத்தனையாம் திகதி சரிவந்து விடும், என்று அறிந்த தெரிந்து செயல் பட முன்னறிவித்தலுடன் என்னை சந்திக்கவும்.

(9) தொலைபேசியில் விளக்கம் பெற விரும்புவோர் எனது சிரேஸ்ட தெளிவுரையாளர் சிவா விடம் நேரத்தை ஒதுக்கி கொண்டு தெளிவு பெறலாம் அணைத்து தொலை பேசிக்கும் எம்மிடம் (C.L.I) உண்டு வெளிநாட்டவருக்கு விஷேட தொலைபேசி வசதியுண்டு.

**உலக மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி**
**பேராசிரியர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N.) J.P.**

ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரிக உச்சாடன பீடம் 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு – 13.
தொலைபேசி (CLI) :- (0094 -11)- 2342463,2342464,2470615,2449110, 2431137, 4616331, 4616127, 46131124, 4613133, Fax: 2344831
Mobile :- +0094 777-588405 E-mail:- drpksamy@sltnet.lk web:- www.drpksamy.com, www.gangatharan.com

**கிளைகள்** } நுவரெலியாவில் (P.T.R ஐயாவை சந்தியுங்கள்) ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம் 33, கண்டி வீதி, தொ.பே: 0094-052-2222508/4490031/2223093
வெள்ளவத்தையில் 107/B, காலி வீதி, கொழும்பு-06. தொ.பே :- 0094 -11- 2552485

## இன்னொருவர் பார்வையில்

# [illegible] உதவியும் படுகொலைகள்

**இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் தொடர்புபட்ட சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கையின் தமிழாக்கம் இங்கு தரப்பட்டுள்ளது.**

### சர்வதேச மன்னிப்பு சபை அறிக்கை

சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதில் தவறிவிட்டாலும், பல யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெற்ற போதிலும் அரசாங்கத்துக்கும், புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கிறது. 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புலி இயக்கத்துக்குள் ஏற்பட்ட பிளவு காரணமாக அரசியல் நோக்குக் கொண்ட கொலைகள் அதிகரித்திருப்பதோடு, வடக்கு கிழக்கில் மனித உரிமை தொடர்பான நிலைப்பாடுகளும் சீரழிந்துள்ளன. பிரபா-கருணா அணிச் சண்டையின்போது பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்களை விடுவித்தபோதும், சிறுவர்களைப் புலிகள் தொடர்ச்சியாகச் சேர்த்துக் கொண்டனர். அரசாங்கம் கடந்த நவம்பர் மாதம் தூக்குத் தண்டனையை மீள அறிமுகப்படுத்தியது. பரிகாரம் தேடிச் செல்லும் பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களில் பயமுறுத் தல்களுக்கும் வன்முறைகளுக்கும் ஆளானதோடு, சித்திரவதைகளுக்குள்ளானார்கள் என்ற பரவலா தகவல்களும் கிடைத்துள்ளன. கடந்த கால மனித உரிமை மீறல்களிலிருந்து பாதுகாப்பு படையினரை தடுப்பதில் ஒரு சிறிய முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. மத மாற்றத்தை மட்டம் தட்டும் நோக்கத்துடன் ஒரு சட்டத்தை கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் தாக்கப்பட்டு சிறுபான்மைச் சமயத்தினருக்கு பயமுறுத்தல் விடுக்கப் பட்டது.

### பின்னணி

ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பலவீனமான ஒரு கூட்டமைப்புடன் கடந்த வருடம் ஏப்ரல் 2ஆம் திகதி தேர்தல் மூலம் பதவிக்கு வந்தது. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர், தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர், ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஆகியோர் கொல்லப்பட்டனர். வன்முறை, பயமுறுத்தல், வாக்கு மோசடி ஆகியவற்றுக்கு மத்தியில் புலிகளின் ஆதரவு பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ரி.என்.ஏ) வடக்கு கிழக்கில் மிக அதிகப் படியான ஆசனங்களைக் கைப்பற்றியது.

கருணா என்று சொல்லப்படும், புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி, பங்குனி மாதம் கணிசமான போராளிகளுடன் பிரபா அணிப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றார். புலி உறுப்பினர்கள் கருணா மற்றும் அவரது ஆதரவாளர்களுடன் போரிடும் நோக்கில் ஏப்ரல் மாதம் கிழக்கை நோக்கிச் சென்றார்கள். இதனால், பலர் கொல்லப்பட்டனர். நான்கு நாட்கள் நடைபெற்ற தொடர் சண்டையின் பின்னர் கருணா பெரும் எண்ணிக்கையிலான தனது ஆதரவாளர்களை விட்டுச் சென்று தலைமறைவானார். அவர் தனது சொந்த அரசியல் கட்சியை ஆரம்பித்தோடு புலிகளுக்கு எதிரான பிரசாரத்தைத் தொடர்ந்தார். அந்தக் கட்சி ஒக்டோபர் மாதம் ஈழத் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியுடன் இணைந்தது. கிழக்கு மாகாணத்தில் புலிகளுக்கும் எஞ்சியிருந்த கருணா ஆதரவாளர்களுக்குமிடையிலான போராட்டம் தொடர்ச்சியாக 2004ஆம் ஆண்டு முழுவதும் நடைபெற்றது. இதன் காரணமாக சிறுவர்களை படையில் சேர்ப்பதும், அரசியல் படுகொலைகளும் அதிகரித்தன.

நோர்வே மத்தியஸ்தர்கள் எவ்வளவோ முயன்ற போதும் சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படவில்லை. நம்பிக்கையீனத்தின் மத்தியில் புலிகள் பேச்சுவார்த்தைக்கான அடிப்படை யோசனையாகத் தன்னாட்சி அதிகார சபையை தொடர்ச்சியாக வலியுறுத்தியது. கூட்டமைப்பு அரசாங்கமோ தனது நிலையை தக்கவைத்துக் கொள்வதற்கு போராடிக் கொண்டிருந்தது. ஜூலை மாதம் 7ஆம் திகதி ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை கொலை செய்வதற்கு அனுப்பப்பட்ட புலிகளின் தற்கொலைக் குண்டுதாரி கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் குண்டினை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டார், நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டனர்.

புலிகளின் தன்னாட்சி அதிகார சபைக் கோரிக்கையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படாவிட்டால் போராட்டத்துக்குப் புலிகள் திரும்ப நேரிடலாமென்று புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நவம்பர் மாதம் 27ஆம் திகதி அவருடைய வருடாந்த மாவீரர் தின உரையில் குறிப்பிட்டார். திரும்பவும் யுத்தம் மூளும் என்ற பீதி அதிகரிக்கும் நிலையில், டிசம்பர் மாதம் 24ஆம் திகதி அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட புதிய யோசனைகளைப் புலிகள் நிராகரித்தனர்.

சுனாமி அலைகள் டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இலங்கையின் கரையோரப் பகுதிகளைத் தாக்கி 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களைப் பலி கொண்டது. தென் மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் கரையோரப் பகுதிகளில் கணிசமானோர் இறந்தனர். நாடு முழுவதுமாக 4 இலட்சத்துக்கும் அதிகமானோர் இடம் பெயர்ந்ததுடன், பரவலாக பாரிய கட்டுமான அழிவுகளும் ஏற்பட்டன. இந்தப் பேரழிவினால், அரசாங்கத்தினாலும் புலிகளினாலும் அவசர மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் முகமாக நாடு முழுவதிலும் உள்ள மக்கள் உதவ முன் வந்தார்கள். அத்துடன் பெரும் தொகையான சர்வதேச உதவிகளும் வர ஆரம்பித்தன.

> **புலிகளுக்கும் - கருணா அணியினருக்குமிடையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட மோதலின்போது அனேக சிறுவர்கள் மோதலில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது தெரிய வந்தது. இதில் சிறுவர்களும் கொல்லப்பட்டுள்ளனர். சண்டையைத் தொடர்ந்து கருணா, சிறுவர்கள் அணிக்காக போரிட்ட 1600 சிறுவர்களை வீடு செல்ல அனுமதித்தார். இவ்வாறு படையணியிலிருந்து கலைக்கப்பட்ட சிறுவர்களை, புலிகள் மே, ஜூன் மாதங்களில் பலாத்காரம், கடத்தல், பயமுறுத்தல் என்பனவற்றால் மீண்டும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய பரஸ்பர அழிவு ஏற்படுத்தக் கூடிய செயல்களுக்கு தமது பிள்ளைகளைச் சேர்ப்பது தொடர்பாக கிழக்கில் உள்ள பெற்றோர் சீற்றமடைந்துள்ளனர். அணிக்குள் ஏற்பட்ட பிளவின் காரணமாக இழந்தவர்களை ஈடுசெய்யும் பொருட்டு, 2004ஆம் ஆண்டு நடுப்பகுதியில் வடக்கிலும் புலிகள் சிறுவர்களைப் படையணியில் சேர்ப்பது வெகுவாக அதிகரித்திருந்தது.**

### அரசியல் நோக்கம் கொண்ட கொலைகள்

புலிகளில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து முக்கியமாக கிழக்கு மாகாணத்தில் அரசியல் கொலைகள் அதிகரித்தன. கருணாவின் ஆதரவாளர்களாலும் புலிகளாலும் ஏப்ரல் மாதம் தொடக்கம் எதிர்தரப்பு தமிழ் இயக்கத்தினர் உட்பட பொது மக்களும் படுகொலை செய்யப்பட்டனர். இந்தக் கொலைகளில் சில அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அல்லது இராணுவச் சோதனைச் சாவடிகளுக்கு அண்மையில் நடைபெற்றதால் இராணுவம் கருணா அணிக்கு உதவி வழங்குவதாகப் புலிகள் குற்றம் சுமத்தினர். இது போர் நிறுத்தத்தைக் கேள்விக்குறியாக்கியது. இத்தொடர்ச்சியான கொலைகளும் பயமுறுத்தல்களும் கிழக்கில் பொது மக்களை பீதிக்குள்ளாக்கின. கொழும்பிலும் பலர் கொல்லப்பட்டனர்.

1. மே மாதம் 31ஆம் திகதி மட்டக்களப்பில் ஊடகவியாலாளர் ஐயாத்துரை நடேசன் கடமைக்கு போகும் வழியில் கொல்லப்பட்டார். இந்தக் கொலையை கருணாவின் ஆதரவாளர்களே செய்ததாக நம்பப்படுகிறது.

2. ஜூலை மாதம் 6ஆம் திகதி இலுப்பையடிச்சேனை என்னும் கிழக்கு மாகாணக் கிராமத்தில் தில்லையம்பலம் சுந்தரராஜன் என்பவரும் பாலசுந்தரம் சிறீதரன் என்பவரும் புலிகளினால் வெளிப்படையாக மரண தண்டனைக்கு உள்ளாக்கப் பட்டார்கள். மட்டக்களப்பு, அம்பாறை அரசியல் பிரிவு விடுத்த அறிக்கையில் தேசத் துரோகிகள் இருவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதாக புலிகள் உரிமை கோரினர்.

3.ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி பாலநடராஜா ஐயர் என்னும் சிரேஷ்ட ஈ.பி.டி.பி. பேச்சாளர் கொழும்பு வெள்ளவத்தையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். புலிகள் தான் இக்கொலையைச் செய்தார்களென நம்பப்படுகிறது.

### சிறுவர் படையணி

2004ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 448 சிறுவர்கள் படையணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதாக ஐக்கிய நாட்டின் சிறுவர் நிதியம் (யுனிசெப்) தனது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதோடு, இந்த எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கலாம் என்றும் கூறுகிறது.

புலிகளுக்கும் - கருணா அணியினருக்கு மிடையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட மோதலின்போது அனேக சிறுவர்கள் மோதலில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது தெரிய வந்தது. இதில் சிறுவர்களும் கொல்லப்பட்டுள்ளனர். சண்டையைத் தொடர்ந்து கருணா, சிறுவர்கள் அணிக்காக போரிட்ட 1600 சிறுவர்களை வீடு செல்ல அனுமதித்தார். இவ்வாறு படையணியி லிருந்து கலைக்கப்பட்ட சிறுவர்களை, புலிகள் மே, ஜூன் மாதங்களில் பலாத்காரம், கடத்தல், பயமுறுத்தல் என்பனவற்றால் மீண்டும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய பரஸ்பர அழிவு ஏற்படுத்தக் கூடிய செயல்களுக்கு தமது பிள்ளைகளைச் சேர்ப்பது தொடர்பாக கிழக்கில் உள்ள பெற்றோர் சீற்றமடைந்துள்ளனர். அணிக்குள் ஏற்பட்ட பிளவின் காரணமாக இழந்தவர்களை ஈடுசெய்யும் பொருட்டு, 2004ஆம் ஆண்டு நடுப்பகுதியில் வடக்கிலும் புலிகள் சிறுவர்களைப் படையணியில் சேர்ப்பது வெகுவாக அதிகரித்திருந்தது.

1. மே, ஜூன் மாதங்களில் புலிகள் பலவந்தமாகச் சிறுவர்களைச் சேர்த்துக் கொள்வதைத் தடுக்க முற்பட்ட மட்டக்களப்பு வாகரையில் உள்ள சில குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தடிகளால் தாக்கப்பட்டனர். தாக்கப்பட்டதில் ஒரு பெண் மூர்ச்சையடைந்தார், மற்றுமொருவருக்கு முகத்தில் காயங்கள் ஏற்பட்டன.

2. திருகோணமலையில் மே மாதத்தில் நான்கு சிறுவர்களை நள்ளிரவில் வீட்டிலிருந்து பலவந்தமாகக் கூட்டிச் செல்ல முற்பட்டபோது ஒரு பிள்ளையின் தாய் தாக்கி காயப்படுத்தப்பட்டார்.

### சித்திரவதை

பொலிஸ் நிலையங்களில் பலர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டமை பற்றி அறிக்கைகள் கூறுகின்றன. அத்துடன் பொலிஸ் பாதுகாப்பிலிருந்தபோது பலர் இறந்துள்ளமையும் தெரிய வந்துள்ளது. சித்திரவதைக்குள்ளானவர்கள் நிவாரணம் தேடி நீதிமன்றங்கள் சென்றபோது அவர்கள் அத்தகைய வழக்குகளை மீளப்பெற்றுக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். ஜெராட் பெரேரா என்பவர் அத்தகைய சித்திரவதைக்குள்ளாகி ஏழு பொலிஸ்காரர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தமையால் நவம்பர் மாதம் 21ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

### தூக்குத் தண்டனை

கொலை, பாலியல் வல்லுறவு, போதைப் பொருள் கடத்தல் ஆகிய குற்றங்களுக்கு இன்று முதல் மரண தண்டனை நிறைவேற்றப்படுமென்று நவம்பர் மாதம் 20ஆம் திகதி ஜனாதிபதி செயலகம் அறிவித்திருந்தது. ஓர் மேல் நீதிமன்ற நீதிபதியினதும், அவருடைய மெய்ப் பாதுகாவலாளரினதும் கொலையைத் தொடர்ந்தே இந்த மரண தண்டனை மீண்டும் நடைமுறைக்கு வந்தது. 1976ஆம் ஆண்டு கடைசித் தூக்குத் தண்டனைக்குப் பிறகு சகல தூக்குத் தண்டனைகளும் தொடர்ச்சியாக வந்த ஜனாதிபதிகளினால் செயற்படுத்தப்படவில்லை.

### பயங்கரவாதத் தடைச் சட்டம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வருட இறுதியில் சுமார் 40 சிறைக் கைதிகள் இருந்ததாக கூறப்படுகிறது. ஐக்கிய நாட்டு மனித உரிமைகள் சபை சிவில் மற்றும் அரசியல் உரிமை தொடர்பான குழுவுக்கு ஜூலையில் செய்யப்பட்ட முறைப்பாடுகள் சம்பந்தமாக சிங்கராஜா நல்லரட்ணம் என்பவரது உரிமை மீறப்பட்டிருப்பதால், அவருக்கு மீள் விசாரணையும், நஷ்டஈடு அல்லது விடுதலை போன்ற பொருத்தமான நிவாரணம் அளிக்கப்பட வேண்டும். நல்லரட்ணம் சிங்கராஜா, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு 1995ஆம் ஆண்டு, அவருக்கு 50 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. நல்லரட்ணம் சிங்கராஜா தான் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டதாகவும், தனக்குத் தெரியாத மொழியாகிய சிங்களத்தில் எழுதப்பட்ட குற்ற ஒப்புதலுக்கு பெருவிரல் அடையாளம் இடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார். இந்தக் குற்ற ஒப்புதல் மாத்திரமே, தன்மீது குற்றம் சாட்டுவதற்கு அடிப்படையாக இருந்ததென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### சிறுபான்மை சமயத்தினர்

பலவந்தமாக மதமாற்றுதலை தடை செய்யும் சட்டம், ஜூலை மாதம் பாராளுமன்றத்தில் தனிநபர் மசோதாவாகச் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தச் சட்டம் ஒரு மனிதன் எந்த விதத்தில் மதம் மாற்றப்படலாம் என்ற சந்தர்ப்பத்தைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்தது. இந்த மசோதா அரசியல் சாசனத்திற்கு மாறானது என்பதால், ஓகஸ்ட் மாதத்தில் அதற்கு சில மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. புத்த சமயத்தைத் தேசிய மதமாக்குவதற்கு அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று நவம்பர் மாதத்தில் மேலும் ஒரு தனிநபர் பிரேரணை கொண்டு வரப் பட்டது. வருடம் முடிவுறும்போது இந்த மசோதாக்களில் எதுவும் நிறைவேற்றப் படவில்லை.


பௌத்த கிராமவாசிகளால் கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்கப்பட்டமை சம்பந்தமாக இவ்வருடத்தில் சில கிறிஸ்தவ குருக்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. சிறுபான்மை முஸ்லிம் குழுவுக்கு சொந்தமான முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்று இடித்துத் தள்ளப்பட்டதன் காரணமாக, ஒக்டோபர் மாதத்தில் வேறுபட்ட கிழக்கு முஸ்லிம் குழுக்களுக்கிடையில் கலகம் ஏற்பட்டதால் பல குடும்பங்கள் வீடுகளை விட்டுத் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது. இதே நேரத்தில் அக்கரைப்பற்றிலும், மன்னாரிலும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மத்தியில் கலகம் ஒன்று ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

'வெற்றி மீது வெற்றி
வந்து என்னைச் சேரும்! -
வாங்கித்தந்த பெருமையெல்லாம்
உன்னைச் சேரும்' என்று
பின்னாளில் நான் தாயைப் பற்றி
பாட்டு எழுதியிருக்கிறேன்.

வெற்றியை, நான் பெற்றபோது என்னைப் பெற்றவள் பக்கத்தில் இல்லை. ஆனால், அந்தத் தாய் தான் தெய்வமாக இருந்து எனக்கு



வெற்றியைப் பெற்றுத் தந்தாள்.

அண்ணன் எம்.எஸ். விஸ்வநாதன் இந்த ஆண்டியை ஒரே நாளில் அரசனாக்கினார். . என் தாயின் தவம் பலித்தது. ஆனால், என் பொருட்டு என் அன்னை எத்துணை இன்னல்களை ஏற்றாள் என்பதை இப்பொழுது எண்ணுங்கால், விழிகளில் நீர் வழிகிறது. அவள் பட்ட பாடுகளும், நோற்ற நோன்புகளும் ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல! 'அற்றைத் திங்கள்' என்று பாரிமக்கள் பற்றிக் கபிலன் பாட்டில் வருமே அதுபோல், அந்நாளில் ஸ்ரீரங்கம் கோவிலில் என் அன்னை, அரங்கநாதனையும், அரங்க நாயகியையும் வேண்டி அழுதும் தொழுதும் அரற்றி அலமந்து நின்றது இன்று என் விழிமுன் நிழற்படமாய் விரிகிறது.

இதோ! இப்பொழுது என் தாயைப் பற்றி நான் எழுதிய கவிதை :

*எனக்கு*
*வேலை வெட்டி*
*கிடைக்க வேண்டுமென்று*
*அம்மா*
*வேண்டாத தெய்வமில்லை.*
*ரெங்கநாயகித் தாயாருக்கு*
*ரெட்டை ஜரிகை போட்ட*
*பட்டுப் பாவாடை*
*ரெங்க நாதருக்குப் பாவாடைச்*
*சாதமும்*
*பங்குனி உத்தரத்தன்று*
*அக்கார வடிசிலும்*
*அனுமாருக்குத்*
*திருமஞ்சனம்*
*வேஷ்டி;*
*வெண்ணெய்;*
*வடை மாலை*
*சக்கரத் தாழ்வாருக்கு*
*எள்ளுஞ்: சாதமும்*
*எண்ணெய் விளக்கும்.*
*ராய கோபுரம்*
*முனீஸ்வரனுக்கு*
*பூசாரி மூலமாய்ப்*
*பொங்கல்*
*சமயபுரம்*
*தாயாருக்கு*
*உப்பும் மிளகும்*
*எலுமிச்சம் பழ*
*மாலையும்*
*தான் தோன்றி மலை*
*குல தெய்வத்திற்கு*
*தயிரன்னம் சந்தனக் காப்பு*
*திருவேங்கட முடையாலுக்கு*
*அஞ்சணா... பத்தணாவாக*
*அவ்வப்பொழுது*
*மஞ்சத் துணியில்*
*மேட்டழகிய சிங்கருக்கும்..*
*தன் வந்திரிக்கும்...*
*முடிந்த போதெல்லாம்*
*அஷ்டோத்திரம்.*
*நவக்கிரகங்களுக்கு*
*ஒரு மண்டலம்*
*நேர்ந்து கொண்டு*
*ஒன்பது ஒன்பது பிரதட்சிணம்*
*நிற்கும் போதும்*
*நடக்கும்போதும்...*
*நிமிரும் போதும்..*
*குனியும் போதும்*
*நாராயணா நாராயணா என்று*
*அஷ்டாட்சர ஜபம்.*
*எனக்கு வேலை வெட்டி*
*கிடைக்க வேண்டுமென்று*
*அம்மா*
*வேண்டாத தெய்வமில்லை.*
*எந்த தெய்வமும்..*
*ஏறிட்டுப் பார்க்காமலும்..*
*ஏனென்று கேட்காமலும்..*
*இருந்ததால்..*
*ஓர் நாள்......*
*என் அம்மா*
*தானே தெய்வமாகி -*
*என்னைத்*
*தூக்கிவிட்டாள்.*

என் தாய் தெய்வமாகிய பின்னே, என் வாழ்வில் ஏற்றம் நிகழவேண்டும் என்பதுதான், தெய்வத்தின் திருவுள்ளமாக இருந்திருக்கிறது.


அந்தத் திருவுள்ளம்தான் அண்ணன் எம்.எஸ். விஸ்வநாதனை என்பால் அன்பு பாராட்டச் செய்தது.

கம்பெனி கம்பெனியாக திரு. எம்.எஸ்.வி. எனனைப் பற்றி எடுத்தியம்பியதன் பயனாக, வாய்ப்புகள் எனக்கு வந்து குவிந்தன.

(தொடரும்.......)



# உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....



ரஷ்ய தலைவர் பிரஷ்னேவ் நோய்வாய்ப்பட்டிருக்கிறார் என்றும், அவர் நீண்டகாலம் உயிர் வாழ்வது கஷ்டம் என்றும் ஊஐயுக்கு ஒரு தகவல் கிடைத்தது. பிரஷ்னேவின் சிறுநீரைப் பரிசோதித்தால் அவருடைய வியாதி என்ன, அவர் எவ்வளவு காலம் உயிர் வாழக்கூடும் என்பதை எல்லாம் கணக்கிட்டு விடலாம் என்று எண்ணிய CIA, வெகு பிரயாசைப்பட்டு பிரஷ்னேவினுடைய சிறுநீர் சாம்பிளைப் பெற்றது. அந்தச் சிறுநீர் சோதனையும் செய்யப்பட்டது. சோதனையின் முடிவு பிரஷ்னேவ் அபாயகரமான நோய்க்கு உள்ளாகியிருப்பதாகவும், அவர் இறந்துகொண்டு இருப்பதைப் போலவும் தகவல் கொடுத்தது. அவர் மரணம் பற்றிய செய்தி எப்போது வெளியாகும் என ஊஐயுவினர் ஆவலோடு காத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் பிரஷ்னேவின் ஆயுள் நீடித்துக் கொண்டே இருந்தது. தவறு எவ்வாறு நிகழ்ந்தது என ஆராய்ந்த போது, தங்களுடைய சோதனைக்குக் கிடைத்த சிறுநீர் பிரஷ்னேவினுடையது அல்ல என்பது வெளியாயிற்று. பிரஷ்னேவின் சிறுநீரைப் பெற CIA பல லட்சம் டாலர்களை செலவழித்திருக்கும் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

### வேறு சில உளவு ஸ்தாபனங்கள்

MI-15, MI-16 என்பவை திறமையான பிரிட்டிஷ் உளவு ஸ்தாபனங்கள் ஆகும்.

CIAயைப் போலவோ அல்லது KGBயைப் போலவோ பெரும் நிதிகளை இவை செலவழிப்பதில்லை. பிரிட்டனின் பொருளாதாரம் அதற்கு இடம் கொடுக்காது. ஆனாலும் பிரிட்டிஷ் உளவு ஸ்தாபனங்களில் மிகுந்த திறமைசாலிகள் வேலை செய்கிறார்கள். MI-15 வெளிநாட்டு உளவாளிகள் தங்கள் நாட்டில் உளவு பார்ப்பதை தடுப்பதற்காகவும், நாட்டுப் பாதுகாப்பு இரகசியங்கள் மற்றவர்கள் கைகளில் கிடைக்காமல் தடுப்பதற்காகவும் உருவாக்கப்பட்டது. பிரிட்டிஷ் அமைச்சரவையில் இருந்த ப்ரஃபியூமோ என்கிற அமைச்சர், கிறிஸ்டியன் கீலர் என்கிற அழகியோடு தொடர்புகொண்டு இரகசியங்களை வெளியிட்டார் என்கிற காரணத்திற்காக ராஜினாமாச் செய்தார். அவருடைய நடவடிக்கைகளைக் கண்காணித்து அம்பலமாக்கியது, MI-15 ஆகும்.

MI-15 க்காக செலவழிக்கப்படும் தொகை என்ன என்பதுகூட இரகசியமாக வைத்துக் கொள்ளப்படுகிறது. MI-15 இன் தலைவர் யார் என்று இப்போதும் எவருக்கும் தெரியாது. அவருடைய புகைப்படமோ, அவரைப் பற்றிய தகவல்களோ எவருக்கும் கிடைக்காத இரகசியங்களாகப் பாதுகாக்கப்படுகின்றன. போர் இலாகா அலுவலகத்துடன் அவர் தொடர்புடையவர் என்பதற்கு மேல் அவரைப் பற்றி எந்தத் தகவலும் யாருக்கும் தெரியாது.

MI-15, MI-16 ஆகிய உளவு நிறுவனங்கள் ஜனநாயக அமைப்புக்குள் செயல்படுவதால் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கடுமையான விமர்சனங்களுக்கு அவை ஆளாகுகின்றன. தொழிற்சங்கத் தலைவர் ஒருவரின் வீட்டுக்குள் MI-15ஐச் சேர்ந்த ஒரு உளவாளி நள்ளிரவில் நுழைந்து தகவல் சேகரிக்க முயன்றதை BBC டெலிவிஷன் படமாகவே காட்டிக் கண்டித்தது.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் பெண்களின் மலட்டுச் செழிப்பு

நவீன மருத்துவத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள் இலங்கையைப் பொறுத்த வரையில் அவ்வளவு நல்லதாக இல்லை என்றே தெரிய வருகிறது.

இதில் ஒரு விடயம் குறிப்பிடத் தக்கது. அதாவது இலங்கையில் திருமணம் முடித்த ஆறு தம்பதிகளில் ஒரு தம்பதியினர் பிள்ளைச் செல்வத்தை இழந்து உள்ளனர்.

'இதில் மலட்டுத் தன்மை எனக் கூறப்படுவது தற் போது மலட்டுச் செழிப்புத் தன்மை எனப் பிரயோகிக் கப்படுகின்றது'.

ஆறு தம்பதிகளில் ஒரு தம்பதியினர் மலட்டுச் செழிப் புத் தன்மை கொண்டிருப்பதானது வரவேற்கத்தக்கதொரு விடயமல்ல.



குழந்தைகள் இல்லாத குடும்பத்தின் நிலைமை பற்றி நாங்கள் கூறித் தெரிய வேண்டியதில்லை. இதில் குறிப் பிடத்தக்க விடயம் என்னவென்றால், மலட்டுச் செழிப்புத் தன்மை கொண்டவர்களில் நூற்றுக்கு 60 வீதத்தினர் ஆண்கள் என்பதாகும்.

இலங்கை போன்ற நாடுகளில் இப் பிரச்சினை வளர்ச்சி பெற்றிருப்பதற்கு ஒரு காரணம் பல காலமாக நிலவி வருகின்ற சமூகக் கருத்தியல்களாகும்.

மலட்டுச் செழிப்புத் தன்மையால் ஏற்படக் கூடிய சமூகப் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்கு மேற்படி நிலைமை தொடர்பாக நாங்கள் அறிந்திருத்தல் அவசியமாகும்.

பொதுவாக இலங்கையில் 30 வயதைத் தாண்டி திருமணம் செய்துகொள்வது ஒரு சாதாரண நிகழ்வாக உள்ளது. கல்வி, தொழில், வசதி வாய்ப்பு என்பன இவ்வாறான தாமதத்திற்கு ஒரு காரணமாகும்.

இதே நேரம் திருமணம் முடித்தபின்னும் ஓரிரு வருடங்கள் குழந்தைப் பெற்றுக் கொள் ளாமல் தள்ளிப் போடுகின்ற தம்பதிகளும் உள்ளனர். இதற்கும் பல காரணங்களைக் கூறலாம்.



இவ்வாறெல்லாம் நடந்த பின்னர் பிள்ளைப் பெற விரும்பும் போது மலட்டுச் செழிப்புத் தன்மை காணப்படு மானால் அங்கே பிரச்சினை தலைதூக்கி விடுகின்றது. தங்களுக்கு மலட்டுச் செழிப்புத் தன்மை இருப்பதை அந்தத் தம்பதியினர் மேலும் ஓரிரு வருடங்கள் சென்ற பின்பே அறிந்துகொள்கின்றனர்.

அதன் பின்னர் தங்களுக்கு இப்படி ஒரு குறைபாடு இருப்பதை அவர்கள் நன்கு புரிந்து கொண்டதன் பின்னரே மருத்துவரை நாடுகின்றனர்.

நாங்கள் இங்கு ஒரு முக்கிய விடயத்தை அறிந்து கொள்ள வேண்டும். அதாவது, முழுமையான நிறைவான ஒரு குழந்தையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய தகுதி ஒரு பெண்ணுக்கு 38 வயது தாண்டும்போது படிப்படியாக குறைந்து விடுகின்றது.

மருத்துவ ஆய்வுகளின் பிரகாரம் 30 வயதைத் தாண்டியப் பெண்களில் ஆயிரத்தில் ஒருவருக்கு கிடைக்கும் குழந்தைநலன் குன்றியதாக இருக்கக் கூடும். 35 வயதைத் தாண்டிய நூறு பேரில் 5 பேரினது குழந்தைகள் இந்நிலையைக் கொண்டிருக்கக் கூடும்.

நாங்கள் மேலே கூறிய நிலைகளில் பார்த்தால் ஒரு பெண்ணின் குழந்தைக்கான எதிர்பார்ப்பு 35 வயதைத் தாண்டியே ஏற்படுகிறது.எனினும், மருத்துவ ஆலோசனைகளின் பேரில் குழந்தைப் பேறு பெற்றுக் கொண்டாலும்கூட, அக்குழந்தைகள் முழுமை நிலை யைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்க இய லாது.

திருமணம் முடித்துக் கொள்வதற்கு முன்பதாக ஜாதகம் மற்றும் ஏனைய சடங்கு சம்பிரதாயங்களின் பால் நாட்டம் கொள்பவர்கள், தங்களுக்குள்ள மலட்டுச் செழிப்புத் தன்மை குறித்தோ அல்லது குழந்தைப் பேற றுக்கான செழிப்புத் தன்மை குறித்தோ மருத்துவர்களிடம் சென்று பரிசோதித்துப் பார்ப்பதில்லை.

இவ்வாறு பரிசோதித்துப் பார்த்தால் சமுதாயத்தில் ஏற்படக்கூடிய அநேகமான பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ள இயலும்.

அதே நேரம் அவ்வாறு பார்க்கும் போது, தாங்கள் மலட்டுச் செழிப்புத் தன்மை கொண்டிருந்தால் அதனை நிவர்த்தி செய்துகொள்வதற்கான கால அவகாசம் அவர்களுக்கு உண்டு.

இதே போல் நிகழுமானால் அவர்களால் நிறைவான ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ள இயலும்.

எனினும், இவ்வாறானதொரு தைரியமான காரியங் களில் எங்களது சமூகம் இறங்குமா? என்பது கேள்விக் குரிய விடயமாகும்.

மருத்துவ ஆய்வுகளின்படி திருமணமான தம்பதி யினர் எவ்வகையிலான குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங் களையும் பயன்படுத்தாமல் 1 1/2 வருடங்கள் கழிந்தும் பிள்ளைப் பேறு கிட்டவில்லை என்றால் அது மலட்டுச் செழிப்புத் தன்மையைக் காட்டுகின்றது. இதில் இத் தன்மையை அதிகம் கொண்டிருப்பவர்கள் ஆண்களாவர்.

இதற்குப் பல காரணங்கள் உண்டு. அவர்களது தொழில் தன்மைகள் வேறுபடுவதும் ஒரு காரணமாகும். ஆரம்ப காலத்தில் விவசாயம் என்பது ஆண்களது முக்கிய தொழிலாகக் காணப் பட்டது. இது ஒரு கடுமையான தொழில் என்ற போதிலும் நீண்ட நேர ஓய்வு உண்டு.

மருத்துவ ஆய்வுகளின்படி உஷ்ண நிலை குறைந்த பகுதிகளில் விந்து வளர்ச்சி யடைகின்றது. விவசாயத்துடன் நீரும் சம்பந்தப் பட்டிருப்பதால் விவசாயிகள் குளிர் நிறைந்த சூழலில் வாழ்ந்து வருகின்றனர்.

எனினும், கைத்தொழில்மய சூழலில் அவ்வாறான நிலை இல்லை. அடுத்ததாக ஆடைகள். நாகரீகம் என்ற பெயரில் கழுத்து முதல் பாதம்வரை இறுக்கப்பட்ட ஆடைகள் அணிய நேரிடுகின்றன. ஆனால் விவசாயி களுக்கு அந்த நிலை ஏற்படுவதில்லை.

இவை சூழல் சார்ந்த நிலைமைகளாகும்.

பெண்களைப் பொறுத்த வரையில் மாதவிடாய் குளறுபடிகள், கர்ப்பப்பை நோய்கள் என்பன மேற்படி நிலைக்கு ஒரு காரணமாகும்.

வயது சென்று திருமணம் முடிப்பதும், ஆண்களின் விந்து உற்பத்தி விகிதாசாரம் அதன் செயற்பாட்டு பலவீனங்கள் என்பனவும் காரணங்களாகின்றன.

குறுகிய விதைகள், அணுக்கள் தொடர்பான வியாதி கள் மது பானம் அருந்துதல் போன்ற காரணங்களாலும் மேற்படி நிலை ஏற்படுகின்றது.

-பாரூக்

# சங்கர மடத்துக் கிங்கரர்கள்




காஞ்சிபுரம் சங்கரமடத்துக்கு அண்மையிலுள்ள வாக்குச்சாவடிக்கு வந்து வாக்களித்த பின்னர் திரும்பிச் செல்லும் பத்மா (சங்கரராமனின் மனைவி) சங்கரராமன் கொலையுண்ட பின்னர் அந்தரித்து நின்ற குடும்பத்துக்கு ஐந்து இலட்சம் ரூபா நிதியுதவியளித்த முதல்வர் ஜெயலலிதாவின் கட்சிக்குத்தான் வாக்களித்திருப்பாரென்பதை சொல்லியா தெரிய வேண்டும்.

**21**

சங்கராச்சாரியார்கள் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய அனைத்தையும் துறந்து, முற்றும் துறந்த முனிபுங்குலவர்களாக வாழ வேண்டுமென்பதே நியதி. இதனால்தான் அவர்கள் காவியுடை தரித்து பஞ்சகவ்வியம், கமண்டலம், தண்டல் ஆகியவற்றுடன் வெளியே காட்சியளிக்கிறார்கள். சங்கரமடம் எழுந்தருளியிருக்கும் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற இடைத்தேர்தல் ஜெயேந்திரரின் விசுவாசிகளுக்கும் எதிர்ப்பாளர்களுக்குமிடையிலான மோதலாகவும் திகழ்ந்தது. இதனால்தான் காவித் தலைவருக்கும் (ஜெயேந்திரர்) காஞ்சித் தலைவிக்கும் (முதல்வர் ஜெயலலிதா) இடையிலான மோதலை வெளிக்காட்டுவதற்காக இருவருமே சாடை மாடையாக சிலேடையாக அர்த்தபுஷ்டியோடு தெரிவித்த கருத்துக்களைக் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம். ஜெயலலிதாவை சினிமாவிலும் அரசியல் களத்திலும் இறக்கியவர் முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். எம்.ஜி.ஆரின் நேரடிக் கண்காணிப்பில் புயல் வேகத்தில் வளர்க்கப்பட்டவர் அவர். எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்த ஒரு படம் காஞ்சித் தலைவன். வசூலில் மட்டுமல்ல, தமிழகத் திரையரங்குகளில் அதிக நாட்கள் ஓடிச் சாதனை படைத்த படம் அது. கடந்த மே 14ஆம் திகதி நடைபெற்ற காஞ்சிபுரம் இடைத்தேர்தலில் தனித்து நின்று தி.மு.க. தலைமையிலான ஏழு கட்சிக் கூட்டணியை மட்டுமல்ல சக்திமிக்க ஜெயேந்திரரின் ஆதரவாளர்கள், அனுதாபிகள், சீடர்களையும் தோற்கடித்து காஞ்சித் தொகுதியைக் கைப்பற்றியதால் ஜெயலலிதாவை காஞ்சித் தலைவியென வர்ணித்திருந்தோம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிட்ட நாற்பது தொகுதிகளிலும் கோட்டை விட்டது ஜெயலலிதாவின் அ.தி.மு.க. இந்தத் தோல்வி தொடர்பாக ஜெயேந்திரர் ஆந்திர மாநிலத்தில் வைத்துக் கூறியதாகக் கூறப்படும் கருத்துக்களும் ஜெயலலிதாவுக்கும் ஜெயேந்திரருக்குமிடையில் முரண்பாடுகள் முற்ற ஒரு காரணமாக இருந்ததென சங்கரமடத்துக்கு நெருங்கிய சில வட்டாரங்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தன. இதே கோணத்தில்தான் தமிழகப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் சில இந்த முரண்பாட்டை வர்ணித்திருந்தன, விமர்சித்திருந்தன.



காஞ்சிபுரம் தொகுதி இடைத் தேர்தலில் வெற்றிபெற்ற அ.தி.மு.க. வேட்பாளர் மைதிலி திருநாவுக்கரசு வெற்றிக்களிப்பில் காணப்படுகிறார். சங்கரமடத்து முக்கியஸ்தர்கள் மற்றும் விசுவாசிகளின் எதிர்ப்புக்கு மத்தியிலும் தான் வெற்றிபெற்றமைக்குக் காரணம் முதல்வர் ஜெயலலிதாவின் சரியான வழிநடத்தலே என்கிறார் மைதிலி.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னரேயே ஜெயலலிதாவின் கூட்டணி படுதோல்வியடையுமென ஜெயேந்திரர் சாபம் போட்டிருந்தாரென்றும் அது அப்படியே பலித்து விட்டதென்றும்கூட சங்கரமடத்து விசுவாசிகள் அப்போது அதிரடித் தகவல்களை வெளியிட்டிருந்தனர். அந்தப் பொம்மனாட்டியின் திமிராலதான் சகல தொகுதிகளிலுமே அ.தி.மு.க. கூட்டணி தோல்வி கண்டது என்று ஜெயேந்திரர் ஆந்திரா சென்றிருந்தபோது கூறியிருந்தாராம். இதுவும் முதல்வர் ஜெயலலிதாவின் காதுகளுக்கு எட்டியதாக அ.தி.மு.க.வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. இதனால்தான் காஞ்சிபுரத் தொகுதியை ஜெயலலிதா கோட்டைவிட்டு விடுவாரோவென்று பலரும் எதிர்பார்த்திருந்தனர்.

இடைத்தேர்தல் நடைபெற்ற காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி ஆகிய இரு தொகுதிகளிலும் அளிக்கப்பட்ட வாக்குகளில் அ.தி.மு.க. 55 சதவீதத்துக்கு மேலான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. காஞ்சிபுரத்தில் மைதிலி திருநாவுக்கரசுவும் கும்மிடிப்பூண்டியில் கே.எஸ்.விஜயகுமாரும் வெற்றியீட்டியுள்ளனர். இவ்விருவருமே கடந்த இருபதாம் திகதி தமிழக சட்டமன்றத்தில் சபாநாயகர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுள்ளனர். காஞ்சிபுரத்தில் இருதரப்புமே பணம் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் போன்றவை வழங்கி வாக்கு வேட்டையாடியதாகப் பரஸ்பரம் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படிருக்கின்றன. தி.மு.க.தலைவர் கருணாநிதி காஞ்சித் தேர்தல் பிரசாரப் பணிகளில் பெரும் அக்கறை கொள்ளவில்லை. சில தடவைகள் மட்டுமே அவர் அங்கு சென்று பிரசாரப் பணிகளில் ஈடுபட்டார். ஆனால் ஜெயலலிதாவோ தனது நெருங்கிய தோழி சசிகலா சகிதம் காஞ்சிபுரத்தின் பட்டி தொட்டியெல்லாம் பிரசாரம் செய்தாரென்று கூறுமளவுக்கு ஆர்வமும் அக்கறையும் காட்டினார்.

காஞ்சிபுரம் இடைத்தேர்தல் வெற்றி குறித்து அத் தொகுதி எம்.எல்.ஏ.யான மைதிலி திருநாவுக்கரசிடம் கேட்டோம். "அம்மாவின் (ஜெயலலிதா) மக்கள் நலன் பேணும் திட்டங்களும் அவரது கெட்டித்தனமான ஊழலற்ற ஆட்சியுமே அ.தி.மு.க. வெற்றிக்குக் காரணம். காஞ்சிபுரத்தில் அ.தி.மு.க.வைத் தோற்கடிக்க வேண்டுமென்று எதிர்த் தரப்பினர் எவ்வளவோ பாடுபட்டார்கள். பல தில்லு முல்லுகளைச் செய்தார்கள். எல்லாவற்றையும் முறியடித்து நாம் வெற்றி வாகை சூடிவிட்டோம்" என்றார் புளகாங்கிதத்துடன். "ஜெயேந்திரர் கைது விவகாரம் உங்களுக்கு ஒரு சவாலாக இருக்கவில்லையா?" என்று கேட்டோம். "ஏற்கெனவே அம்மா சொன்னது போல எட்டாவது கட்சியாக அவர்கள் செயற்பட்டு எம்மைத் தோற்கடிக்க எவ்வளவோ முயன்றனர். அம்மாவுக்கு ஜெயேந்திரர் மீது தனிப்பட்ட கோபம் எதுவும் கிடையாது. அம்மாவுக்கு ஜெயேந்திரரும் ஒன்னுதான், சந்தனக் கடத்தல் வீரப்பனும் ஒன்னுதான். சட்டத்தை மீறுபவர்கள் எவராக இருந்தாலும் சட்டம் தன் கடமையைச் செய்ய அனுமதிக்க வேண்டும். சங்கரராமன் கொலை தொடர்பாகச் சகல விடயங்களையும் நன்கு பரிசீலித்த பின்னரே சம்பந்தப்பட்டவர்களின் கைதுக்கு அம்மா அனுமதித்தார்" என்றார்.

காஞ்சிபுரத்திலிருந்து
**அருண் கண்ணன்**

"அதுவென்ன, சம்பந்தப்பட்டவர்கள் என்கிறீர்களே. நான் கேட்பது சங்கராச்சாரியார் ஜெயேந்திரர், இளைய மடாதிபதி விஜயேந்திரர் மற்றும் முக்கிய பிராமணர்கள் கைது பற்றி?" என்றேன். "அதுதான் சொல்லிவிட்டேனே. சங்கரராமன் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் யாராகவிருந்தாலும் அவர்களின் சமூக, சமய அந்தஸ்துகளுக்கு அப்பால் சட்டம் தன் பணியைச் செய்ய இடமளிக்க வேண்டும். நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் இது குறித்து அதிகம் பேச விரும்பவில்லை" என்று ஒரேயடியாக முற்றுப்புள்ளி வைத்தார். மைதிலி திருநாவுக்கரசு.

(தொடரும்.....)

# எந்த அளவையால் அளக்கிறீர்களோ, அந்த அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்! ஏடு இட்டோர் இயல்

*சென்ற வாரத் தொடர்ச்சி....*

### கருடனுக்கு சவால்

கருணாவின் உடைவு பற்றி வந்த செய்திகளுக்கு புலிகள் உடனடியாக தெரிவித்த மறுப்பை நியாயப்படுத்த, கருணாவின் முகாமுக்கு சென்று வந்ததாகவும் அங்கு பிரிவு பற்றி எந்த தோற்றமும் இருக்கவில்லை என்று முன்னர் சொன்னது பொய்யாகி விடுமோ, அந்தப் பிரிவில் தானும் ஒரு காரணி என்று தேசியத் தலைவர் நினைத்து விடுவாரோ என்ற பயத்தில் 'அவலை நினைத்து உரலை இடித்த கதையாக' தலைவருக்காக சிவராமினால் எழுதப்பட்டது தான், புலி ஊடகங்களில் போற்றிப் புகழப்படும் 'கருணாவுக்கு ஒரு கடிதம்' அதன் பின்னால், கருணா கோடிக் கணக்கில் வங்கியில் பணம் போட்ட விபரங்கள், பயமே இல்லாமல் கிழக்கில் சுற்றி வந்ததாக எழுதிய குறிப்புகள், தனக்கு பயமே இல்லையாம் என்று காட்ட வீரகேசரியில் உலக அரசியல் பற்றி எழுதிய கட்டுரையின் அடியில் படம் பாரத்து, சூப் குடிக்க நினைத்த தன்னை வற்புறுத்தி கட்டுரை எழுத வைத்த ஆசிரியருக்கு தெரிவித்த நன்றிகள், 'என்னையோ, நடேசனையோ கொல்வதால்...' என்றதெல்லாம் எந்தப் பாதகாப்பை நம்பிய சவால்கள்?

கருணா பிரிந்ததாக செய்தி வெளியில் வந்ததும், தமிழ்நெட்டில் வந்த செய்திகளை ஆராய்ந்தால், இவருடைய நிலைப்பாடு என்ன என்பதை புரிந்து கொள்ளலாம். கருணா பிரிவது என்பது புலிகளைப் பொறுத்தவரை கற்பனை பண்ணிக் கூடப் பார்க்க முடியாத ஒன்று. இயக்க உடைவு பற்றி புலிகள் சுலபமாக கதையை வெளியில் விட்டிருக்க மாட்டார்கள். முழுமையாக தணிக்கை செய்திருப்பார்கள். ஆரம்பத்தில் உடனடியாகவே மறுத்திருந்தார்கள். ஆனால், கருணா பிரிந்ததும் அவருடைய கோரிக்கைகள், அவர் தலைவருக்கு கடிதம் எழுதியது என பல்வேறு விடயங்கள் தமிழ்நெட்டில் முழுமையாக பிரசுரமாகியது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியது. இவர் வன்னிப் புலிகளின் பக்கம் அப்போதே சார்ந்திருந்தால் அதை இருட்டடிப்புச் செய்திருக்க வேண்டும். பின்னால் இவர் சொன்ன எந்தக் கருத்துக்களும், கருணாவின் பிரிவின் தவறுகள் என்று சொன்ன எதுவும், அந்த குறுகிய இடைவெளிக்குள் வரவேயில்லை. கருணாவினால் தாக்குப் பிடிக்க முடியாது என்று உணர்ந்ததும் அவரோடு கிழக்கு வாதம் பேசிய கரிகாலன் உட்பட்டவர்கள் காலை வாரிய போது இவரும் சேர்ந்து காலை வாரியவர் தான்.

அதன் பின்னால் வன்னிக்கான விசுவாசத்தைக் காட்ட, தன் மீது சந்தேகம் கொள்ளும் புலிகளை நம்ப வைக்க இவர் கருணாவை நோக்கிக் குரைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகினார். கிட்டத்தட்ட அவர் சூழ்நிலையின் கைதி என்ற நிலைக்குத் தான் தள்ளப் பட்டார். எப்போதும் எதிரிகளைப் பார்த்துக் குரைத்தே ஆக வேண்டிய நிர்ப்பந்தம். புளொட் மோகன் கொல்லப்பட்ட போது, அவரை இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் சேர்த்தது பிரபல இராணுவ ஆய்வாளர் என்று தராக்கியைக் குற்றஞ் சாட்டியது கனடா ஈழநாடு. ஆனால், தான் இராணுவத்துடன் சேர்த்த அதே மோகனைப் பற்றி தமிழ் நெட்டில் எழுதும்போது 'ஆடுமாடு மேய்த்துக் கொண்டிருந்தவர், படிக்காதவர்' என்று தான் சிவராம் எழுதியிருந்தார். பழைய கதைகள் கிளறுப் பட்டு தனக்கு ஆபத்து வரக்கூடும் என்ற பயத்திலோ என்னவோ, இவர் இப்படியெல்லாம் கீழ்த்தரமாக எழுத வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

### புலி எதிர்ப்பின் மூளையாய்....

ஒரு காலத்தில் புலி எதிர்ப்பின் Poster Boy ஆக இருந்தவர் புலிகளால் மாமனிதர் ஆக்கப்பட்டது காலத்தின் கோலம்தான். தமிழ்ப் பத்திரிகையாளரிடையே ஈடு இணையில்லாத அவருடைய ஆங்கிலப் புலமை பிரமிப்பூட்டுவது. ஆங்கில இலக்கியம் முதல் சமகால அரசியல் வரை நிறைந்த வாசிப்பறிவும் ஆங்கிலத்தில் தர்க்க ரீதியாக எழுதும் ஆற்றலும் குறுகிய காலத்தில் அவரை அரசியல் எழுத்தாளராக்கியதுடன், இராணுவத்துடன் இருந்த தொடர்புகளால் செய்திகளைப் பெற முடிந்ததால், இராணுவ ஆய்வாளர் என்ற பட்டமும் ஒட்டிக் கொண்டது.

அவ்வாறான காலம் ஒன்றில் இவர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்த சபாலிங்கம் கொல்லப்பட்ட போது, ஐலண்டில் எழுதிய கட்டுரை ஒன்றில் இவர் எழுதிய கட்டுரை ஒன்றில் தாயகம் பற்றி சிலாகித்து எழுதியிருந்தார். அத்துடன் பிறிதொரு தடவை கனடா வந்த போதும் நேரில் தேடி வந்து சந்தித்திருந்தார்.

2001இல் மட்டக்களப்பில் இருவரும் சேர்ந்து வெளியிட்ட தினக்கதிர் பத்திரிகை அலுவலகம் 'இனம் தெரியாதவர்களால்' தாக்கப்பட்டு, கம்பியூட்டர்கள் உடைக்கப் பட்டு, இவரும் தாக்கப்பட்டிருந்தார். இது பற்றி தமிழ்நெட்டின் செய்தியில் வழமை போல, 'அடையாளம் காணப்படாத' நபர்கள் தான். ஆனால் இவரது தகவல்களின்படி இராணுவத்துடன் சேர்ந்த ஆயுதக்குழுக்கள். இது எந்த வகை இராணுவ ஆய்வு?

புலியை ஆதரிப்பதால், பிழைப்பு நடத்தலாம் என்றோ, புலிகளின் கொலைப் பயமுறுத்தலுக்கு அவர்களை ஆதரிப்பது சமயோசித தந்திரோபாயம் என்றோ, மிஞ்சி இருப்பது புலிகள்தான் என்றோ, தமிழ்த் தேசியத்தை ஆதரிப்பதாகக் காட்டிக் கொண்டு புலிகளினதும் தலைவரதும் புகழ் பாடத் தொடங்கினார். இராணுவ ஆய்வாளர் புலிகளின் இராணுவ பலத்தை சிலாகித்தும் பூதாகாரமாக்கி மிகைப்படுத்தியும் தனக்கு ஏற்கனவே இருந்த வாசகர் கூட்டத்திற்கும் புதிதாக ரசிகர்களாகி ஒட்டிக்கொண்ட வெளிநாட்டு பொங்கு தமிழருக்கும், புலிகளின் விற்பனையாளராகவே மாறி விட்டிருந்தார். பேரலை அழிவின் பின் உதவிக்கு அமெரிக்கா வந்த போது 'அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாக' புலிகள் கிலி கொண்ட போது 'புலிகளோடு மோதினால் ஈராக்கில் இழந்த இழப்பை விட அதிகமான இழப்பை அமெரிக்கா புலிகளிடம் சந்திக்க வேண்டும்' என்றெல்லாம் கதை அளக்கும் அளவுக்கு அவரது இராணுவ ஆய்வு இருந்தது. இவருடைய பிற்காலத்து எழுத்துக்கள் வெளிநாடுகளில் உள்ள பொங்குதமிழ் மந்தைகளைக் குஷிப்படுத்துவதிலேயே கண்ணாக இருந்தது. புலம்பெயர்ந்த புலி ஊடகங்களின் 'சன்மானம்' அதற்கான காரணமாக இருக்கக் கூடும்.

### எதிரியின் கோட்டைக்குள்

கருணாவின் குழுவினர் நஞ்சு வைத்துக் கொல்லப்பட்ட போது, மற்றவர்களுக்குத் தெரியும் முன்பாகவே இவர் தமிழ்நெட்டில் செய்தி வெளியிட்டு சாதனை புரிந்தது கடைசியில் இவர் மீது அரசாங்கம் கண் வைத்து வீட்டில் தேடுதல் வேட்டைகள் நடத்த சாதகமாக இருந்தது. சிங்களப் பேரினவாதத்தின் கோட்டையின் நின்று கொண்டே அது தமிழர் தேசத்திற்கு எதிராகப் புரிகின்ற அநீதிகளையும் அக்கிரமங்களையும் உலகிற்கு உறுதியாக எடுத்துக் கூறினார் என்பது என்னவோ உண்மைதான். கொழும்பில் இருந்து கொண்டே அரசாங்கத்தையும் இராணுவத்தையும் கருணாவையும் எதிர்த்து எழுதிக் கொண்டே, பாதுகாப்புப் படையினரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், இவரால் சுதந்திரமாக உலாவ முடிந்தது. இதே போல, வன்னியிலோ, யாழ்ப்பாணத்திலோ புலிகளுக்கு எதிராக எழுதிக் கொண்டு யாரும் உயிரோடு வாழ முடியாது. அத்துடன் இவர் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள குடும்பத்தோடு வன்னியில் சென்று வாழவும் 'ஏதோ காரணங்களுக்காக' விரும்பவேயில்லை.


ஆனாலும், கடைசிக் காலங்களில் அவரது எழுத்துக்களில் 'பாரிய மாற்றம்' என்று சொல்ல முடியாவிட்டாலும், சிந்தனை மாற்றம் தென்பட்டது.

(தொடரும்)

நன்றி :- www. Thayagam.info



யாது மாகி நின்றாய் -காளி! எங்கும் நீநி றைந்தாய்
தீது நன்மை யெல்லாம் -நின்றன் - செயல்க ளன்றி யில்லை.
போதும் இங்கு மாந்தர் - வாழும் - பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதி சக்தி, தாயே - என்மீது - அருள் புரிந்துகாப்பாய்.
சுப்பிரமணிய பாரதியார்-



# சாதுவும் புண்ணியகோடியும்



முன்னொரு காலத்தில் பஞ்சலிங்கபுரம் என்ற சிற்றூர் இருந்தது. அந்த ஊரில் புண்ணியகோடி என்பவர் வசித்து வந்தார்.

புண்ணியகோடிக்கு ஏராளமாகச் சொத்துக்கள் இருந்தன. அவர் முன்னோர்கள் ஏராளமான சொத்துக்களைச் சேர்த்து வைத்தனர்.

புண்ணியகோடி கவலையில்லாமல் அந்த சொத்துக்களை எல்லாம் மனம் போல் செலவழித்தபடி வாழ்ந்து வரலானார்.

தன்னிடம் தேவைக்கு மேல் பணம் இருக்கின்றது என்ற அகந்தையில் யாரையும் மதிக்காமல் வாழ்ந்து வரலானார் புண்ணியகோடி.

யாரைப் பார்த்தாலும் அவர்கள் மனம் புண்படும்படியாகப் பேசுவதையே வழக்கத்தில் கொண்டிருந்தார் புண்ணியகோடி.

ஒரு நாள் கிராமத் தெருவில் வயதான மனிதர் ஒருவர் மிகவும் தள்ளாடிய படியே சென்று கொண்டிருந்தார்.

அந்த மனிதரைப் பார்த்த வேளையில் புண்ணியகோடிக்கு ஏளனமாக இருந்தது. ஏனென்றால் அந்த மனிதர் மிகவும் பசியோடு கம்பு ஊன்றியபடியே தள்ளாடிச் சென்று கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்த புண்ணியகோடியோ, "நீர் இதற்கு முன்னர் சர்க்கஸ் கம்பெனியில் கோமாளியாக நடித்தீரா? எதற்காக ஆடி ஆடி ஒரு பக்கம் சாய்ந்தபடியே சென்றுகொண்டிருக்கின்றீர். உம்மைப் பார்க்கையில் எனக்கு சிரிப்பாக வருகிறது" என்றார்.

அந்த வயதான மனிதரோ புண்ணியகோடியை நோக்கினார். "தம்பி, உன்னுடைய வயதில் நான் உன்னைவிட மேலாக நன்கு திடகாத்திரமாகத்தான் இருந்தேன். இப்போது எனக்கு வயதாகி விட்டது உனக்கே தெரியுமல்லவா! எனக்குக் கடுமையான பசி! என்னால் சரியாகக் கால்களை ஊன்ற முடியவில்லை! அதனால்தான் இப்படி நடந்து கொண்டிருக்கிறேன்!" என்றார்.

அதனைக் கேட்ட புண்ணியகோடி, "நீர் நடந்து செல்ல வேண்டுமானால் வேறு ஏதாவது ஒரு பாதையில் நடந்து செல்ல வேண்டியதுதானே! எதற்காக என் முன்னே நடந்து செல்கின்றீர்? உம்மைப் பார்க்கையில் என் மனதிற்குள் வெறுப்பு ஏற்படுகின்றது. உம்முடைய முகத்தில் விழிப்பதையே நான் வெறுப்பாக நினைக்கிறேன்" என்றார்.

உடனே அந்தப் பெரியவர் "இதோ பாரப்பா! நீ பேசுகின்ற வார்த்தையானது மற்றவர்களின் இதயத்தைக் குத்திக் காயம் ஏற்படுத்தக் கூடாது. மற்றவர் மனதைப் புண்படுத்துகின்ற உன்னுடைய எண்ணத்தை மாற்றி விடு. எல்லோரிடமும் இனிமையாகப் பேசு!" என்றார்.

அதனைக் கேட்ட புண்ணியகோடி, "இதோ பாரும் பெரியவரே! நீர் எனக்கு புத்திமதி சொல்ல வேண்டாம்! என்னிடம் நிறையப் பேர் இவ்வாறு புத்திமதிகளைச் சொல்லியிருக்கின்றார்கள். அதனையெல்லாம் நான் ஒரு காதோடு வாங்கி மறு காதோடு விட்டு விடுவேன்" என்றார் புண்ணியகோடி.

ஆனால் அந்தப் பெரியவரோ அப்போது எதுவும் பேசிக் கொள்ளவில்லை. அமைதியுடன் அங்கிருந்து சென்று விட்டார்.

"அந்தப் பெரியவரின் மனம் கோணுகின்றபடி பேசிவிட்டோம்" என்று மகிழ்ச்சியுடன் செல்லத் தொடங்கினார் புண்ணியகோடி.

புண்ணியகோடி சிறிது தூரமே சென்றிருப்பார். அப்போது அவர் எதிரே சலவைக்காரர் ஒருவர் வந்து கொண்டிருந்தார்.

வெயில் நன்றாகக் காணப்பட்டதால் புண்ணியகோடி தன் தலையில் தொப்பியை அணிந்திருந்தார். சலவைக்காரரோ தன் தலையில் அழுக்கு மூட்டையைத் தூக்கி வைத்து சுமந்தபடி வந்து கொண்டிருந்தார்.

புண்ணியகோடி சலவைக்காரரை ஏளனத்துடன் பார்த்தார்.

"என்ன சலவைக்காரரே! தலையில் பலமான பாரத்தை வைத்துக்கொண்டு எங்கே செல்கின்றீர்? நீர் பாரம் சுமந்து செல்லும் அழகைப் பார்க்கின்ற வேளையில் எனக்கு வாய் விட்டுச் சிரிக்க வேண்டும் போல் இருக்கின்றது. உமது ஒய்யார நடையினைக் கண்டு என் தலையில் அடித்துக் கொள்ளலாம் போன்று தோன்றுகிறது" என்றார்.

அதனைக் கேட்ட சலவைக்காரரோ, "இந்தப் புண்ணியகோடியானவர் வேண்டுமென்றே நம்மிடம் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கின்றார். அடுத்தவர் மனம் புண்படும்படியாகப் பேசுவது இவருடைய பொழுது போக்கு. இவரிடம் நாம் எதையாவது பேசி நேரத்தை வீணாக்க வேண்டாம். நம்முடைய வேலையினைத் தேடிச் செல்வோம்!' என்று முடிவு செய்தார். எனவே அந்த சலவைக்காரர் அமைதியுடன் துணி மூட்டையைச் சுமந்தபடி செல்லத் தொடங்கினார்.

புண்ணியகோடியோ அந்தச் சலவைக்காரரை மீண்டும் கேலி செய்ய முடிவு செய்தார்.

"சலவைக்காரரே உமது காதுகள் கேட்கவில்லையா? உமது காதுகள் இரண்டும் மந்தம் போன்று தெரிகிறது. இப்படி மந்தமான காதுகளை வைத்துக் கொண்டு எப்படி சலவைத் தொழிலைச் செய்கின்றீர்? உம்மைப் பார்க்கின்ற வேளையில் எனக்கு வியப்பாகத்தான் இருக்கின்றது" என்றார்.

சலவைக்காரரோ அதனைக் கேட்டபடி பதில் எதுவும் சொல்லாமல் அமைதியாகவே சென்று விட்டார்.

அந்த இடத்தைவிட்டு புண்ணியகோடி வேறொரு பாதையின் வழியாக சென்றார்.

அப்போது புண்ணியகோடியின் எதிரே குதிரைக்காரன்

## பாப்பா முரசு சிறுகதை

ஒருவன் வந்தான்.

அவன் தன் குதிரையில் ஒரு மூட்டையைத் தூக்கி வைத்தபடி மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தான்.

புண்ணியகோடி அந்தக் குதிரைக்காரனைப் பார்த்தார்.

புண்ணியகோடியை அதுவரையிலும் அறியாத குதிரைக்காரனோ அமைதியுடன் சென்று கொண்டிருந்தான்.

உடனே புண்ணியகோடி குதிரைக்காரனை சீண்டிவிடப் பார்த்தார்.

குதிரைக்காரன் தன்னோடு ஏதாவது பேசுவானோ என்று எதிர்பார்த்தார்.

குதிரைக்காரன் எதுவும் பேசிக்கொள்ளாமல் மௌனமாக செல்லவே புண்ணியகோடி ஆத்திரமடைந்தார்.

"ஐயா! குதிரைக்காரரே! இந்த ஊருக்கு நீர் புதியவராக இருக்கின்றீரே! உம்மைப் பார்க்கையில் எனக்கு வெறுப்பாக இருக்கின்றது. நீரும் உமது முகமும் பார்க்க அருவருப்பாக இருக்கின்றன. உமது முகம் இந்தக் குதிரையின் முகத்தைப் போன்று இருக்கிறது. நீர் என் எதிரே வந்ததை நான் துரதிர்ஷ்டமாகக் கருதுகிறேன்" என்றார்.

இதனைக் கேட்டதும் குதிரைக்காரர் கோபமடைந்தார். "யாரப்பா நீர்! உமது வாயில் இருந்து நல்ல வார்த்தைகள் வராதா? உம்மை நான் இப்போதுதான் முதலில் சந்திக்கிறேன். அதற்குள் நீர் என்னிடம் என்னவெல்லாமோ பேசுகின்றீரே! உமது வார்த்தைகள் என்னை எரிச்சலடையச் செய்தாலும் ஆச்சர்யத்தை ஏற்படுத்துகின்றன. இனிமேல் நீர் என்னிடம் இவ்வாறு நடந்து கொள்ள வேண்டாம்! ஏதோ ஒரு புதியவனைக் கண்டால் அவன் மனது புண்படும் படியாகத் தான் பேசுவதா? நீர் பேசியது சுருக்கென்று முள் குத்தியது போன்று இருக்கின்றது. இனிமேல் யாரிடமும் இப்படி சூடான வார்த்தைகளைப் பேச வேண்டாம்! எல்லோரிடமும் அன்பான வார்த்தைகளையே பேசும்!" என்று கூறியபடி சென்றார் அந்தக் குதிரைக்காரர்.

புண்ணியகோடி தன் மனதை மாற்றிக் கொள்ளவில்லை. இன்னும் யாராவது கிடைக்கமாட்டார்களா? அவர்களிடம் பேசி அவர்கள் மனதையும் புண்படுத்தலாமே என்று முடிவு செய்தார்.

உடனே அவர் தன் எதிரே யாராவது வருகின்றார்களா என்று எதிர்பார்த்தார் நடுத்தர வயதுடைய மனிதர் ஒருவர் வந்து கொண்டிருந்தார். அப்போது அவர் எதிரே வந்த மனிதரை உற்று நோக்கினார் புண்ணியகோடி.

அவர் பார்ப்பதற்கு மிகவும் சாதுவாக இருந்தார். அந்த சாதுவான மனிதரிடம் பேச்சுக் கொடுத்து அவர் மனதைக் காயப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தார் புண்ணியகோடி.

உடனே அவர் அந்த மனிதனின் அருகே சென்றார். "யாரப்பா நீர்! உம்மைப் பார்க்கையில் உலக மகா திருடன் போன்று தெரிகின்றீர்! எதற்காக இப்படி வேகமாக நடக்கின்றீர்? எந்த இடத்திலாவது திருடிவிட்டுச் செல்கின்றீரா?" என்று கேட்டார்.

அதனைக் கேட்ட அந்த மனிதரோ புண்ணியகோடியை உற்று நோக்கினார். பின்னர் புண்ணியகோடியை நோக்கி....

"நீர் தலையில் தொப்பி அணிந்தபடி என் முன்னே கம்பீரமாக வந்து நிற்கின்றீரே! உம்மைப் பார்க்கையில் நான் பயந்து விடமாட்டேன். நீர் மனதை புண்படுத்தும்படி பேசும் வார்த்தைகளுக்கும் நான் செவி சாய்க்க மாட்டேன். ஆனால் நீர் இப்படி திமிரோடு நடந்து கொள்கின்றீரே! இதனை நினைக்கையில் உமக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும் என்று அடிமனது ஆணையிடுகிறது. இதோ உமக்கு சரியான பாடம் புகட்டப் போகிறேன். நான் உமக்கு புகட்டுகின்ற பாடத்தை ஜென்மத்திற்கும் நீர் மறக்கமாட்டீர்! உம்மை அடித்துத் துவைத்தால்தான் என்னுடைய ஆத்திரமெல்லாம் அடங்கும்" என்று கூறியவாறு தன் முதுகின் பின்னால் மறைத்து வைத்திருந்த பிரம்பினை எடுத்தார். புண்ணியகோடியைப் பளார் பளார் என்று அடிக்கத் தொடங்கினார்.

புண்ணியகோடியோ இதனை நினைத்துப் பார்க்கவில்லை. இந்தச் சாதுவான மனிதரிடம் இப்படி ஒரு பலம் இருக்கிறதே! இதனை நினைத்துப் பார்க்க முடியவில்லையே! என்று மனதுள் நினைத்தபடி அடிகளை வாங்கிக் கொண்டு 'ஐயோ! அம்மா!' என்று அலறத் தொடங்கினார்.

அந்த மனிதரோ மீண்டும் மீண்டும் புண்ணியகோடியைப் பிரம்பால் அடித்தபடி புரட்டிப் புரட்டி எடுத்தார்.

புண்ணியகோடி அடிபடுவதை ஊர்மக்கள் எல்லோரும் வேடிக்கைப் பார்த்தனர். ஆனால் யாருமே அதனைத் தடுக்கச் செல்லவில்லை.

'புண்ணியகோடி அவர். வாயினால் எத்தனையோ பேர்களின் இதயங்களை முள் குத்துவது போல் குத்திக் காயப்படுத்தியிருக்கின்றார். இன்று அவர் உடம்புக்கு ஒருவர் காயம் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார். புண்ணியகோடி நன்றாகக் காயப்பட வேண்டும். அப்போதுதான் அவர் திருந்துவார்' என்று ஏளனமாகப் பேசினார்கள்.

ஒரு சிலரோ இன்றோடு இந்தப் புண்ணியகோடி தொலைந்தார். இப்போது கிடைத்துக் கொண்டிருக்கும் பிரம்படி அவருக்கு ஆறு மாதத்திற்குப் போதும். அவர் ஒவ்வொரு முறையும் அடித்தழும்பை நினைத்துப் பார்த்து தன்னுடைய தவறுகளை உணர வேண்டும்' என்று பேசிக் கொண்டனர்.

புண்ணியகோடியைப் பிரம்பால் அடித்த மனிதரோ சற்று தளர்வடைந்தார்.

தன் கையில் இருந்த பிரம்பினை அங்கு கூடியிருந்தவர்களின் முன்னே நீட்டினார்.

"நான் இவரை என் கைகள் ஓயும் வரையிலும் அடித்துவிட்டேன். இனி நீங்கள் யாராவது இவரை அடிக்கப்போகின்றீர்களா? உங்கள் எவருக்கேனும் இவரை அடிக்கும் எண்ணமிருந்தால் இதோ இந்தப் பிரம்பினை வாங்கிக் கொண்டு அடியுங்கள்" என்றார்.

ஆனால் அவரை அடிக்க யாரும் முன்வரவில்லை. அதற்குள் புண்ணியகோடியும் மயக்கமடைந்து கீழே விழுந்து விட்டார்.

புண்ணியகோடியை அடித்த மனிதரோ தன் இடுப்பில் பிரம்பை சொருகிக் கொண்டு தன் பயணத்தைத் தொடர்ந்தார்.

புண்ணிய கோடியை ஊர் மக்கள் எல்லோரும் சேர்ந்து தூக்கிக் கொண்டு வந்து மயக்கத்தை தெளிய வைத்தனர்.

புண்ணியகோடி தலை குனிந்தபடி தன் வீட்டை நோக்கி நடந்தார்.

மறுநாள் முதல் அவர் யாரையும் புண்படும்படியாக எதுவும் பேசவில்லை. எல்லோரிடத்திலும் அன்பாகப் பேசத் தொடங்கினார்.

# ஆத்திசூடி


## கீழ்மை அகற்று

நீ, கீழ்த்தரமான செய்கைகளையும், தாழ்வு மனப்பான்மையையும் உன் மனத்தினின்றும் நீக்கிவிடு.

-ஔவையார்

எஸ் நிரஞ்சலா, கண்டி.

# அதிசய உலகம்



பெங்குவின்கள் எழுப்பும் சத்தம் 70 டெசிபல் அளவுக்கு இருக்கும். இந்த சப்தத்திலும் தனது பெற்றோருடைய சத்தத்தைத் தனியே அடையாளம் காணும் திறன் பெங்குவின் குஞ்சுகளுக்கு இருப்பது வீந்தையாகும். பிற பெங்குவின்களின் சத்தத்தை வடிகட்டி, தனது பெற்றோருடைய சத்தத்தை வைத்து, அடையாளம் கண்டு ஓடி ஒட்டிக் கொள்ளும் பெங்குவின் குஞ்சுகளின் விந்தையான ஆற்றல் கண்டு விஞ்ஞானிகளே வியக்கிறார்கள். இயற்கையின் படைப்புகளில்தான் எத்தனை வீந்தைகள்.

# உங்கள் பொது அறிவு எப்படி?

## இலங்கையை ஆண்ட மன்னர்கள் விபரம்

| மன்னன் பெயர் | காலம் | தலைநகர் | ஆண்டகாலம் (வருடம்) |
|---|---|---|---|
| 1. அசேலன் | கி.மு. 215 | அனுராதபுரம் | 10 |
| 2. எல்லாளன் | கி.மு. 205 | அனுராதபுரம் | 44 |
| 3. துட்டகைமுனு | கி.மு. 161 | அனுராதபுரம் | 24 |
| 4. சத்தாதிஸ்ஸன் | கி.மு. 137 | அனுராதபுரம் | 18 |
| 5. துல்லத்தனன் | கி.மு. 119 | அனுராதபுரம் | - 01 |
| 6. லஞ்ஜிதிஸ்ஸன் | கி.மு. 119 | அனுராதபுரம் | 09 - 08 |
| 7. பல்லாதநாகன் | கி.மு. 109 | அனுராதபுரம் | 06 |
| 8. புலஹஸ்தி | கி.மு. 103 | அனுராதபுரம் | 03 |
| 9. பாத்தியன் | கி.மு. 100 | அனுராதபுரம் | 02 |
| 10. பனயமாறன் | கி.மு. 98 | அனுராதபுரம் | 07 |

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 15.06.2005.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 599
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 597


பரிசுக்குரியவர்:
ஏ. கீர்த்தனா, 'ஸ்ரீதேவி கோயில்',
கொம்மாதுறை, செங்கலடி.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ரா.திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | ஏ.எம்.எம். பைசர், 530, புதிய சந்தை வீதி, சாய்ந்தமருது 07. |
| செந்தில்வண்ணன் பிரதாப், 24, 1ஆம் ஒழுங்கை, குருமண்காடு, வவுனியா. | மு. தினோதன், 23/22B, விஸ்ட்வைக் வீதி, கொழும்பு - 15. |
| லோகேஸ்வரன் லக்ஷனா, 24, முதலாம் ஒழுங்கை, குருமண்காடு, வவுனியா. | ஏ.ஜே. பாத்திமா பஸ்னா, 173/5B, கந்தவத்த, மல்வானை. |
| எம். ரவிசங்கர், 585, புதிய தெரு, உப்புக்குளம், மன்னார். | யோ. சாந்தருபன், 737/55, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு 15. |
| அபிநயா கார்த்திகேயன், ப/தமிழ் மத்திய கல்லூரி, பண்டாரவளை. | ர. வினோ, தரம் 7, மட்/செங்கலடி மத்திய கல்லூரி, செங்கலடி. |




# மூக்கு முட்டக் குடி!



மூக்கு முட்டக் குடிக்கும் பலரைப் பற்றி நாம் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறோம். ஆனால், மூக்கால் குடிப்பவர்களைப் பற்றி அறிந்திருக்கிறோமா? அக்குறையை நீக்குகிறார் சீனாவைச் சேர்ந்த ஜீங் குவோலோங். இவர் அன்றாடம் பானங்களை மூக்கினாலேயே அருந்துகிறார். மூக்கினால் ஒரு கிளாஸ் தோடம் பழ ஜூஸ் குடிக்க இவருக்கு சில நிமிடங்களே தேவைப்படுகிறது என்று சீனாவில் இருந்து வெளியாகும் 'ஸ்டார் டெலி' பத்திரிகை தெரிவித்துள்ளார்.

# நீருக்கடியிலுமா?




கொழும்பு வீதிகளில் தற்போது அனைத்து இடங்களிலும் காதல் ஜோடிகளை காணலாம். ஆனால் இங்குள்ள காதல் ஜோடி ஒன்று தமது காதலின் வெற்றி இலக்கான திருமணத்தை வித்தியாசமாக செய்ய நினைத்ததன் விளைவு தான் இது. இவர்கள் தங்கள் திருமணத்தை காதலர் தினமான பெப்ரவரி 14ஆம் திகதி நீருக்கடியில் வைத்து நடத்தியிருக்கிறார்கள். இவர்களுக்கு நீர் உட்புகாத திருமணச் சான்றிதழ் வழங்கப்பட்டது. திருமணம் செய்ய இலகு வழிகளில் இதுவும் ஒன்று தான்.

# உலகிலேயே பெரியது

உலகை வியக்க வைக்கும் பல்கலைக்கழகங்கள் நாளாந்தம் தோன்றிக் கொண்டுதான் இருக்கின்றன. அந்த வகையில் இங்குள்ள பல்கலைக்கழகம் உலகிலேயே மிகப் பெரிய பல்கலைக்கழகம் என்னும் பெருமையைக் கொண்டது. ரஷ்யாவில் மொஸ்கோ நகரத்தில் உள்ள ஸ்டேட் பல்கலைக்கழகமே இந்தப் பெருமையைப் பெற்றது. இது சுமார் 240 மீற்றர் (787.5 அடி) உயரம் உடையது. இதில் 32 மாடிகளும் 40,000 வகுப்பறைகளும் உண்டாம். எங்கள் நாட்டு பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகள், இங்கு நாம் பட்டம் வாங்க வில்லையே என்று யோசிக்க வேண்டாம். எங்கு வாங்கினாலும் பட்டம் பட்டம் தான்.



# உடையாமல் இழுத்தல்!



சீன வாசியான 38 வயதான ஷாங் க்சித்க்குவாக் தனது இரண்டு காதுகளிலும் கயிறைக் கட்டி மோட்டார் வாகனமொன்றை இழுத்தார். இது வழமையாக நடைபெறுவது தானே என்று சலித்துக் கொள்ள வேண்டாம். இது கொஞ்சம் புதுமை. ஏனெனில் இவர் முட்டைகள் மேல் நின்று அவை உடையாமல் மோட்டார் காரை இழுத்தார் என்பதே இதன் சிறப்பு. ஷாங் தனது எட்டாவது வயதிலிருந்தே இப் பயிற்சியைச் செய்து வருகிறார்.

# ஆயுத பலம்

யுத்தங்களின் போது எதிரிப் படைகளைத் தாக்குவதற்காக பல உத்திகளை கையாண்டு கொண்டிருக்கும் நாடுகள் இன்னும் பல தொழில்நுட்பங்களை கையாண்டு, பல புதிய ஆயுதங்களை போட்டி போட்டுக் கொண்டு கண்டு பிடித்துக் தான் இருக்கின்றன. அந்தவகையில் இங்குள்ள யுத்த தாங்கியும் ரஷ்ய நாட்டின் ஒரு தயாரிப்பாகும். T - 80 இதுவாகும். இத்துடன் 12.5 cm ஏவுகணை தொகுதியும் இதனுள் உள்ளடங்கியுள்ளது. மற்றும் அதிக தூரம் பாயும் ஏவுகணைகள், தன்னியக்கத் துப்பாக்கிகள் என்பன இதில் உள்ளது. இந்தியாவின் தயாரிப்பான அர்ஜுன் யுத்த தாங்கிகளை விட இது மேலானது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.









# சுவர்க்க நகரம்

இங்குள்ளது ஏதோ வெளிச்ச வீடு போல் இருக்கிறதா? இல்லை. இது சுவர்க்க நகரம் என்று அழைக்கப்படும் டுபாய்யில் உள்ள ஹோட்டல் ஒன்றின் தோற்றமாகும். இது புர் அல் அராப் என்றழைப்படுகிறது. இது கிட்டத்தட்ட 320.94 மீற்றர் (1,052 அடி) உயரம் ஆகும். இந்த ஹோட்டலானது பாய்மரத்தின் வடிவில் கட்டப்பட்டது தான் இங்குள்ள முக்கிய அம்சமாகும். இவ் ஹோட்டல் நில அளவையில் 111,480$M^2$ பரப்பாகும் அளவை எடுத்துக் கொண்டதாம்.





ஆர்த்தி பூரி
2005

# க்ரைம் த்ரில்லர் கதையாக உருவாகும் '2005' படம்!

மல்ட்டி லிங்க் புரொடக்ஷன்ஸ் என்ற புதிய பட நிறுவனம் தயாரிக்க, பிரபல மலையாளப்பட இயக்குநர் விஜய்ரோஷன் இயக்கும் முதல் தமிழ்ப் படம் - '2005'.

தன் முதல் தமிழ்ப் படம் வெற்றிப் படமாக அமைய வேண்டும் என்ற ஆசையில் அனைத்துத் தரப்பு மக்களையும் கவரும் வகையில் க்ரைம் த்ரில்லர் கதையைத் தேர்வு செய்திருக்கிறார்.

'2005' படத்தின் தலைப்பு மட்டுமல்ல, கதையும் வித்தியாசமானதுதான்.

உச்ச கட்டம், சிகப்பு ரோஜாக்கள், மன்மதன் வரிசையில் பரபரப்பாகப் பேசப்படும் க்ரைம் த்ரில்லர் படமாக உருவாக்கப்படும் இந்தப் படத்தில் மும்பையைச் சேர்ந்த ஆர்த்தி பூரி கதாநாயகியாக அறிமுகமாகிறார்.

இவர் தவிர, கரிஷ்மா, ஷிக்காஷாஹிஜ் என்ற இரண்டு மும்பை நடிகைகளும் 2005 படத்தின் மூலம் தமிழுக்கு அறிமுகமாகிறார்கள். இவர்கள் மூவரும் நடிப்பில் மட்டுமல்லாது கவர்ச்சியிலும் போட்டி போட்டுக்கொண்டு கலக்கியிருக்கிறார்கள். போதாக்குறைக்கு ஜுனியர் சில்க்கின் ஆட்டம் வேறு. மொத்தத்தில் '2005' படம் இளைஞர்களை ஈர்க்கும் படமாக இருக்கும் என்பது நிச்சயம்.


---

ஐயா, சந்திரமுகியில் கவர்ச்சி விஷயத்தில் அடக்கி வாசித்த நயன்தாராவை 'கள்வனின் காதலி' படத்தில் செமத்தையாக பிழிஞ்சி எடுத்திருக்கிறார்களாம். சாது மிரண்டால் காடுகொள்ளது என்பதுபோல் ஒட்டுமொத்த யூனிட்டையே வாய்பிளக்க வைத்துவிட்டாராம் நயன்தாரா.

---

'அ....ஆ...' படத்தின் நாயகி நிலாவுக்கு தமிழில் நம்பர்-ஒன் இடத்தை பிடிப்பதுதான் நோக்கமாம். அதற்கு என்னென்ன யுக்திகளைக் கையாண்டால் எளிதில் இலக்கை அடையமுடியுமோ அப்படிப்பட்ட திரைமறைவு கலாசாரங்களை கடைபிடிக்கத் தொடங்கிவிட்டார் நிலா. இதற்கு நடிகையின் பெற்றோரும் முழு ஒத்துழைப்புக் கொடுக்கிறார்களாம்.

---



'கிச்சா வயசு 16' படத்தில் கடைசியாக நடித்திருக்கும் சிம்ரன், டெலிவரி ஆனதும் மறுபடியும் சினிமாவில் நடிப்பேன் என்று ஏற்கனவே சொன்னதை மனதில் கொண்டு டெலிவரி ஆனதும் முதல் ஆளாக புக் பண்ண சில கம்பெனிகள் காத்திருக்கின்றன.

---

'ஜோ...கா' நடிகையின் பெயரையே தனது மகன் சூர்யா வேதமந்திரமாகச் சொல்லிக் கொண்டிருந்ததால் சிலகாலம் மகனிடம் 'கா' விட்டுக் கொண்டிருந்த சிவகுமார், திடீரென்று ஒருநாள் மகனை அழைத்து, பச்சைக்கொடி அசைத்ததோடு, 'தங்கை திருமணம் வரை நீ பொறுமை காக்க வேண்டும்' என்றும் கண்டிஷன் போட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

---


மூன்று முறை ரஜினிக்காக கதை தயார் பண்ணிக் காத்திருந்தும் அவரது கடைக்கண் பார்வை தன்மீது விழாமல் போனதால் மனமொடிந்துபோன கே.எஸ்.ரவிக்குமார், கோவில், குளம் என்று அலையத் தொடங்கிவிட்டார். யாராவது அருள்வாக்கு சொல்கிறார்கள் என்று கேள்விப்பட்டால் போதும்.... உடனே அவர்களை அழைத்து தனது எதிர்காலம் பற்றிக் கேட்டறிகிறார்.

---

பிரபல பாடகர் ஹரிஸ் ராகவேந்திரா கதாநாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடியாக கீர்த்தி நடிக்கும் படம் 'கற்பனை'. ஒரு பெண் அதிகமான கற்பனை செய்தால், அதன் விளைவும் விபரீதமும் எப்படியிருக்கும் என்பதை சித்திரிக்கும் படமாக கற்பனை உருவாகி வருகிறது. இந்தப் படத்தில் காதல், பாசம், சஸ்பென்ஸ், நகைச்சுவை, குடும்ப செண்டிமெண்ட் என இரசிகர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தும் அனைத்துக் காட்சிகளும் இடம்பெறுகின்றன.

ஹரிஸ் ராகவேந்திரா-கீர்த்தி ஜோடியாக நடிக்க, பார்வதி பிலிம்ஸ் தயாரிக்கும் 'கற்பனை' படத்தில் மற்றொரு ஜோடியாக சுதி நம்பியார் - அர்பிதா நடிக்கிறார்கள். இரண்டு கதாநாயகிகளும் பாடல் காட்சிகளில் தாராளமாகக் கவர்ச்சி காட்டி நடித்துள்ளனர். இவர்களுடன் ராஜீவ், ஸ்ரீகாந்த், மயில்சாமி, பெஞ்சமின், 'காதல்' சுகுமார், சிரிப்பு சிக்கு, கிங்காங், சரண், சின்னதம்பி, மார்த்தாண்டம் சின்ராசு, ஸ்ரீலேகா, நிம்பி மற்றும் பலர் நடிக்கிறார்கள். இந்தப் படத்தில் அஜிஷ்நாயர் என்ற மலையாள வில்லன் அறிமுகமாகிறார்.

ஜே.ஜே.காலனி மற்றும் இரண்டு மலையாளப் படங்களை இயக்கிய அசோக்ராஜ் இந்தப் படத்திற்கு விறுவிறுப்பான திரைக் கதை எழுதி, இயக்கி வருகிறார்.



பெப்ரவரி 14

சோனியா அகர்வாலின் அங்கங்களில் ஆங்காங்கே சதை மடிப்புகள் தொங்குவதைக் கண்ட அன்புக்குரிய இயக்குநர், இப்படியே விட்டுவிட்டால் மும்தாஜ் மாதிரியாகி குலுக்கல் நடிகையாகிவிடுவாய். அதனால் முதலில் உடம்பைக் குறைப்பதற்குப் பார் என்று ஆணைபோட, தண்டால் போடுவது, குண்டால் தூக்கி வேலை செய்வது என்று உடம்பைக் குறைக்கத் தொடங்கியிருக்கிறார் சோனியா அகர்வால்.

---

'தென்றல்' படம் தன்னைப் பேசவைக்கும் என்று எதிர்பார்த்து ஏமாந்துபோன சுமித்ராவின் மகள் உமா, இப்போது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்று பிஸி நடிகையாகிவிட்டார். அதேபோல அட்ஜஸ்ட்மெண்ட் சமாச்சாரத்தில் இன்னமும் நோ என்ட்ரி போர்ட்டை கழற்றவே இல்லை உமா.

---

தம்பியை ஹீரோவாக்கும் பொருட்டு 'துள்ளும் காலம்' படத்தைத் தயாரித்த வினிதாவுக்கு அடிமேல் அடி. 60 இலட்சம் பட்ஜெட் போட்ட இயக்குநர், படத்தை தொண்ணூறு இலட்சத்தில்தான் முடித்துக் கொடுத்தாராம். ஆனால் அப்படி எடுத்த படத்தை வாங்குவதற்கு ஆளே இல்லையாம். அதனால் ஒரு காலத்தில் வாய்ப்புக்காக தயாரிப்பாளர்களுடன் இரகசிய சந்திப்பு நடத்தியதைப் போன்று இப்போது விநியோகஸ்தர்களுக்கு ஹோட்டலில் பார்ட்டி வைத்து அவர்களின் தலையில் படத்தைக் கட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார் வினிதா.

---



விக்ரம் - சதா
அந்நியன்

சரத்குமார் கால் வைத்தாலே அந்தக் கம்பெனி காலி என்கிற நிலை உருவாகியிருப்பதால் ஏற்கனவே அவரை வைத்துப் படம் பண்ணிய கம்பெனிகளெல்லாம் ஓரங்கட்டத் தொடங்கிவிட்டன. இதனால் மார்க்கெட்டை தக்கவைத்துக்கொள்ளும் முயற்சியாக படம் முடியும் கடைசி நேரத்தில் தான் பைனான்ஸ் உதவி செய்து தருவதாகச் சொல்லி சில சின்னக் கம்பெனிப் படத் தயாரிப்பாளர்களுக்கு வாக்குறுதி கொடுத்து, தன்னை வைத்துப் படம் பண்ண வற்புறுத்தி வருகிறார் சரத்.

---

சங்கவியை படம் விஷயமாகச் சந்திப்பதற்குச் செல்லும் நபர்கள் அவர் வீட்டுப் பக்கம் அமைச்சர்களின் பி.ஏ.க்கள் உலவுவதைக் கண்டு, நடிகையைச் சந்திக்காமலே திரும்பி வந்துவிடுகின்றனர். நடிகையும் இப்போது தனக்கு அரசியல் செல்வாக்கு மிகுதியாகிவிட்டதால் சினிமாவையும் சினிமாக்காரர்களையும் பெரிதாக மதிப்பதில்லை.

---


தொடையழகி ரம்பா வீழ்ந்துவிட்டார் என்றுதான் பலரும் கருதுகிறார்கள். ஆனால் ரம்பாவோ மீண்டும் அடுத்த ரவுண்டிற்குத் தயாராகிவிட்டார். உடம்பையும் தயார்படுத்திக்கொண்டு தென்னிந்திய சினிமா மட்டுமின்றி, இந்தி சினிமா வரை ஆதிக்கம் செலுத்துவதற்கான வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.


---

ஜெயம் ரவியின் மார்க்கெட் சூட்டில் இருப்பதால் அவரிடம் கதை சொல்வதற்காக புதுமுக இயக்குநர்கள் படையெடுக்கின்றனர். ஆனால் அப்படிச் செல்பவர்களிடம் கதையேதும் கேட்காத ரவி, எதுவாக இருந்தாலும் அப்பாவிடம் பேசுங்கள் என்று திருப்பிவிட, அவரோ கதையா அப்படியென்றால் என் மகன் ராஜாவைப் பாருங்களேன் என்று திருப்ப, இன்னொரு டைரக்டரிடம் போய் எப்படி கதையைச் சொல்வது என்று வெறுப்புடன் திரும்பிக் கொண்டிருக்கின்றனர் இயக்குநர்கள்.

---

விஜயகாந்த் அரசியலுக்கு வருவது உறுதியாகி விட்டது. தனது இரசிகர் மன்ற நற்பணி விழாவில் கலந்துகொண்டு பேசிய விஜயகாந்த், பத்திரிகையாளர்களிடம் "நான் அரசியலுக்கு வருவது அரசியல்வாதிகளுக்குப் பிடிக்கவில்லை. என்னை மிரட்டுகிறார்கள். மத்திய அரசு அதிகாரத்தில் இருப்பவர்கள் நெருக்கடி கொடுக்கிறார்கள்" எனச் சொல்லியிருந்தார். ஆனால் இதைச் செப்டெம்பரில் தனது கட்சியின் துவக்கவிழாவன்று யார் என்பதைச் சொல்லுவேன் எனச் சொல்லியிருந்தார். இதுகுறித்து நாம் விசாரித்தபோது, விஜயகாந்திற்கு மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு மூலமாக நெருக்கடி வந்திருக்கிறது. தேசிய நெடுஞ்சாலைத்துறையின் கீழ் சென்னை கோயம்பேடு அருகே கட்டப்படவிருக்கும் ரிங்ரோடு மற்றும் மேம்பாலங்களுக்காக நிலம் கையகப்படுத்தும் விஷயத்தில் விஜயகாந்திற்குச் சொந்தமான 'ஆண்டாள் அழகர் திருமண மண்டபத்தில், பாதியும் கையகப்படுத்தப்படவிருப்பதாகப் பேச்சு அடிபடுகிறது. இதைத்தான் நெருக்கடி என்கிறார் விஜயகாந்த்.





நவதீப் - சமிக்ஷா
அறிந்தும் அறியாமல்

## பணம் முக்கியமல்ல.....!

### -தியா அதிரடிப் பேட்டி!

'கற்க கசடற' படம் ரிலீஸ்....'கோடம்பாக்கம்' ஒரு ஷெட்யூல் போய் வந்தாச்சு....என சந்தோஷத்தின் உச்சத்திலிருக்கிறார் தியா.

"ஒரு நடிகையாவது, ஆயிரத்தில் ஒரு பெண்ணுக்கு அல்லது இலட்சத்தில் ஒரு பெண்ணுக்கு கிடைக்கிற வாய்ப்பு. இதில் சிலர் பணத்திற்காகவும், சிலர் புகழுக்காகவும் நடிக்க வருகின்றனர். வெகு சிலருக்கே கலையின்மீது ஆர்வம் ஏற்பட்டு நடிக்க வருகின்றனர். அந்த வெகு சிலரில் நானும் ஒருத்தியாக இருக்க வேண்டும் என்பதுதான் நான் சினிமாத் துறைக்கு வந்ததன் நோக்கமே" என தனது பாதையைத் தெள்ளத் தெளிவாகக் கோடி காட்டிப் பேசுகிறார் தியா.

**ஸோ, படங்களில் சம்பளமில்லாமலே நடிக்கிறீர்கள் போல?**

அப்படியல்ல....எல்லா வியர்வைக்கும் ஒரு விலை இருக்கு. விதை போடறோம்...அது விளையாமல் போனா? யாருமே விதைக்க மாட்டாங்களே...ஆனா, சினிமாவில் எதிர்பாராமல் விதைக்கலாம். வியர்வைக்குப் பலனா அது பணத்தையும் புகழையும் தானா கொண்டு வரும். நான் பணத்துக்காக எந்தத் தயாரிப்பாளரையும் வருத்தப்படுத்துவதில்லை.....I am trusting for Cinema.

**கற்க கசடற ஹோர்டிங் விளம்பரம் கூட நீங்க வாங்கித் தந்ததா சொல்றாங்களே? அதெப்படி நடந்தது?**

இதென்ன சார் கேள்வி? ஒரு விளம்பரம் வாங்க ஓனர் தெரியணுமா என்ன? அந்த விளம்பரத்தை எடுத்த ஏஜென்சியிடம் சொன்னேன்...அவர்கள் உதவினார்கள். இதை ஒரு நல்ல நோக்கத்தோடு செய்கிறோம். அதுவே தவறாக்கப்பட்டால்.... இன்னொருமுறை, மற்றொரு படத்திற்கு உதவ முடியுமா? சொல்லுங்கள். ஏன் நமக்கு வம்புன்னுதானே தோணும். இப்போ அப்படித்தான் தோணி இருக்கு. நான் நடித்ததோடு முடிந்தது. விளம்பர நிறுவனமா? தெரியாதே...என்று மறுத்திருந்தால்....இந்த மாதிரி ஒரு பொய்ச் செய்தி உருவாகக் காரணமாக அமைந்திருக்காது.

தியா ஒரு 50-50 கேர்ள். எப்படித் தெரியுமா? இவங்க ஒரு ஷர்மா பேமிலி. பாதி பழக்கவழக்கம் நார்த் இண்டியன்ஸ் மாதிரியும், பாதி தென்னிந்திய பழக்க வழக்கமாகவும் இருக்கும்.

## விக்ரம் - சதா —அந்நியன்

## விஜய் -சிவகாசி



விக்ரம்
அந்நியன்

பிடிக்காத லிஸ்ட் : பொய், உம்முச்சு, முன்னாடி ஒண்ணு பின்னாடி ஒண்ணு பேசுறவங்களை, விளம்பரப் பாணியில் சொல்லி விடலாம். சுத்தமாகப் பிடிக்காது.

பிடிச்ச லிஸ்ட் : ஃபிராங்கா பேசுறவங்க, ஸ்ட்ரெய்ட் பார்வர்டா சிந்திக்கிறவங்க, சிரிக்கத் தெரிஞ்சவங்க, தோல்வியைத் தழுவி போராடி ஜெயிச்சவங்க.

விக்கல் எடுத்தால்கூட ஆறுமுறை விக்கல் எடுக்க வேண்டும் என்று நினைப்பாராம். பல் துலக்கிவிட்டு வாய் கொப்பளிப்பதுகூட எண்ணி 6 முறை நடக்கும். காரின் எண்கூட ஆறில்தான். காரணம் ராசி எண் - 6.

கடவுள், பேய் இரண்டுக்கும் பயம் உண்டு. ஆனா எல்லாத்துக்கும் பயந்துபோற பொண்ணு இல்லீங்க.

கோ கார்ட்டிங் கார் ரேஸ் பாண்டிச்சேரி போய் திரும்பும் வழியில் முக்கியமாக செய்யும் ஒரு காரியம்.

## ஐஸ்வர்யா ராய்க்கு உறவா?

### -திருவாய் மலர்கிறார் லஷ்மிராய்

**பெல்காம் ஸ்வீட் சாப்பிட்டிருக்கீங்களா?**

அவ்வளவு டேஸ்ட்டா இருக்கும்.
அதே ஊரிலிருந்து தித்திக்க தித்திக்கப் புறப்பட்டு வந்திருக்கும் நாயகிதான் லஷ்மிராய். மான் விழி மலர்த்தி, புன்னகை சிவக்கச் சிவக்கப் பேசுகிறார்.
அடடா! கேளுங்களேன்.....

"எங்க குடும்பம் ராய் குடும்பம். அப்பாவுக்கு பிஸினெஸ் இருக்கு. மொத்தம் மூணு பொண்ணுங்க.

கடைக்குட்டி நான். அப்பா பையனை எதிர் பார்த்துக்கிட்டிருந்தாலும், பொண்ணா வந்து பொறந்தவ. மற்ற ரெண்டு பேரையும் விட, செல்லம் எனக்கு ஜாஸ்தி. பையனென்ற நினைப்பிலேயே என்னை கிருஷ்ணான்னு தான் கூப்பிடுவார்.

**"யம்மா! பிறக்கும்போதே நடிகையாகணும்னே பொறந்தீங்களா? இல்லை! நடிகையாகப் போறேன்னு சொல்லியே வளர்த்தாங்களா?" - கேட்டோம்.**

படபட சிரிப்பு லஷ்மியிடமிருந்து....சிரிப்பின் விளிம்பில் பதில். "அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை. நாம என்ன நினைச்சி வளர்ந்தாலும் வேற ஒண்ணாதான் வளர்கிறோம், வாழ்கிறோம். என்னைப் பொறுத்தவரை நான் நடிகையாகவே வளர்ந்தேனோ என்னவோ.....

**'கற்க கசடற' ரிலீஸாகி இருக்கு. படம் பற்றி உங்க அபிப்பிராயம் என்ன?**

"நான் உட்பட ஹீரோ, கேமராமேன், மியூசிக், வசனம், வில்லன்னு படம் முழுக்க புதுமுகங்கள். இவ்வளவு புதுமுகங்களை வைத்து ஒரு படம் செய்ய 'தில்' வேணும். அதை புதுமுகங்களோட படமா தெரியாம காட்டணும். அதை சார் செய்திருக்கார். எங்க மேல, அவருக்கு எப்படி நம்பிக்கை வந்ததுன்னு தெரியலை.. ரொம்ப தைரியமா, அழகா படம் செய்தார்னுதான் சொல்வேன்."

**கிளாமர் தூக்கி வாரிப்போடும் அளவிற்கு பண்றீங்களே....?**

"அப்படியா பண்றேன். இன்னிக்கு இளைஞர்களின் கண்களை மயக்கணும். அதையும் தாண்டி, இதயத்தையும் தொடணும். கிளாமரில் அழகா வந்து முதலில் கண்களைச் சீண்டிட்டா அப்புறம் ஈஸியா நடிச்சி இதயத்தைப் பிடிச்சிடலாம். இதுதான் நம்ம ரூட். அதற்காக உறுத்துகிற மாதிரி நான் செக்ஸியா பண்றதில்லை. சினிமாவுக்கும், இரசிகனுக்கும் கிளாமர் தேவைன்னும்போது அதைத் தருவதில் தப்பில்லை...."


**நீங்க ஐஸ்வர்யா ராய்க்கு சொந்தமாமே அப்படியா?**

"யார் இந்தப் புரளியைக் கிளப்பிவிட்டது? அவங்களும் பெல்காம். நானும் பெல்காம். நானும் ராய் ஃபேமிலி. அவங்களும் ராய் ஃபேமிலி! ரெண்டு பேருக்கும் இரத்த சம்பந்தம் எப்படியும் இருக்கும். நெருங்கிய உறவு முறையெல்லாம் கிடையாது. ஆனா, இப்போதான் நெருங்கிட்டோமே....அவங்களும் நடிகை! நானும் நடிகை! அந்த உறவைவிட, இந்த உறவு இருக்கட்டுமே!"

## சி னி வி சி ட்



ரவி
தாஸ்



விஜய்
சிவகாசி



சிநேகா - அர்ஜுன்
சின்னா

இளைய கவிகளின் இதய ஊர்வலம்!

# தேன் கிண்ணம்

## பெண்ணின் மேன்மை



உன் கவிதைகளுக்கு
கருப்பொருளாய்
பெண்ணை
எடுத்துக் கொள்!!

கலவிக்கு மட்டுமே
உருவியாய் கையாளு!!

சமையலுக்கும்...
அழுக்காடை
துவைப்பதற்கும்
வீட்டைப் பெருக்கி
சுத்தம் செய்வதற்கும்..
ஓர் இயந்திரமாய்
அவளை பயன்படுத்து!

அவளுக்குள்ளும்
ஒரு இதயம்
இருப்பது மறந்து
அவள் உணர்வுகளுக்கு
மதிப்பளியாது...
உதாசீனம் செய்!!

உன் அன்புக்காக.....
ஆறுதலான
வார்த்தைகளுக்காக
அனுதினமும்
ஏங்கிடும்
பெண்மையை
புறக்கணித்துவிட்டு...

பொன்னையும்
புகழையும் பொருளையும்
தேடித்தேடி அலை!!

விலைமாதரிடம்
உன் செல்வத்தையும்
தேக நலத்தையும்
பறிகொடுத்து
பால்வினை நோய்
வாங்கு!!!

இவ்வளவும்
செய்த பின்னும்
நீ நோயுற்று
பாயில் விழுந்ததும்
பாவிமனம்
உனக்காக
புழுவாய்த் துடித்தழுமே

அதுதான்
பெண்மையின் மேன்மை!....?

- யாழுமீர் மர்சூன்.

## இருள் விலகும் நேரம்...

வரட்சி பெரு நிலத்தில்
மண் தின்று
மாடு நடத்தும் ஜீவிதம்...!

சிறை கூடங்களின்
வக்கிர வன்முறையில் உயிர்
கரைத்துக்
கொண்டிருப்பவனின்
வலி நிறைந்த நம்பிக்கை...!

வடக்குக் கிழக்கில்
மலைநாட்டில்
சிறுபான்மையினருக்கு
எதிராய் வெடிக்கும்
துப்பாக்கிகளை
ஒடித்துப் போடும் புரட்சி....!

பெண் வன்முறைக்கெதிராய்
ஆணின் தலையுடைக்க
தூக்கிப் போடும் கல்....!

உயிர் கொன்று
புசித்துக் கொண்டிருக்கும்
வாய்களில் நெளியும்
புழுக்கள்...!

மேல் கொத்மலையில்
மூழ்கும் சிறிசு
மூடுண்டு போகும்
இயற்கை...!

அழகு கோர்த்து
மௌனம் பூசி
சூன்யம் உடைக்கும்
சுயம்....!

மனித வாழ்வு கோட்டை
தற்காக்க இதயத்தை என்னுள்
இருத்திவிட்ட மனிதநேயம்....

என்றவாறு....!
எனதின் வாழ்வு
அர்த்தப்படுகையில்
என் பூமியின் நிரந்தர இருள்
விலகிக் கொண்டிருக்கிறது
மெதுவாய்....
மெதுவாய்....
மெதுவாய்....

—சண்முகம் சிவகுமார்,
பத்தனை.

## சாகாத இதயம்

காதப் பெண்ணே
ஓட்டையிட
நான் ஒன்றும்
ஓசோனல்ல....!

பார்வை
களை
பரிமாறிக்
கொண்டு
வாழ்ந்த
காலமெல்லாம்
பாழாய்ப்
போனதடி!

கொண்டு
இருக்கிறது!

அவளுக்காய்
ஏங்கி,
ஏங்கி
ஏக்கமெல்லாம்
வீக்கமாய்
வெடித்துப் போனது!

ஒற்றைத் தலைவலி
உயிர் பறித்த
போதெல்லாம்
ஒருதலை காதல்தான்
உயிர் தந்து
கொண்டிருந்தாள்!

ஓர் இருட்டல்
உழவனை
ரமாற்றியதைப்போல
நீ என்னும்
நம்பிக்கை
நீரில் உடைந்த
நிலவாய்
மூழ்கிச் செத்தது!

நான்
சவமான பின்னும்
சாகாது இதயம்
சாகா - உன்
சுவாசப்பை
சுவாசித்துக்
கொண்டிருப்பதால்!

உயிர் உரசும்
போதெல்லாம்
இதயம்
அறுக்கப்பட்டுக்

—நஸீம் ஜுமி, புத்தளம்.

## உறங்காத புதைகுழி

ஒருமுறை தோண்டிய
புதைகுழிகள் - மறுபடியும்
தோண்டப்படுகின்றன
உண்மை புலருவரை.....
மீண்டும் - மீண்டும்.

ஆயிரம் கட்டைகள்•
ஒரு குழியில் - புதையுண்டும்
அங்கு,
ஒரு கட்டையில்தான்.....
தடையத் தேடல்.

தேடிய கட்டையிலிருந்து
தேடப்படாத
அடையாளங்கள் - அந்தக்
குழியினை
தாழ்த்திப்போகிறது.

என்றாலும்
செத்த பிணம் - ஒன்று
எத்தனை - உயிர்களை
நிம்மதி கெடுக்கிறது
மரணப்படுக்கையிலும்.

—செயின் தம்பி லியாம்,
கல்முனை – 06.

## வசந்த காலம்

பேசு......
என் தூசுதுணிக்கைகளோடு,
புளகம் கொள்.....
ஒரு பூவாசத்தின் புனைப் பெயரோடு,

உயிரின்
பெயரெச்சங்களில்
முன்கோபத்தோடு முனகு....

வந்தகாலம் தொடங்கிற்று
கண்களால் கலப்பை பூட்டி
என் வயலில்
உழவு செய்...
சரிந்து விழும்
உன் ஒற்றை முடியை
நெற்றியில் தடுத்து வை
அதைக் குளிப்பாட்டித் தலைதுவட்ட
சன்சிலக் கனவுகளோடு
வருவேன் ஓர் நாளில்....

ஒவ்வொரு தடவையும்
உனை எழுதத் தொடங்கும்போது
உயிரெழுத்துக்கள்
மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றன...
ஒவ்வொரு நிமிடமும்
உனை பேசத் தொடங்கும் போது
குயில்கள் முகம் கழுவிக்
கண்ணாடி பார்க்கும்
என் உள்நாக்கில்.....

—நியாஸ் முஸாதிக்,
கிண்ணியா – 05.

## சுவனம் பெறுக!

கல், ஒழுக்கம், கண்ணியமும்
கற்பதற்கு கை கொடுக்கும்
'குவலயத்தின் ஒளி' யென்ற
கீர்த்திக்கு உரியோரே!

ஞாலமெல்லாம் இந்நாளின்
ஞாபகத்தில் மட்டுமன்றி
சரித்திர ஏட்டில் தானும்
சுவடாய் பதிய வேண்டுமன்றோ...?
உங்கள் புகழ் கீதம்.

இறைவன் துணையும்
முன்னோர்கள் நல் உரையும்
முன்னோக்கி வைத்தவராய்
பாங்குடனே பாங்கர்களும்
பணியாற்றும் போதகர்களே!

வாழ்த்துகிறோம் உங்களுக்கு
வல்லோன் அவன் துணையில்
சுவனத்தின் உயர்பாகம்
சுகவாரி யாய் அமைய
உங்கள் நல் அகத்துக்காய்.

—உக்குவளை ஜாமிட்ரஸில்,
நிந்தவூர்.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

அனார்–ஈழத்து இளைய பெண் கவிஞர்களில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவர். இவரது "ஓவியம் வரையாத தூரிகை" கவிதைத் தொகுப்பிற்கு, கவிஞர் ஆழியாள் எழுதியுள்ள குறிப்பில் இவ்வாறு சொல்கிறார் :

"ஓவியம் வரையாத தூரிகையில் பெண்ணின் ஆத்மார்த்தமான குரலினை பல்வேறு வடிவங்களில் கேட்க முடிகிறது. இக்குரல் விளிம்பு நிலை வாழ்வை பல வழிகளில் பதிவுசெய்கிறது. அதாவது பெண் என்ற வகையில் இப்பதிவு பால் ரீதியானதாகவும், கிழக்கிலங்கையைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் தமிழ்ப்பெண் என்ற வகையில் பிரதேச, மத, இன, மொழி ரீதியானதாகவும் அமைகிறது. இதைவிட பெண்ணின் வெவ்வேறு வயதுப் பருவங்கள் இக்குரலினோடு தெரிவதோடு, பலவகை உணர்வுகளின் கலவை "ததும்பிச் சிந்துகிற"தையும் மிக அன்னியோன்யமாக உணரக்கூடியதாக உள்ளது."

அனாரின் கவிதைத் தொகுப்பிலிருந்து மூன்று கவிதைகள்.

### வன்மப்படுதல்

சுற்றி வளைத்து
வேலி கட்டி
அதற்குள் என்னைச்
சுவாசிக்கச்
சொல்வதுதான்
நீ காட்டும் சுதந்திரம்

விரிந்தெழுகிற
என் தேடல்களைப்
பரிசோதிக்க
உன் கையில் அதிகாரம்

அதனால்தான்
நினைத்தபடி
நீ சத்திரசிகிச்சை
செய்ய
என் வாழ்க்கை
விபத்திலடிபட்ட
பிராணியாகிவிட்டது

சுயத்தையெல்லாம்
ஒப்படைத்துவிட்டு
வைக்கோல்
பொம்மையாகி
உன் இழுப்புக்கு
ஆட வேண்டுமென்றே
நீ நினைக்கிறாய்

நீ சொல்வதுதான்
வேதம்
நீ காட்டுவதுதான்
உலகமெனில்
எனக்கென்று
இதயமும் கண்களும்
எதற்கு

முன்னேற்பாட்டுடன்
நடத்தும்
தாக்குதலைப் போன்று
திடீர் திடீரென என்னைச்
சுற்றி வளைக்கிறாய்
(எதிலும் முன்னேற
விடாமல்)

நீ வஞ்சித்தவர்களை
மறந்து துரோகி
என்கிறாய்
நீ குற்றவாளியாக
இருந்துகொண்டு
என்னைத் தண்டிக்கிறாய்

நீ ஏவிய சூறாவளி
வெற்றிகரமாய் வீசி வீசி
என் தேசத்தையே
நாசப்படுத்தலாம்

உலகில்
ஒரே காலநிலை
ஒரே அதிகாரம்
நிலைத்திருப்பதில்லை
என்பதை
நீ மறந்து விட்டாய்.

### கோரிக்கை

உனது பணிப்பின் பேரில்
நான் பிறக்கவில்லை
என்னை நிர்ப்பந்திக்காதே

உன் மேற்பார்வையின் கீழ்
"வாழ்வை"
கோப்புகளாக்கி
(அலுமாரி லாச்சிக்குள்)
பூட்டி வைக்கவும் முடியாது

நான் அதிசயப் புதிரோ
இரகசியப் புதையலோ
அல்ல
ஒழித்துப் புதைத்துவிட்டு
பூதமாய் நீ காவல் காக்க

நீ திகட்டி வீசியெறியும்
மிச்சம் மீதியுமல்ல

எனது குரல்
தனித்துவமானது
என் ஆற்றலும் சிந்தனையும்
உறுதியானவை

திருத்தச் சட்டங்களாலும்
புதிய ஏற்பாடுகளாலும்
வேலிகளை
விசாலப்படுத்தாமல்
விலகி நில்

உன்னை வழிபடவும்
உன்னைப் பின்பற்றவும்
உனக்கே அனைத்தையும்
தாரை வார்க்கவும்
வற்புறுத்தாதே

முழுவதும் உறிஞ்ச விட்டு
வெற்றுக் கோதாகி
குப்பையோடு குப்பையாகும்
பைத்தியக்காரத் தியாகத்தை
நான் வெறுக்கிறேன்

"என்னை" எனக்கே
நீ கற்றுத் தந்து போதும்
நீ என்னைக் கற்றுக் கொள்

நீ நினைத்தபடி
சேர்க்கவும் கழிக்கவும்
செப்பனிடவும்
களிமண் பொம்மையல்ல
நான்
முக்கும் முழியும்
மூளையும் உள்ள பெண்

நீ வைத்திருக்கும்
அளவுப் பாத்திரத்தில்
என்னை ஊற்றி வார்த்துவிட
இனியும் எண்ணாதே
மன்னிக்க
உனது பணிப்பின் பேரில்
நான் பிறக்கவில்லை.



### யாருக்கும் கேட்பதேயில்லை

நிறுத்தாத
சாட்டையின் விசையும்
ஓவியங்களின் பாடலும்
கேட்டபடியேதான்
இருக்கின்றன


கடும் பாறைகளில்
மோதி
ஓய்ந்து விடுகின்றது
ஆக்கிரமிப்பிலிருந்து
தப்பிச் செல்ல விரையும்
அலைகள்

வாழ்க்கையின் நிழல்
வரை
துயிலற்ற இருப்பின்
பிண நெடி


மீட்சி பெற முடியாக்
காரிருளில்
இருண்ட சேற்றுப்
பாதையைச்
சமீபிக்கின்ற
அதிசயம் மிகு ஒளிச்
சாரல்
இரட்சிக்குமென்ற
ஆவலில் தான்
நால் திசைகளும்
திரும்பி
மண்டியிட்டிருக்கின்றன

இருந்த போதிலும்
யாருக்கும்
கேட்பதேயில்லை
துளைகள் அடைபட்ட
புல்லாங்குழலினுள்
செத்துக் கொண்டிருக்கிற
கீதம்.

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : கே. நிரஞ்சன்.
வயது : 21
முகவரி : Electrical Division, K.D.S. P.O. Box 3898, Doha - Qatar.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரி.வி.



பெயர் : த.காந்தரூபன்.
வயது : --
முகவரி : பிள்ளையார் கோயில் வீதி, கல்லடி உப்போடை, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு : பத்திரிகை, சோகப் பாடல், கவிதை.



பெயர் : எம்.ஆர்.எம். சப்ராஸ்.
வயது : 19
முகவரி : 71, வை.எம்.எம்.ஏ. நகர், ரத்மல்யாய, புத்தளம்.
பொழுதுபோக்கு : பத்திரிகை.




பெயர் : என்.எஸ் காந்த்
வயது : 23
முகவரி : P.O.Box 80092, Al- Wakara, Doha, Qatar.
பொழுதுபோக்கு : கவிதை பத்திரிகை.




# பூங்கொடி போல் ஆக

சுத்தமான தேனை வாங்கித் தினமும் காலையில் வெறும் வயிற்றில் ஒரு தம்ளர் தண்ணீரில் ஒரு ஸ்பூன் விட்டுக் கலக்கி அருந்த வேண்டும். ஒரு மாத காலமாவது இவ்வாறு சாப்பிட்டு வந்தால், உடலை மெலிதாக்கி, இறுகச் செய்யும் சக்தி தேனுக்குண்டு.

கல்யாண முருங்கை இலை, பூ ஆகியவற்றை இரண்டு கைப்பிடியளவு எடுத்து 4 தம்ளர் தண்ணீரில் போட்டு காய்ச்சி அரை தம்ளராக அது வற்றியதும், அத்துடன் பனங்கற்கண்டு சேர்த்து தினமும் அதிகாலையில் வெறும் வயிற்றில் அருந்தி வந்தாலும் நல்ல பலன் கிடைக்கும்.





நல்ல மிளகுடன் சிறிது சீரகம் சேர்த்து தண்ணீரில் போட்டு நன்றாக அவித்து அந்த நீரை வடிகட்டி தினமும் காலையில் பருகி வந்தால் உடலில் உள்ள கெட்ட நீர் வெளியேறி உடல் ஆரோக்கியமாக மாறும்.

ஒரு அவுன்ஸ் வெங்காயச் சாற்றில் 2 ஸ்பூன் சுத்தமான தேன் கலந்து தினமும் சாப்பிட்டு வர வேண்டும். உணவில் கீரை வகைகளை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சோற்றுக் கற்றாளையை எடுத்து அதன் மேல் தோலை சீவி விட்டு உள்ளே இருக்கும் சோற்றுப் பகுதியைச் சேகரித்து தினமும் 100 கிராம் அளவுக்கு அதில் நன்றாகத் தண்ணீர் விட்டுக் கழுவி சர்க்கரை சேர்த்து மூன்று வார காலம் சாப்பிட்டு வந்தால் உடல் இளைத்துப் பூங்கொடி போல் ஆகும்.

அகத்திக்கீரையும் முருங்கைக் கீரையும் கோவைக் கீரையும் கூட உடல் எடையைக் குறைக்கும். மாற்றி மாற்றிச் சாப்பிட்டு வரலாம்.

பிரண்டை உப்பு அல்லது பிரண்டை பஸ்பம் (சித்த மருத்துவக் கடையில் கிடைக்கும்) இவற்றில் ஏதாவது ஒன்றை தினம் காலையில் ஓர் அரிசி எடை நெய்யுடனும், மறுநாள் காலையில் ஓர் அரிசி எடை இளநீருடனும் மாற்றி மாற்றி உண்டு வர உடலுக்கு எவ்விதக் கெடுதலுமின்றி நிச்சயமாக மெலிவதுடன் எடையும் குறையும்.

இரண்டு தம்ளர் மோருடன் இரண்டு கேரட்டைப் போட்டு மைய அரைத்துக் குடித்து வர, ஒரு வாரத்தில் உடல் இளைக்க ஆரம்பித்து விடும். போதும் என்ற நிலை வந்தவுடன் சாப்பிடுவதை நிறுத்திவிட வேண்டும்.


# காய்கறிகள் தரும் அழகு....!

## கேரட்

வைட்டமின் ஏ சத்து அதிகம் உள்ள காய் இது. சருமத்தை மென்மையாக்கும் தன்மை கொண்டது. கேரட்டை பால் விட்டு விழுதாக அரைத்து, முகத்துக்குச் சோப் மாதிரிப் போட்டுக் கழுவினால் நிறம் கூடும். கேரட் சாற்றுடன் தேன் கலந்து முகத்தில் போட்டாலும் நிறம் கூடும்.

## கொத்தமல்லி

தினமும் இரவில் இதை கொஞ்சம் கசக்கி, அந்தச் சாற்றை உதடுகளில் தடவி வர, லிப்ஸ்டிக் போடாமலேயே உங்கள் உதடுகள் சிவப்பாகும்.



## உருளைக்கிழங்கு

இதன் சாறு எடுத்து கரும்புள்ளிகளின் மீது தடவ, அவை மறையும். கண்களுக்கு அடியில் உள்ள கருவளையங்கள் மறையும். உருளைக்கிழங்கை வேக வைத்து, மசித்து அத்துடன் இரண்டு ஸ்பூன் பால், நான்கு துளிகள் தேன் கலந்து முகத்தில் தடவினாலும் நிறம் கூடும்.

## முட்டைக் கோஸ்

எக்கச்சக்க தாதுப் பொருட்கள் அடங்கியது இது. இதை நன்றாக வேகவிட்டு, அந்தத் தண்ணீரில் முகம் கழுவினால், முகம் மாசு மருவின்றி பளபளக்கும்.

## புதினா

இதன் சாற்றுடன் சம அளவு தண்ணீர் கலந்து பருக்களின் மீது போட அவை விட்டால் போதும் என ஓடும். கரும்புள்ளிகளும் மறையும்.

## அரைக்கீரை

அரைக் கீரையில் சாறு எடுத்து அத்துடன் கொஞ்சம் மஞ்சள் தூள் கலந்து, முகத்தில் தடவி, சிறிது நேரம் ஊறிக் கழுவிப் பாருங்கள். பிளீச் செய்தது மாதிரி உங்கள் முகம் பளீரென்று இருக்கும்.

## பப்பாளி

நன்கு கனிந்த பப்பாளிப் பழக்கூழ் சிறிதுடன், கொஞ்சம் தேன், கொஞ்சம் பால் பவுடர் கலந்து பேஸ்ட் போலச் செய்து, கண்களைச் சுற்றியுள்ள பகுதிகள் தவிர்த்து மற்ற இடங்களில் தடவி, கால் மணி நேரம் கழித்துக் கழுவலாம். வாரம் இரண்டு முறைகள் இப்படி செய்து வந்தால், உங்கள் முகம் ஃபேனர்ஸ் கிரீம் இல்லாமலேயே நிறமாகும்.

## தக்காளி

தக்காளிப் பழத்தை மசித்து, அதை அப்படியே முகம், கழுத்து, கை, கால்களில் தடவி சிறிது நேரம் ஊறிக் கழுவிட சருமத்தில் தென்படும் கரும்புள்ளிகள், வடுக்கள் மறைந்து சருமம் சுத்தமாகும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* -ஷோபா-

## பைனப்பிள் சிக்கின்

4- 6 பேருக்கு போதுமானது

**தேவையான பொருட்கள் :-**

| | |
|---|---|
| கோழிக் கால்கள் | - 1/2 கிலோ கிராம் |
| வெங்காயம் | - 150 கிராம் |
| கேரட் | - 100 கிராம் |
| மிளகுத் தூள் | - அளவிற்கு |
| உப்புத்தூள் | - அளவிற்கு |
| சீனி | - 1 தே.க. (நிரப்பி) |
| கறி மிளகாய்த்தூள் | -2 மே.க. (நிரப்பி) |
| வினாகிரி | - 1 மே.க. |
| சோயா சோஸ் | - 2 மே.க. |
| தக்காளி சோஸ் | - 2 மே.க. |
| தே.எண்ணெய் | - 1/2 போத்தல் |
| அன்னாசி | - 1 பழம் (சிறியது) |
| பச்சைப் பட்டாணிக் கடலை | - 100 கிராம் |
| கோன் பிளவர் | - 2 மே.க |
| தண்ணீர் | - 3/4 தம்ளர் |
| கறிமிளகாய் | - 100 கிராம் |
| மாஜரீன் | - 50 கிராம் |
| உள்ளி | - 4 பல்லு. |

***செய்முறை :-***

கோழிக் கால்களுக்கு உப்புத்தூள், வினாகிரி புரட்டி 1 மணிநேரம் வைத்தபின் கொதிக்கும் எண்ணெயிலிட்டுப் பொன் நிறமாகப் பொரித்தெடுத்துக் கொள்க.

கேரட், வெங்காயம், உள்ளி, கறிமிளகாய், அன்னாசிப்பழம் என்பவற்றைத் துப்புரவாக்கிக் கழுவி, தனித்தனியாக அளவான துண்டுகளாக வெட்டிக் கொள்க.

கடலையை 3 மணிநேரம் ஊறவைத்து அவித்தெடுக்குக.

தாச்சியில் மாஜரினையிட்டு அடுப்பில் வைத்து உருகியதும் அதனுள் வெங்காயம், கரட், கறிமிளகாய் என்பவற்றையிட்டு வதங்கவிட்டு அரைப்பதமாக வதங்கியவுடன் அன்னாசித் துண்டுகளையுமிட்டு நீர்த்தன்மை சுண்டும்வரை வதக்கி அதனுள் மிளகுத் தூள், உப்புத்தூள், மிளகாய்த்தூள், கடலை, சீனி என்பவற்றையிட்டு நன்கு சேர்த்துக் கொள்க.

பின்பு கலவையுள், சோயா சோஸ், தக்காளி சோஸ் என்பன விட்டுச் சேர்த்து, 3/4 தம்ளர் தண்ணீரில் கரைத்த கோன்பிளவர் கலவையும் விட்டு நன்கு சேர்த்துக் கொண்டபின், பொரித்த கோழிக் கால்கள் இட்டுச் சேர்த்துக் கறி திரளத் தொடங்கியதும் இறக்கிக் கொள்க.

# இளமை காக்கும் சத்துணவு!

**ஆ**ரோக்கியமாக வாழ்வது மனிதனின் பிறப்புரிமை என்றாலும், அதற்கு நல்ல சத்தான உணவு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுத்தமான சுற்றுப்புறம், தூய்மையான காற்று, உடற்பயிற்சி மற்றும் ஓய்வு தேவை. ஆனால் இதில் முதல் அடிப்படைத் தேவை எது தெரியுமா? சத்துணவுதான்.

உடல் வளர்ச்சி, சக்தி, தேய்ந்து போன பொருட்களை புதுப்பிக்கும் ஆற்றல், நோய் எதிர்ப்பு, உடலின் ஒட்டுமொத்த பாதுகாப்பு ஆகியவற்றை அளிப்பதுதான் சத்துணவு. எனவே அதில் அதற்குத் தேவையான எல்லா பொருட்களும் அடங்கி இருக்க வேண்டும் என்கிறார் பிரபல அழகுக் கலை நிபுணர் நஸ்ரீன் அமீன். அவர் மேலும் கூறியதாவது:-

ஆண், பெண், குழந்தை மற்றும் வயது, பருவ நிலை உழைப்பு, தட்பவெப்ப நிலைக்கு ஏற்றபடி சமச்சீர் உணவு சாப்பிடுவது நல்லது.


அதிகப் பணச் செலவு இல்லாமல் சத்துக்கள் நிறைந்த உடல் ஆரோக்கியம் காத்து, என்றென்றும் இளமை காக்கும் உணவுகள் பற்றிச் சொல்கிறேன். கவனமாக கேட்டுக்கங்க.


கலப்புத் தானிய உணவு சாப்பிடுவது நல்லது. அதாவது 3 வேளையும் ஒரே தானியம் சாப்பிடுவதற்குப் பதில், கொஞ்சம் அரிசி, கொஞ்சம் கோதுமை, கேழ்வரகு போன்ற மற்ற தானியம் பயன்படுத்துவது நல்லது.

முழு பயறு வகைகள், பருப்பு வகைகளைக் காட்டிலும் விலை குறைவு. இது தவிர 'பி' வைட்டமின்கள் பயறுகளில் அதிகம் உள்ளது. ஆகவே இவற்றை அதிகம் பயன்படுத்த வேண்டும்.

பயறு வகைகளை முளை கட்டி சாப்பிட்டால் நமக்கு கூடுதலான வைட்டமின் பி,சி, சத்தும் கிடைக்கிறது. உணவில் உள்ள இரும்புச் சத்தும் நன்றாக கிரகிக்கப்படும். மேலும் அடுப்பில் வைத்து சமைப்பதற்கான நேரமும் எரிபொருளும் மிச்சம். எனவே இது சிக்கன உணவும் ஆகும்.








தானியமும் பயறும் ஒன்றாகச் சேர்த்து சாப்பிட்டால் அதிலிருந்து கிடைக்கும் புரதச் சத்து, குணத்திலும் தரத்திலும் உயர்ந்திருக்கும். இட்லி, பொங்கல், அடை போன்றவைகளை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

உணவில் தினமும் கீரை இருப்பது அவசியம். ஏனென்றால் அதிலிருந்து 5 வித சத்துக்கள் கிடைக்கிறது. விலையும் மற்ற காய்கறிகளை விட குறைவு. முருங்கைக் கீரை போன்றவைகளை வீட்டுத் தோட்டத்தில் இருந்தே பறித்துக் கொள்ளலாம். இது தவிர சலிப்பு ஏற்படாதபடி பொரியல், கூட்டு, மசியல், துவையல், பச்சடி, கிச்சடி, அடை, வடை, சப்பாத்தி போன்ற பல வகைகளைச் சாப்பிடலாம்.

பல பெண்கள் பால் குடிப்பதைத் தவிர்த்து வருகிறார்கள். இது நல்லதல்ல. பால் அத்தியாவசியமான ஒன்று. எனவே பால் மற்றும் பால் பொருட்களான தயிர், மோர் போன்றவை உணவில் அவசியம் இடம்பெற வேண்டும்.

பழங்கள் சாப்பிட்டால் இளமை அழகுக்கு எழில் சேர்க்கும். குறிப்பாக பப்பாளி, கொய்யாப் பழம், சப்போட்டா, வெள்ளரிக்காய், மாம்பழம், நெல்லிக்காய் போன்றவை ரொம்ப நல்லது.

உடல் தோற்றத்தைப் பொலிவு படுத்துவதில் காய்கறிகளுக்கும் முக்கிய பங்கு உண்டு. பச்சைக் காய்கறிகளை வாரத்தில் 2 நாளாவது சாப்பிட வேண்டும். இதன் மூலம் காய்கறிகளில் உள்ள சத்துப் பொருட்கள் அழிந்து போகாமல் அப்படியே உடலோடு ஐக்கியமாகி விடும். நோய் தடுக்கும் சக்தியாகவும் விளங்கும். காய்கறிகளில் உள்ள நார் பொருட்கள் மலச்சிக்கல், பெருங்குடல் கேன்சர் போன்றவை வராமல் தடுக்கிறது. மேலும் பற்களை உறுதியாக வைத்துக்கொள்ள உதவுகிறது. இவற்றை அப்படியே நறுக்கி, சாலட் ஆகவோ அல்லது துவையலாகவோ அல்லது தயிர் சேர்த்து பச்சடியாகவோ சாப்பிடலாம்.

உணவுப் பொருட்களைச் சமைப்பதிலும் கவனம் தேவை. முடிந்தவரை அதில் உள்ள சத்துப் பொருட்கள் வீணாகிப் போகாமல் சமைக்கும் முறைகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்கிறார் நஸ்ரீன் அமீன்!

# ஒரு தாயின் மகள் 34

சென்ற வாரம்
தன்னிடம் கதைத்து விட்டு பிராட் அவனின் காதலியிடம் சென்று விடவே தனித்து போன பேஜ், தன் குழந்தை ஆலிஸன் அருகில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருக்கும் போது தாரென்ஸன் அவளிடம் வருகிறான்.

எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்


"ஆலிஸன் எப்படி இருக்கிறாள்?" என்றான் அவன், அருகிலிருந்த இன்னொரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு.

"இன்னும் மயக்கம் தெளியவில்லை. இப்போதைக்குத் தெளியாது என்கிறார்கள். ஆனால் மூளையில் வேறு கோளாறுகள் ஏற்படாமல் இருக்கிறதா என்று கவனித்துக் கொண்டேயிருக்கிறார்கள். நினைவில்லாமல் கோமாவில் கிடக்கிறாள். இருந்தாலும் தொடர்ந்து டெஸ்ட் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்." என்றவள், "க்ளோ எப்படி இருக்கிறாள்?" என்று விசாரித்தாள்.

"வலி தெரியாமல் இருக்க மருந்து கொடுத்து வருகிறார்கள். அப்படியும் வலியில் துடிக்கிறாள், பாவம்."

"ஆலிஸன் எப்படி இருக்கிறாள் என்று அவள் தோழிகள் எக்கச்சக்கமாய்ப் போன் பண்ணிக் கேட்கிறார்கள். க்ளோவின் சினேகிதிகளும் கேட்டிருப்பார்களே?"

"போன் பண்ணவில்லை. ஸ்கூல் விட்டதும் நேரே இங்கேயே வந்து விட்டார்கள்" என்று புன்னகையுடன் கூறினான் தாரென்ஸன். "ஆனால் நர்ஸ்கள் அவர்களை அனுமதிக்கவில்லை. சில பத்திரிகை நிருபர்கள் பள்ளிக்கூடத்திற்கு வந்து, இறந்து போன பையன் பிலிப்பைப் பற்றி விசாரித்தார்களாம்.



நீச்சல் குழுவில் பெரிய ஹீரோ, படிப்பில் முதல் ராங்க், தங்கமான பையன் என்று எல்லோரும் சொன்னார்களாம். பேப்பரில் பெரிதாகப் போட்டிருக்கிறார்கள். பார்."

கையோடு கொண்டு வந்திருந்த தினசரியைப் பிரித்துக் காட்டினான் தாரென்ஸன். விபத்தைப் பற்றிய எல்லா விபரமும் புகைப்படங்களுடன் வெளியிட்டிருந்தார்கள். விபத்துக்குள்ளான நாலு மாணவர்களைப் பற்றிய செய்திகளுடன் செனெட்டரின் மனைவி லாரா ஹட்சின்ஸ் பற்றியும் வெளியிட்டிருந்தார்கள். அவளுடைய அழகான புகைப்படமும் பிரசுரமாகியிருந்தது.

லாரா நேரடியாகப் பேட்டி தர மறுத்துவிட்டாள். ஆனால் பிலிப் இறந்து போனதைப் பற்றி அவள் கடும் துயரத்தில் ஆழ்ந்திருக்கிறாள் என்று செனெட்டரின் உதவியாளர் ஒருவர் சொன்னதாகச் செய்தி வெளியிட்டிருந்தார்கள்.

'நானும் ஒரு தாய்தான். இறந்துபோன பையனின் அப்பா, அம்மாவுக்கும், காயம் பட்ட மற்றக் குழந்தைகளின் பெற்றோருக்கும் எப்படி மனம் துடிக்கும் என்று எனக்குத் தெரியாதா?' என்று லாரா அடிக்கடி புலம்பிக் கொண்டிருக்கிறாளாம். செனெட்டரின் உதவியாளர் சொல்லியிருந்தார்.

"படித்தாயா? ரொம்பக் கெட்டிக்காரத்தனமான கட்டுரை" என்றான் தாரென்ஸன். அவன் குரலில் கோபம் இருந்தது. "செனட்டரின் பெண்டாட்டி ரொம்ப நேர்மையானவள், நல்லவள், சிறந்த தாய் என்றெல்லாம் வானளாவப் புகழ்ந்திருக்கிறார்கள் பார். இறந்து போன பிலிப் அளவுக்கு மீறிக் குடித்திருக்காவிட்டாலும் ஓரளவு குடித்திருந்தான் என்று எழுதியிருக்கிறார்கள் கவனி. அந்த அம்மாள் மீது வழக்குப் போடாமலிருப்பதற்காக இவ்வளவும்! சுத்த அயோக்கியத்தனம்!" என்று அவன் சொல்லிக் கொண்டே போனான்.

பேஜுக்கு எதுவும் காதில் ஏறவில்லை. விரக்தியின் உச்சத்தில் இருந்தாள் அவள். தப்பு யார் மீது இருந்தால் என்ன? அதைத் தெரிந்து கொள்வதால் ஆகப் போவது என்ன? ஆலிஸன் ஜம்மென்று எழுந்து உட்காரப் போகிறாளா? அல்லது க்ளோவின் கால்கள் சரியாகிவிடப் போகிறதா? அல்லது இறந்துபோன பிலிப் திரும்பி வரப் போகிறானா? எதுவுமில்லை! எதுவுமில்லை!

ஆலிஸன் இன்னும் மயக்கம் தெளிந்து எழுந்திருக்கவில்லை. அவளுக்கு எப்போது என்ன நேருமோ என்ற பீதியிலேயே பேஜ் இருந்தாள். எனவே பத்திரிகைகளைப் பற்றியும் நிருபர்களைப் பற்றியும் தாரென்ஸன் சொல்வது எதுவும் அவள் காதில் விழவில்லை.

இருந்தாலும் தாரென்ஸன் சொன்னான் : "இந்தப் பத்திரிகைக்காரர்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் பேஜ். ஒரு பிரச்சினையைப் பற்றித் தாங்களாகவே ஒரு அபிப்பிராயத்துக்கு வந்து விடுவார்கள். பிறகு அதற்கு ஏற்ற மாதிரி செய்தியைத் திரிப்பார்கள். இந்த செனட்டரின் மனைவி லாரா விஷயத்திலும் அப்படித்தான் செய்கிறார்கள். செனட்டரின் உதவியாளர்களும் அதற்குத் தகுந்தாப்போல் விவரம் தருகிறார்கள். லாரா சொக்கத் தங்கமாக்கும், அருமையான தாயாராக்கும், ரொம்ப ஜாக்கிரதையாகக் கார் ஓட்டுவாளாக்கும் என்றெல்லாம் நிருபர்களிடம் வர்ணிக்கிறார்கள்."

அவன் பேச்சில் கொஞ்சம் கொஞ்சம் பேஜுக்குப் புரிந்தது. "விபத்துக்குக் காரணம் அந்த அம்மாவாக இருக்கலாம் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். நான் நெடுஞ்சாலைப் பொலிஸாரை மறுபடி விசாரித்தேன். எதுவும் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை என்கிறார்கள். இரண்டு பேர் மேலும் சமமாகப் பழிபோடுகிறார்கள். ஆனால், இறந்து போன பிலிப்பைப் பற்றி அவன் தோழர்கள் எல்லாரும் உயர்வாகவே சொல்லியிருக்கிறார்கள். காயமில்லாமல் தப்பினானே, ஜேமி - ஜேம்ஸை அப்படித்தான் கூப்பிடுகிறார்கள். - அவனும், பிலிப் குடிக்கவேயில்லை என்று சத்தியம் பண்ணுகிறான். அரை கிளாஸ் ஒயின் மட்டுமே குடித்து விட்டு பிறகு இரண்டு கப் பாலில்லாத காப்பி சாப்பிட்டான் என்கிறான். அதில் போதை ஏற்படுத்துவதற்கு வழியே கிடையாது. ஆனால், செனெட்டரின் மனைவி, சாயந்திரத்துக்குப் பிறகு தான் எந்தப் பானமும் குடிக்கவில்லை என்கிறாள். அவள் மரியாதைப்பட்டவள், நிதானமானவள், எல்லாருக்கும் தெரிந்தவள், வயதானவள் என்றெல்லாம் அவள் தரப்பில் ஆதரவு நிறைய இருக்கிறது. ஆகையால் பிலிப்பின் மீதுதான் தப்பு என்கிற மாதிரி செய்தி வெளியிடுகிறார்கள். எனக்கென்னமோ இது நியாயமாகப் படவில்லை."

"எப்போதுமே குழந்தைகள் மீதுதான் பழி விழுகிறது" என்று வருத்தத்துடன் சொன்னாள் பேஜ். "அந்தப் பையன் ஜேமி, அவன் எப்படி?"

"முதலில் அவன் மீது எனக்குக் கடுங் கோபம் ஏற்பட்டிருந்தது. க்ளோ என்னிடம் பொய் சொல்லிவிட்டுக் காரில் போக அவன்தானே காரணம்? அவனைக் கொலை பண்ணினால் கூட பரவாயில்லை என்று ஆத்திரமாக இருந்தேன். ஆனால், அவன் நல்ல பிள்ளையாக இருக்கிறான். அவன் அப்பாவுடன் இரண்டு தரம் போனில் பேசினேன். அவன் ரொம்ப வருத்தமாக இருக்கிறானாம். க்ளோவைப் பார்க்க வேண்டும் என்கிறானாம். இன்னும் இரண்டு மூன்று நாள் போகட்டும் என்று சொன்னேன். பிலிப்பும் அவனும் ரொம்ப வருடமாக நெருங்கிய சினேகிதர்களாம்" என்ற தாரென்ஸன், "பிலிப்புக்கு நாளை சவ அடக்கம் நடக்கிறது. நீ வருவாயா?" என்றான்.

சற்று யோசனை செய்துவிட்டு, "வருகிறேன்" என்றாள் பேஜ். போகலாமா வேண்டாமா என்றுதான் முதலில் யோசனையில் இருந்தாள் அவள். ஆனால், போகத்தான் வேண்டும் என்று இப்போது தோன்றியது. 'அவர்களுக்குப் பிள்ளை போய் விட்டான், நமக்குப் பெண் அனேகமாகப் போய் விட்டாள்' என்று எண்ணிக் கொண்டாள். எவ்வளவு பெரிய துயரத்தில் அவர்கள் ஆழ்ந்திருப்பார்கள் என்பதை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

"பிராட் வருவார் இல்லையா? இல்லாவிட்டால் நான் வந்து அழைத்துப் போகிறேன். சடங்குகள் பகலுக்கு மேல்தான் இருக்கும். குழந்தைகள் கூட வருவார்கள். எப்படியும் சவ அடக்கத்துக்குத் தனியாய்ப் போவது உனக்கு என்னவோ போலிருக்கும்."

'சவ அடக்கம்' என்ற வார்த்தையைக் கேட்கும்போதே பேஜுக்கு உடம்பில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. தெய்வமே! ஆலிக்கு இப்படிப்பட்ட கதி ஏற்படாமல் இருக்க வேண்டும்.

"பிராட் வருவார் என்று தோன்றவில்லை. சந்தேகம்தான்" என்றாள். அவனுக்குப் பிலிப்பிடம் அனுதாபம் இல்லையென்று அவளுக்குத் தெரியும். இன்னும் சொல்லப் போனால் விபத்துக்கு அவன்தான் காரணம் என்று கண்டபடி அவனைத் திட்டிக் கொண்டிருக்கிறான்....

அவள் மனத்தில் ஓடும் எண்ணம் தாரென்ஸனுக்குப் புரிந்தது போலும் "பிராட் என்ன சொல்கிறார்? க்ளீவ்லந்தில் இந்தச் செய்தியைக் கேட்டபோது ரொம்ப ஷாக்காகியிருப்பாரே?" என்றான்.


(தாய் தொடர்வாள்.....)

# அழகு என்று எதை நாம் குறிப்பிடலாம்?




சாய்ராவின் அழகிய முகம் எல்லாரும் அறிந்ததுதான். பஞ்சாபியாக, ஃபிரஞ்சு, இர்ரிஷ், கனடியன் என்ற பல்வேறு அழகிய முகத் தோற்றங்களுக்கு சொந்தக்காரர் சாய்ரா. இவருடைய அழகுக்கு எல்லைக் கோடு இல்லை. புகழ்பெற்ற 'நியூஸ் வீக்' பத்திரிகையும் தன்னுடைய முதல் பக்கத்தில் இவருடைய திருமுகத்தை அலங்கரிக்கச் செய்து 'தி ஃபர்பெக்ட் ஃபேஸ்' (The Perfect Face) என்று புகழாரம் சூட்டியது. இது தவிர மாக்ஸ்ம், FHM, ELLE மற்றும் GQ ஆகிய பத்திரிகைகளும் இவருடைய படத்தை வெளியிட்டுப் பெருமைப்படுத்தின.

பத்து வருஷத்துக்கும் மேலான அனுபவம், நம்ப முடியாத ஆச்சரியமான பல செயல்களுக்கு சொந்தக்காரர், எல்லாத் துறைகளிலும் இவருக்கிருக்கும் பரந்த அறிவு, மற்றும் நிர்வாக ஆளுமை என்று பல்வேறு திறமைகளினால் இவருக்குக் கிடைக்கும் மரியாதை என்று நாம் புகழாரம் சூட்டும் ஒரு நபராக சாய்ரா உள்ளார். அவருடைய ரசிகர்கள் உட்பட அனைவரின் சார்பாகவும் சில கேள்விக் கணைகளைத் தொடுத்தோம். அறிவு ஜீவியான சாய்ராவின் பதிலில் கிடைக்கும் அறிவுரை, 'அழகு' பற்றிய மதிப்பீடு மற்றும் தன்னம்பிக்கை ஏற்படுத்தும் சில கருத்துக்களையும் வாசகர்களுக்கு வழங்குகிறோம்.




**'அழகு' என்று எதை நாம் குறிப்பிடலாம்? அதற்கு ஏதாவது தனியான 'விளக்கம்' உள்ளதா?**

நாம் பார்க்கின்றபோது நமது கண்களுக்கு 'அழகு' என்று தோன்றும் எதுவுமே அழகுதான். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், மனித உணர்வுக்கு எது அழகு என்று தோன்றுகிறதோ அதுதான் அழகு. காதுகளால் உணரப்படும் இனிய சங்கீதம், கண்களால் காணப்படும் இனிய காட்சிகள், அழகிய முகம் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், மனிதர்களுக்கு உணர்வு பூர்வமாக ஏற்படும் உண்மை அழகுக்கு இதுதான் எல்லை என்று வரையறுத்துக் கூற முடியாது.

**உண்மையான அழகு எதுவென்று நீங்கள் பெண்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறீர்கள்?**

நான் சந்தித்த உலகின் தலைசிறந்த சில மாடல் அழகிகள் தங்களை முதலாவது மற்றும் இரண்டாவது இடத்தில் வைத்துப் பார்க்க ஆர்வப்படுகிறார்கள். அதற்காக நேரத்தைச் செலவிடுகிறார்கள். சாதாரண பெண்கள் மற்றவர்கள் தம்மை விரும்பவும், மதிக்கவும் சில நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். மற்றவர்கள் மெச்சும்படியான செய்கைகளை மேற்கொள்ள வேண்டும். முதலில் நாம் அழகாக இல்லை என்று எண்ணக் கூடாது. நாம் அழகாக இல்லையென்று எண்ணுவதே சிறுமைத்தனம். நாம் ஒரு கலர் ஷர்ட்டை அணிந்துகொண்டு, இது நமக்கு அழகாக இல்லை என்று எண்ணுவதை நாம் முதலில் நிறுத்த வேண்டும். உடல் ரீதியாக ஒருவர் பிறக்கும் போதே அழகாகப் பிறந்து விட்டார் என்று புற அழகை மெச்சும்படியான எண்ணத்தை நம் மனத்தை விட்டு அகற்ற வேண்டும்.

**வெற்றி என்பதன் விளக்கம் என்ன? நீங்கள் வெற்றி அடைந்துவிட்டதாகக் கருதுகிறீர்களா?**

வெற்றி என்பது ஒரு செயற்கைத்தனமான உணர்வாக இவ்வுலகில் நிலவுவதாக நான் எண்ணுகிறேன். கூட்டு முயற்சியால் கிடைக்கும் பலனில் ஒரு பகுதியாக வெற்றியை எடுத்துக்கொள்ளலாம். ஆனாலும் வெற்றி என்பது செயற்கைத் தனமான ஒரு போலி உணர்வே. எந்த ஒரு துறையை எடுத்துக் கொண்டாலும் அதில் நிச்சயமற்ற, நம்பிக்கையில்லாத நிலைமையே இப்போது உள்ளது. ஆகவே, வெற்றி என்பதை யாரும் சுலபமாக சில்வர் பிளேட்டில் வைத்து வாங்கிவிட முடியாது. என்னைப் பொறுத்தவரை நான் பங்கேற்ற மாடலிங் துறையில் நான் பெரிய வெற்றியை அடைந்துவிட்டேன். ஆகவே, நான் வெற்றி பெற்றுவிட்டதாகவே என்னைக் கருதுகிறேன்.




**மாடலிங் ஆக விரும்புபவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

மாடலிங் கலைக்கு நீங்கள் தகுதியானவர்தானா என்பதை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள். உயரம், நிறம், அழகு முதலானவை தேவையான அளவுக்கு உள்ளதா என்று பார்த்துக்கொள்ளுங்கள். நல்ல ஏஜெண்டுகள் மூலம் இத்துறையில் நுழைந்து வெற்றி பெறுங்கள்.

**உங்களின் விருப்பமான மேக்கப் எது? ஏன்?**

நான் என்னுடைய ஒப்பனையில்லாத இயற்கை அழகையே விரும்புவேன். என்னுடைய விருப்பமெல்லாம் இயற்கை அழகு மட்டும்தான்.

நன்றி :- D.C.

# உரிமை மடல்...13

*மலை தடை கடந்து*
*புயலிடை எழுந்து*
*உங்களுக்காக*
*ஓர் உரிமை மடல்!*

*உண்மை எதுவென உரத்த குரலெடுத்து*
*உள்ளத வழிகாட்டி எழுதும்*
*உரிமை மடல்!*

*இது*
*செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ்*
*தேவானந்தா அவர்கள்*
*இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்*
*தொடர் மடல்!...*

**அன்பான எம் தேசத்து மக்களே!**

கடல் கடந்து உலகெங்கும் பரந்து வாழும் நேசத்திற்குரிய

எம் தேசத்து உறவுகளே!...

உங்கள் அனைவருக்கும் வணக்கம்!

இன்றைய தினம் எமது தேசத்தின் வீரிய தினம்!

எங்கள் தேச விடியலுக்காக உரிமை கேட்டு எழுந்த சூரிய தினம்!

சுதந்திரமானதும் இறைமையானதுமான எங்கள் தேசத்தின் உதயத்திற்காக முதன் முதலாக தன்னை அஸ்தமனமாக்கிய எங்கள் தேசத்து சூரியன் வேறு யாருமல்ல!

எமது தேச விடுதலைக்காக முதன் முதலாக இந்த மண்ணில் தன்னை விதையாக்கிக்கொண்ட பொன். சிவகுமாரன் என்பவனே!

பழைய சமுதாயத்தின் கருவறையிலிருந்து புதிய சமுதாயம் ஒன்றைப் பிரசவிப்பதற்காக எழுந்து நின்ற மனிதர்கள் யாவரும் இந்த மண்ணின் மைந்தர்களே!... அவர்கள் மக்களின் மரியாதைக் குரியவர்களே!

அவ்வார்த்தைகளுக்கொப்ப சிவகுமாரன் என்ற அந்தத் தியாகியின் நினைவில், நாம் இன்று கரைந்துபோய் நிற்கிறோம்! எமது மக்களின் அளவிட முடியாச் சுதந்திரத்திற்காய் தன்னுயிரை நீத்த தியாகி சிவகுமாரனின் மரணத்தையொட்டி நாம் உங்களுடன் பேச விரும்புகிறோம்!

எமது மக்களின் விடுதலையை நோக்கிய பயணத்தில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாம் போராடியும் வாதாடியும் வருகின்றோம்!

எமது உரிமைப் போராட்டம் என்பது எமது பாரம்பரிய தமிழ்த் தலைவர்களினால் சாத்வீக வழிமுறையில்தான் ஆரம்பிக்கப்பட்டது! எமது மக்களால் முன்னெடுக்கப்பட்ட சாத்வீகப் போராட்ட வடிவம் என்பது குண்டாந்தடியினாலும் துப்பாக்கிக் குழாயிலிருந்து பிறக்கின்ற வன்முறையின் வடிவத்தினாலும் அன்று வெறி கொண்டு அடக்கப்பட்டது!

எமது மக்களின் கலாசாரப் பண்பாடுகள் அன்றைய பேரினவாதத்தினால் விழுங்கப்பட்டன. எமது மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டன! விழியென நாங்கள் கருதிய எங்கள் தாய்மொழி, சம அந்தஸ்து இழந்து இரண்டாம் தரத்திற்குத் தள்ளப்பட்டது! எங்கள் நிலத்தின் பொருளாதார வளங்கள் சுரண்டப்பட்டன!

அதை விட 1972ஆம் ஆண்டு எமது மாணவ மணிகளின் கல்வியில் தரப்படுத்தல் முறை என்பது ஏற்படுத்தப்பட்டு முன்னேற்றத்தைத் தடுத்தது! மேலும் 1974 ஜனவரியில் தமிழ் பேசும் மக்களின் நெஞ்சைப் பிளந்த கொடிய நிகழ்வு ஒன்று வரலாற்றின் வடுவாக எங்கள் உணர்வுகளைச் சுட்டெரித்தது! அதுதான் யாழ். மண்ணில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் அனர்த்தங்கள்!

ஒன்பது தமிழர்கள் அன்றைய தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டார்கள்! கொல்லப்பட்ட எம்மவர்கள் சிந்திய குருதியில் இருந்து எழுந்து நிமிர்ந்து நின்ற சிவகுமாரன் இனி ஆயுதப் போராட்டமே முடிந்த முடிவு என முடிவெடுத்து நின்றான்!

அன்று சிந்திய குருதியும் சிந்தித்த விடயங்களும் எமது சிந்தனையிலும் ஒரு வரலாற்று ரீதியிலான மாறுதலை ஏற்படுத்தி இருந்தது! அந்த மாறுதல்தான் ஆயுதப் போராட்டம் என்ற எமது தீர்மானம்!

சாத்வீகம் இனி சரிப்பட்டு வராது! சமாதானப் பேச்சில் இனி அர்த்தமில்லை! மாற்றத்திற்கான ஒரே வழி ஆயுதம் ஏந்திப் போராடுவதே என்று எமக்கு நாமே கட்டாயக் கட்டளையைப் பிறப்பித்துக் கொண்டோம்!

எங்களது ஆயுதப் போராட்டத்திற்குக் கொம்பு சீவி விட்டவன் சுதந்திரப் போராளி சிவகுமாரன்! அதற்கு அத்திவாரம் இட்டவன் தியாகி சிவகுமாரன்!... எமது தேசத்தின் விடியலை நோக்கிய எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்தவன் அந்த முன்னோடிப் போராளி சிவகுமாரன்!...

ஆனாலும் எமது ஆயுதப் போராட்டம் என்பது வெறுமனே எல்லை பிரித்துக்கொள்ளும் போராட்டமாக நாம் ஒரு போதும் கருதியதில்லை!

உலக மக்களின் எழுச்சிப் போராட்டத்தின் ஒரு பகுதிப் போராட்டமாகவே அதை நாம் எண்ணியிருந்தோம்!

இது தமிழ் பேசும் மக்களின் போராட்டமாக மட்டுமன்றி, எதிர்வரும் காலங்களில் சிங்கள மக்கள் மத்தியில் இருந்து உரிமைப் போராட்டம் ஒன்று வெடித்துக் கிளம்புமேயானால் அதற்கும் ஒரு ஆரம்ப அடியெடுப்பாகவே எமது போராட்டத்தை நாம் கருதியிருந்தோம்!

மலரப்போகின்ற எங்கள் ஈழ தேசம் தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமல்ல, நாளை தென்னிலங்கை சிங்கள மக்கள் நடாத்தும் போராட்டத்திற்கும் ஒரு பின் தளமாகவே இருக்கவேண்டும் என நாம் கருதியிருந்தோம்!

உலகெங்கும் வாழுகின்ற ஒடுக்கப்படுகின்ற தேச மக்களின் நேச சக்திகளாகவே எம்மை நாம் உருவாக்கி வைத்திருந்தோம்!

**சிங்களவர் நம் எதிரிகளல்ல;**
**சிந்திடும் குருதியும் அவர் தவறல்ல.**
**ஆண்டிடும் இனவெறி ஆட்சியின் தவறு;**
**அதைத் தகர்த்திட எழுந்திடு தோழா!** என்று

எங்கள் தெருக்களில் எழுச்சி கீதங்களை எழுப்பியவாறு நாம் அன்று போராட்டக் களத்தில் நின்றிருந்தோம்!

**நாம் ஈழ மக்கள்!**
**நமது மொழி தமிழ்!**
**நம் நாடு ஈழம்** என்று

எமது ஈழ தேசத்தை எங்களது குருதி மையினால் நாங்கள் வரைந்திருந்தோம்!

மதத்தால் வேறுபட்டு நின்றிருந்தாலும் பேசும் மொழியால்... வாழும் நிலத்தால் ஒன்று பட்டு நின்றிருந்த தமிழ் பேசும் முஸ்லிம் மக்களையும் எமது நேச சக்திகளாகக் கருதி ஒன்று பட்ட போராட்டமாக அதை நாம் முன்னெடுத்திருந்தோம்!

தேயிலைச் செடிகளுக்கு இன்னமும் உரமாகிக் கொண்டிருக்கும் இலங்கைத்தீவின் பொருளாதார வளத்தில் பெரும் பங்கு வகித்து வரும் மலையக மக்களையும் இணைத்து நாம் ஒன்றிணைந்த போராட்டமாக இதை முன்னெடுக்கலாம் எனக் கருதியிருந்தோம்!

தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம் என்றும்... நாம் முன்னெடுப்பது ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் என்றும் கருதியதால், ஒடுக்கப்படுகின்ற ஒரு தேசிய இனத்தின் அனைத்து சமூகக் குழுக்களையும் ஒன்றிணைத்து ஒன்றுபட்ட போராட்டமாக நாம் இதை முன்னெடுத்திருந்தோம்!

மொத்தத்தில் எமது போராட்டம் என்பது தெற்காசியப் பிராந்தியத்தில் மட்டுமன்றி, அதையும் கடந்து சர்வதேச அரங்கிலும் ஒரு முற்போக்கு தன்மை கொண்ட போராட்டமாகவே நாம் எமது போராட்டத்தை முன்னெடுத்திருந்தோம்!

ஆனாலும் காலப்போக்கில் எமது இலட்சியக் கனவுகள் கலைக்கப்பட்டன!.... எமது மக்களின் விடுதலைப் போராட்டத்தின் மீது நச்சு விதை எறியப்பட்டது!... தாம் கொண்ட கொள்கையைக் கைவிட்டு தமது தலைமை வெறிதான் தங்களது தாகம் என்று கருதிய புலிகள் நமது போராட்டத்தின் திசை வழியைத் தவறான பாதையை நோக்கி இட்டுச் சென்றனர்.

எதிரிக்கு எதிராக உயர்த்தப்படவேண்டிய புலிகளின் துப்பாக்கிகள் எதிரி யார்? நண்பன் யார் என்று தெரியாமல் உயர்த்தப்பட்டன!

தமிழர்களை - தமிழர்களின் பெயரால் புலிகளே கொன்றொழிக்கும் கொடிய ஒடுக்கு முறை என்பது தமிழ் பாசிசம் என்ற வடிவத்தில் புதிய ஒடுக்கு முறையாக எமது மக்களின் முன்னால் விரிந்து வளர ஆரம்பித்தது!

இந்த இடத்தில் பேரின வாதத்திற்கு எதிராகப் போராடுவதா?... அல்லது தமிழ்ப் பாசிசத்திற்கு எதிராகப் போராடுவதா?... என்று நாம் சிந்தித்துக்கொண்டிருந்த போதுதான் இலங்கை - இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டது!

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எமது மக்களின் இலட்சியக் கனவுகளை அடைவதற்கான ஒரு ஆரம்ப அடியெடுப்பாக நாம் ஏற்றிருந்தோம்! எமது ஆயுதப் போராட்டத்தை நாம் அப்போது இடைநிறுத்தியிருந்தோம்!

இலங்கை - இந்திய ஒப்பந்த நடைமுறை விடயத்தில் நாம் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்பது வேறு விடயம்! ஆனால் அந்தப் பொன்னான வாய்ப்பு சுயலாப நோக்கம் கொண்ட புலிதலைமையினாலும், அதை ஏற்றுக்கொண்டு செயற்பட்ட கட்டுப்பாடற்ற ஈ.பி.ஆர்.எல்.எப். தலைமையினாலும் சிதைக்கப்பட்டது!

அன்று இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு தவறான வழியில் வடக்கு - கிழக்கு மாகாண சபையை, தமிழ் பேசும் மக்களுக்கான பிராந்திய சுயாட்சியை நடைமுறைப்படுத்திய ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் சுரேஸ் பிரேமச்சந்திரனின் தலைமையும் அதைத் தமது தலைமை வெறி பிடித்த சுயலாப அரசியலுக்காக எதிர்த்த புலித் தலைமையும் இன்று கைகுலுக்கி நிற்கின்றார்கள்!

இந்தச் சக்திகள்தான் தமது சொந்த நலன்களுக்காகக் கூட்டுச் சேர்ந்துகொண்டு, நமது மக்கள் மீதான இன்றைய நவீன ஒடுக்குமுறையாளர்களாக மாறி நிற்கின்றனர் என்பதை இந்த இடத்தில் நான் கூறி வைக்க விரும்புகிறேன்!

சமகால இருப்புகளுக்காக எமது கடந்த கால வரலாற்றினை நான் கொச்சைப்படுத்த ஒரு போதும் தயாரில்லை!

அன்றைய ஆயுதப் போராட்டத்தை நாம் ஒருபோதும் பிழையென்று கருதியது கிடையாது! எமது மக்களாகிய உங்களது விடுதலைக்காகவே நாம் ஆயுதம் ஏந்தியிருந்தோம்!

எமது ஆயுதப்போராட்ட வடிவம் என்பது திசை வழி தெரியாமல் தவறான பாதைக்கு புலித் தலைமையினால் இட்டுச்செல்லப்பட்ட போது...

இலங்கை - இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்ட போது.....

எமது ஆயுதப் போராட்டத்தை நாம் முடிவிற்குக் கொண்டுவந்திருந்தோம்!

தவறாக வழிநடத்திச் செல்லப்பட்ட புலிகளது முடிவற்ற ஆயுதப் போராட்டத்தில் சிக்குண்டு முடிவறியாது துயரப்பட்ட மக்களாகிய உங்களை அழிவுகளில் இருந்து காப்பதற்காகவே நாம் எமது ஆயுதப் போராட்டத்தை நிறுத்தியிருந்தோம்!

எமது மக்களின் இலட்சியக் கனவுகளை அடைவதற்காக எமது போராட்ட வடிவத்தை மட்டுமே நாம் மாற்றி அமைத்திருந்தோம்! ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் நின்று எமது மக்களின் அரசியலுரிமைகளை வென்றெடுப்பதற்காக நாம் மாற்று வடிவத்தில் போராடியும் வாதாடியும் வருகின்றோம்!

ஆகவே, எமது அன்றைய போராட்ட வடிவமாக இருந்த ஆயுதப் போராட்டத்தின் தொடக்கப் புள்ளியை இன்று நாம் நினைத்துப் பார்க்கின்றோம்! எமது ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்த சுதந்திரப் போராளி உரும்பிராய் சிவகுமாரனை நாம் இன்று நினைத்துப் பார்க்கின்றோம்!

அரச தரப்பிடம் தான் கைது செய்யப்பட்டு விடக்கூடாது என்பதற்காக இந்த மண்ணுக்காகவும் மக்களாகிய உங்களுக்காகவும் தன்னைத்தானே மாய்த்துக் கொண்ட முதல் போராளியான பொன். சிவகுமாரனை நாம் இன்று நினைவு கூருகின்றோம்!

மக்களை நேசித்ததால், யாழ். செம்மண் தரையில் மரவள்ளித் தோட்டமொன்றில் வீழ்ந்து கிடந்த அந்த முதல்போராளியை நாம் நினைத்துப் பார்க்கின்றோம்!

யாழ். மருத்துவமனையின் கட்டிலில் சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் சாவினை விரும்பி ஏற்று சாய்ந்துவிட்ட அந்தச் சரித்திர நாயகனை நாம் எண்ணிப் பார்க்கின்றோம்!

1952ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி தியாகி சிவகுமாரன் உரும்பிராயில் பிறந்தார். குழந்தை மனம் கொண்ட இனிய சுபாவத்துடன் எல்லோராலும் நேசிக்கப்பட்ட சிவகுமாரன், அடக்குமுறைக்கெதிரான தமிழ் பேசும் சமூகத்தின் பிரதிநிதியான வரலாறு நீண்டதும் நெடியதுமாகும்.

மிக இள வயதிலேயே தமிழ் பேசும் மக்களின் விடுதலையுடன் தன்னை சிவகுமாரன் பிணைத்துக் கொள்வதற்கு அவருக்கு ஆதாரமாகவிருந்தது, மக்கள் மீதான அவரது மானசீகமான நேசிப்புத்தான்.

மக்களை நேசிக்காத யாருமே, மானிட விடுதலை வரலாற்றில் மக்கள் போராளியாக முடியாது! தமிழ் பேசும் மக்கள் மீதான அடக்குமுறைதான் சிவகுமாரன் என்ற இளைஞனை விடுதலைப் போராளியாக்கியது! மக்களின் விடுதலைமீது கொண்ட நேசத்துடனும் காதலுடனுமே மக்கள் விடுதலைக்காக சிவகுமாரன் 1974ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி மரணமடைந்தார். தன்னையே வரலாறாக்கி, ஈழப் போராட்டத்திற்குச் சமர்ப்பணமானார்!

21 வருடம், ஒன்பது மாதங்கள் 9 தினங்களே அவரது வாழ்வு..... ஆனால், தமிழ் பேசும் மக்கள் உண்மையான மக்கள் விடுதலை அடையும் வரை, அந்த நாள் வரும் வரை சிவகுமாரன் வாழ்ந்து கொண்டேயிருப்பார்.

**கண்கள் சிவக்க,**
**நெஞ்சம் கனத்து வலி எடுக்க,**
**உன்னத இத்தினத்தில்**

உங்களுடன் நாம் ஏன் பேசுகிறோம் என்பதை சொல்லித்தான் ஆக வேண்டும்!

தோழன் சிவகுமாரன் கனவு கண்ட தமிழ் பேசும் மக்களின் விடுதலையை எமது தோள்களில் சுமந்துதான் நாமும் ஈழப் போராட்டத்திற்கு வந்தோம்! சிவகுமாரனின் வழியில் சிவகுமாரன் கண்ட கனவை இலட்சியப் படுத்துவதற்கே எம்மை நாம் அர்ப்பணித்தோம்!

எம் இனிய மக்களே! இன்று சுதந்திரப் போராளி சிவகுமாரனின் வரலாறு புலித் தலைமையினால் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது!

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பம் தாமே என்ற ஒரு பொய்த்தோற்றத்தினைக் காட்டுவதற்காக அவனது வரலாற்றை உலகின் கண்களுக்குத் தெரியாதபடி புலித் தலைமை மறைத்து வருகின்றது!

தமிழர்களை, தமிழர்களே கொன்றொழிக்கும் தங்களது பாசிச நடவடிக்கையினை மூடி மறைப்பதற்காகச் சுதந்திரப் போராளி சிவகுமாரன், மாணவர்களுக்காக மட்டுமே- போராடினான் என சித்திரித்துக் காட்டுவதற்காக புலித் தலைமை எத்தனித்து வருகின்றது!

ஆகவேதான், மாணவர் எழுச்சி தினம் என்று சிவகுமாரன் இறந்த தினத்தை புலித் தலைமை பிரகடனம் செய்திருக்கிறது!

ஈபிடிபி. யினராகிய நாம் சுதந்திரப் போராளி சிவகுமாரன் தனியே மாணவ சமூகத்தின் விடுதலைக்காக மட்டும் போராடியவன் எனக் கருதவில்லை!

ஒரு தேசிய இனத்தின் விடுதலைக்காக.... எமது இனத்திலுள்ள சகல தரப்பு மக்களுக்காகவும் முதன் முதலில் ஆயுதம் ஏந்தியவன் அவனே!

எமது மக்களின் விடுதலைப் போராட்டத்தில் மரணத்தைத் தழுவிக்கொண்ட முதல் போராளியும் அவனே!

இதுதான் மக்கள் அறிந்த வரலாறு! உலகறிந்த வரலாறு!... அன்றைய அரசியல் களத்தில் நின்று நான் நேரடியாகக் கண்ட வரலாறு!

சுதந்திரப் போராளி சிவகுமாரன் தனது வாழ்வை தானே முடித்துக்கொண்ட அந்தத் தேச அர்ப்பண தினம் 1974 யூன் மாதம் 5ஆம் திகதி!

எமது மக்களின் விடுதலைக்காக இன்று குரல் கொடுத்து வருகின்ற அனைத்து அரசியல் சக்திகளுக்கும் பொதுவானவன் சிவகுமாரன் என்ற வகையில்!.....

அனைத்து இயக்கப் போராளிகளாலும் நேசிக்கப்படுபவன் சிவகுமாரன் என்ற வகையில்...

குழு வாத அரசியலால் இன்று பிரிக்கப்பட்டிருந்தாலும் மக்களாகிய நீங்கள் கொண்டிருப்பது ஒரே இலட்சியக் கனவு என்ற வகையில்...

மக்களின் மகிழ்ச்சிக்காகவும்... இந்த மண்ணுக்காகவும்... எமது சுதந்திரத்திற்காகவும் போராடி மரணித்த முதல் வித்து சிவகுமாரனின் நினைவு தினத்தை, இன்றைய நாளை விடுதலை வித்துக்கள் தினமாக ஈபிடிபி. இன்று முதல் பிரகடனம் செய்கின்றது!


இந்த விடுதலை வித்துக்கள் தினத்தை தேசத்தின் சுதந்திரத்திற்காகப் போராடி மரணித்த அனைத்துப் போராளிகளையும், பொதுமக்களையும் நினைவு கூரும் தினமாக ஈபிடிபி பிரகடனம் செய்கின்றது!

எமது தேச விடுதலைப் போராட்டத்தில் ஆயுதம் ஏந்திக் களத்தில் நின்று உன்னத இலட்சியங்களுக்காகப் போராடி மரணித்த அனைத்து இயக்க சுதந்திரப் போராளிகளுக்கும் இன்றைய தினத்தில் நாம் அஞ்சலி செலுத்துகின்றோம்!

சாத்வீக வழியில் நின்று மக்களின் விடுதலையை நேசித்ததால் சாவை அணைத்துக்கொண்ட அனைத்து போராளிகளுக்கும் நாம் அஞ்சலி செலுத்துகின்றோம்!

தமிழர்களைத் தமிழர்களின் பெயரால் கொன்றொழிக்கும் புலித் தலைமையின் பாசிச ஒடுக்குமுறைக்குப் பலியாக்கப்பட்ட அனைத்துப் போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் நாம் அஞ்சலி செலுத்துகின்றோம்!

புலிகளின் ஜனநாயக மறுப்புக்கு எதிராகவும் ஜனநாயக பன்மைத்துவ, பல்கட்சி ஜனநாயக வழிமுறைக்காகவும் துணிச்சலுடன் போராடி மரணித்த அனைத்து போராளிகளுக்கும் மனிதநேயவாதிகளுக்கும் நாம் அஞ்சலி செலுத்துகின்றோம்!



சிவகுமாரன்

இது வரை கால முடிவற்ற கொடிய யுத்தத்தினால் கொன்றொழிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நாம் அஞ்சலி செலுத்துகின்றோம்!

**அனைத்து இயக்கப் போராளிகளையும் நினைவு கூருகின்ற இதே வேளையில், தமிழர்களின் பெயரால் தமிழர்களைக் கொல்லும் புலிகளின் தவறான தலைமையின் கபட நோக்கம் புரியாமல் புலிகள் இயக்கத்தில் போராளிகளாக இணைந்து கொல்லப்பட்ட மக்களாகிய உங்களது பிள்ளைகளையும் சேர்த்தே நாம் நினைவு கூருகின்றோம்! அவர்களுக்கும் சேர்த்தே நாம் அஞ்சலி செலுத்துகின்றோம்!**

இந்த இடத்தில் இன்னும் சில உண்மைகளை மக்களாகிய உங்களுடன் நான் மனந்திறந்து பேச விரும்புகின்றேன்!

தமிழர் விடுதலைப் போராட்டத்தில், அப்போராட்ட வரலாற்றில் பல்வேறு பெயர்களைத் தாங்கி நின்ற தமிழ் பேசும் மக்களின் அரசியல் விடுதலையை நேசித்த, ஆயிரக்கணக்கான விடுதலை விரும்பிகள், தமிழ் பேசும் மக்களின் போராட்டத்திற்கு தமது வாழ்வையும் தம்முயிர்களையும் அர்ப்பணிக்க திரண்டு நின்றனர். ஒரே இலட்சியத்தை அடைய பல பெயர்களுடனும் பல முனைகளிலிருந்தும் புறப்பட்டு வந்தனர்.

அவர்களின் கனவுகளுக்கும், அந்த அமைப்புகளுக்கும் நடந்தது என்ன என்ற கேள்வியை, இந்த வரலாற்றுத் தினத்தில் - தியாகி சிவகுமாரனை நினைவு கூரும் இச்சந்தர்ப்பத்தில் நாம் எழுப்பித்தான் ஆக வேண்டும்!

அப்போதுதான் தியாகி சிவகுமாரனின் இலட்சியத்துடன் நாம் இன்று தமிழரின் பெயரால் நடக்கும் அராஜகத்தையும் அடக்குமுறையையும் உரசிப் பார்க்க முடியும்.

தோழன் சிவகுமாரன் கொண்ட கொள்கையில் உறுதியுடனும் இலட்சியத்துடனும் உள்ள நாம், இன்று மீளவும் கேட்க விரும்புகிறோம்! பிரபாகரனின் புலித் தலைமை மேற்கொள்ளும் படுகொலை அரசியல்தானா தோழன் சிவகுமாரன் தமிழ் பேசும் சமூகத்திற்கு பரிசளிக்க விரும்பியது என்று?

இல்லவே இல்லை! உண்மையான மக்கள் விடுதலையை நேசித்த சிவகுமாரன், புலிகளின் இத்தகைய விடுதலையின் பெயரிலான அடக்குமுறையை ஒருபோதும் ஏற்றுக்கொண்டிருக்கவே மாட்டார்!

ஒரு வேளை, தமிழர்களின் தியாகி சிவகுமாரன்கூட பிரபாகரனின் பட்டியலில் வேண்டப்படாதவராகவே இருந்திருக்கலாம், ஏனெனில் தன்னைத் தவிர, வேறுயாரும் தமிழரின் விடுதலையில் தலைவனாக முடியாது என்பதே பிரபாகரனின் விதி!

அந்த வகையில் சிவகுமாரன் இன்று உயிருடன் இருந்திருந்தால் அவன் புலித் தலைமையினால் துரோக முத்திரை குத்தப்பட்டிருப்பான்! அல்லது அவன் ஒரு துரோகியாக புலித் தலைமையினால் நடுத்தெருவில் சுட்டுச் சரிக்கப்பட்டிருப்பான்! இந்த அனுபவ உண்மையினை மக்களாகிய நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்!

தமிழரின் விடுதலையின் பெயரால் புலிகள் எத்தனை ஆயிரக்கணக்கான மக்களை படுகொலை செய்துள்ளனர்! செய்யவைத்துள்ளனர். இந்தப் படுகொலைகளுக்கு என்னதான் அர்த்தம்? கந்தன் கருணை படுகொலை தொடங்கி, தமிழ், முஸ்லிம், சிங்களப் பொதுமக்கள் மீதான புலிகளின் படுகொலைகள் அனைத்தையும் தோழர் சிவகுமாரன் எதிர்த்தே நின்றிருப்பார். இதுதான் உண்மை, இதுதான் சிவகுமாரன் இன்னும் நினைவு கூரப்படுவதற்கான அர்த்தமுமாகும்!

அரச தரப்புடன் பகைமை உணர்வு பாராட்டப்பட்ட காலங்களில் சிவகுமாரனின் சிலை பல முறை உடைத்து சிதைக்கப்பட்டது! ஆனாலும் ஈபிடிபி. யினராகிய நாம் எடுத்திருந்த அரசியல் வழிமுறையினால் சிவகுமாரனின் சிலையை யாழ். மண்ணில் அதே இடத்தில் புதுப்பொலிவோடு மீண்டும் நாம் கட்டி எழுப்பியிருக்கிறோம்! அது இன்று வரை பாதுகாக்கப்பட்டும் வருகின்றது!

ஈபிடிபி. யின் அரசியல் வழிமுறைக்கு கிடைத்த அரசியல் வெற்றிகளில் இதுவும் ஒன்றாகும்!

நேசத்திற்குரிய எம் தேசத்து மக்களே!

இன்று வரை தமிழ் பேசும் மக்களாகிய உங்களது விடியலுக்காகவும் ஜனநாயக உரிமைகளுக்காகவும் பல இன்னுயிர் தோழர்களை நாம் இழந்திருக்கின்றோம்!

சிவகுமாரன் கொண்ட கொள்கைப் பிடிப்பினால் கவரப்பட்டு ஈபிடிபி. யின் சுமைதாங்கியாக நின்று, எமது கட்சியின் வளர்ச்சிக்காகவும், மக்களாகிய உங்களது ஜனநாயக அரசியல் உரிமைகளுக்காகவும் அர்ப்பண உணர்வோடு செயல்பட்டு வந்த எனது பாசமிகு தோழர் ரமேஸ் அற்புதராசா தொடக்கம்.....

எமது கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும் சிறந்த நிர்வாகத் திறன் படைத்த உன்னத போராளி தோழர் ராஜு வடிவேல் தொடக்கம்....

சிவகுமாரனுடன் கூட இருந்து அரசியல் பணியாற்றிய எமது கட்சியின் பிரசாரச் செயலாளர் தோழர் சின்னபாலா பாலநடராஜா ஐயர் வரை பல நூறு உன்னத போராளிகளை நாம் இழந்திருக்கின்றோம்!

ஆனாலும், மரணித்த போராளிகளின் நினைவு தினத்தின் குறியீடாக நாம் பொன். சிவகுமாரனையே தேர்ந்தெடுக்கின்றோம்! ஏனென்றால் அவரே ஈழப் போராட்டத்தில் மரணித்த போராளிகளில், முன்மாதிரியான பொதுவான குறியீடு!

கொன்றொழிக்கப்பட்ட எமது தோழர்களின் கனவுகள் ஈடேற வேண்டுமேயானால்.... அவர்களது கனவுகள் நனவாக வேண்டுமேயானால்.... எமது இலட்சியப் பயணத்தில் கொல்லப்பட்ட அனைத்துப் போராளிகளின் ஒட்டு மொத்த குறியீடாக விடுதலை வித்து சிவகுமாரனின் நினைவு தினத்தை பிரகடனப்படுத்துவதே சாலப் பொருத்தமாகும்!

**இன்றைய விடுதலை வித்துக்கள் தினத்தில் சில விடயங்களை மக்களாகிய உங்களுக்கும் அனைத்துலக மனித சமூகத்திற்கும் தெரியப்படுத்த விரும்புகின்றோம்!**

**எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒடுக்கப்படுகின்ற ஒரு தேசிய இனம் என்ற வகையில் எம்மோடு கைகோர்த்து போராட்டக் களத்தில் நின்றிருந்த தமிழ் பேசும் முஸ்லிம் மக்களை விரோதித்துக்கொண்டவர்கள் புலிகள்!**

வடக்கு முஸ்லிம் மக்களை உடுத்த உடுப்போடு ஒரே நாளில் ஊரை விட்டுத் துரத்தியவர்கள் புலிகள்! பள்ளிவாசல்களில் புகுந்து நரபலி வேட்டை நடத்தியவர்கள் புலிகள்! புலிகளின் இந்தத் தமிழ் தேசிய விரோத நடவடிக்கைகளுக்கும் எமது மக்களாகிய உங்களுக்கும் எந்த வித சம்பந்தமும் இருக்க வில்லை!

இதில் பாதகம் என்னவென்றால் தமிழ் தேசியத்தின் ஒற்றுமையை புலிகள் உடைத்தெறிந்து அதை சிதைத்து விட்டிருக்கின்றார்கள்! இதில் தண்டிக்கப்பட்டவர்கள் மக்களாகிய நீங்கள் மட்டும்தான்!

ஆகவே, எமது மக்களாகிய உங்களது சார்பாக தமிழ் பேசும் முஸ்லிம் மக்களிடம் ஈபிடிபி. பகிரங்க மன்னிப்பு கோருகின்றது!

எமது போராட்டம் என்பது பேரினவாத ஆட்சியாளர்களுக்கு எதிராகவே அன்றி சாதாரண சிங்கள குடிமக்களுக்கு எதிராக அல்ல என்பதே எமது இலட்சியமாக இருந்தது! இதற்கு மாறாக புலிகள் அப்பாவி சிங்கள மக்களைக் கொன்று குவித்தனர்! பால் மணக்கும் குழந்தைகள் உட்பட பல நூறு சிங்கள மக்களைச் கொன்று குவித்தது புலித் தலைமை! இத்தகைய புலிகளின் தமிழ் குறுந்தேசிய வெறியாட்டத்தில் எந்தவொரு தமிழ் குடிமகனும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை!

இதில் பாதகம் என்னவென்றால் எமது போராட்டம் என்பது சாதாரண சிங்கள குடிமக்களுக்கு எதரானது என்ற தோற்றத்தை புலிகள் உருவாக்கிக் கொண்டனர் என்பதுதான். இதில் தண்டிக்கப்பட்டவர்கள் மக்களாகிய நீங்கள் மட்டும்தான்!

ஆகவே, எமது மக்களாகிய உங்களது சார்பாக சிங்கள மக்கள் சமூகத்திடமும் ஈபிடிபி. பகிரங்க மன்னிப்புக் கோருகின்றது!

குண்டு வீச்சு விமானங்களில் வராமல் தொண்டு செய்யும் விமானத்தில் வந்து உங்களுக்கு உணவுப் பொதிகளைப் போட்டுச்சென்றனர் எமது நட்பு நாடான இந்திய உதவிப் படையினர்! அமைதிப்படையாக வந்த எமது நட்பு நாட்டுப் படையினரை வரிந்து கட்டி போருக்கு இழுத்து மக்களாகிய உங்களுக்கு பேரழிவுகளை ஏற்படுத்தியது புலித் தலைமை!

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்....)

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இலங்கை அரசின் இந்திய எதிர்ப்புப் பிரசாரம்

ஒழுங்கும், கட்டுப்பாடுமில்லாத இராணுவம் தமிழர்கள் மீது மட்டுமல்ல, தமது சொந்த இனத்தவர் மீதே பல அடாவடித்தனங்களை அவிழ்த்து விடுவார்களென்பதற்கு 71ஆம் ஆண்டுக் கிளர்ச்சியில் பல இரத்த சாட்சிகள் தோற்றம் பெற்றன. கதிர்காம அழகி பிரேமாவதி மன்னம்பேரி லெப்டினண்ட் விஜேசூரியா என்பவனால் சித்திரவதை செய்யப்பட்டு, கற்பழிக்கப்பட்டுக் கொல்லப்பட்டமை இந்த நாட்டையே உலுக்கிய ஒரு சம்பவமாகும்.

அப்போது இலங்கையில் தங்கியிருந்த வெளி நாட்டுப் பத்திரிகையாளர்கள், ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது இடம்பெற்ற பல அத்துமீறல்களை அம்பலத்துக்குக் கொண்டுவந்தனர். நீதியரசர். கே.சி. அலஸ் 1971ஆம் ஆண்டுக் கிளர்ச்சி தொடர்பாக எழுதிய நூலில், இடம்பெற்ற அத்துமீறல்கள் பற்றிப் பல்வேறு சம்பவங்களைக் குறிப்பிடுகிறார். 'இலங்கையின் கிளர்ச்சி' என்ற தலைப்பில் ஹலிடே என்பவர் எழுதிய நூலில் ஜே.வி.பி. தலைவர் ரோஹண விஜேவீர கூறியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். "1972ஆம் ஆண்டு சிறையிலிருந்து ரோஹண விஜேவீர விடுத்த அறிக்கை யொன்றில் பதினைந் தாயிரம் புரட்சி வாதிகள் கொல்லப் பட்டுள்ளனரென்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் இதனிலும் இரட்டிப்பு மடங்கான அப்பாவி மக்கள் கொல்லப் பட்டுள்ளனர். 12,000 பேர் கொல் லப்பட்டனரென்று உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் ஐம்பதாயிரம் பேர் கொல்லப்பட்டனரென்று வேறு தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆயுதப் படைகள் விவசாயிகள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல்கள் நடத்தினார்களென்பது வெளிப்படையானது."




1970களின் பிற்பகுதியிலிருந்து இலங்கை இராணுவத்தினருக்கும் பொலிஸாரும் இனரீதியாகச் செயற்பட ஆரம்பித்தனர். தமிழ் இளைஞர்களின் போராட்டம் சிங்கள இனத்துக்கெதிரானதென அவர்கள் கருதத் தலைப்பட்டனர். தமிழ்த் தீரவாத இளைஞர்கள் தாக்குதலொன்றினை நடத்திவிட்டுத் தப்பிச்சென்று விட்டால் பொலிஸாரும் இராணுவத்தினரும் சேர்ந்து தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியிலிருந்த அப்பாவித் தமிழ் மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்டனர். இவ்வாறு இராணுவமும் பொலிஸாரும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது நடத்தும் கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைமைகள் ஆதரவளிப்பதாகத் தமிழ் மக்கள் நம்பத் தொடங்கினர். ஏனென்றால் தமிழ் மக்களை மோசமாகப் பழிவாங்கும் இராணுவ, பொலிஸ் தரப்பினருக்குப் பாதுகாப்பு மட்டுமல்ல, பதவியுயர்வுகளும் வழங்கப்பட்டமையே வரலாறாக இருந்து வந்துள்ளது.

**1983ஆம் ஆண்டு இனக் குழப்பத்துக்கு முன்னர் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அமிர்தலிங்கம் எழுதிய கடிதமொன்றில் இவ்வாறு குற்றஞ் சுமத்தியிருந்தார். 1981ஆம் ஆண்டு மே - ஜூன் மாதங்களில் காங்கேசன் துறையிலும் சுன்னாகத்திலும் இடம்பெற்ற கொலைச் சம்பவங்கள், தீவைப்பு ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட பொலிஸ்காரர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்ட போதிலும் இவர்களில் எவராவது கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டவில்லையென்று சுட்டிக்காட்டி யிருந்தார். இக் குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்ட பொலிஸ்காரர்களுக்கு உதவுவதற்காக அரசாங்கம், மல்லாகம் நீதிமன்றத்திலிருந்த வழக்கை கொழும்புக்கு மாற்றியிருந்தது.**

1983ஆம் ஆண்டு இனக் குழப்பத்துக்கு முன்னர் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அமிர்தலிங்கம் எழுதிய கடிதமொன்றில் இவ்வாறு குற்றஞ் சுமத்தியிருந்தார். 1981ஆம் ஆண்டு மே - ஜூன் மாதங்களில் காங்கேசன் துறையிலும் சுன்னாகத்திலும் இடம்பெற்ற கொலைச்

(அரசியல் தொடர்)

சம்பவங்கள், தீவைப்பு ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட பொலிஸ்காரர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்ட போதிலும் இவர்களில் எவராவது கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டவில்லையென்று சுட்டிக்காட்டி யிருந்தார். இக் குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்ட பொலிஸ்காரர்களுக்கு உதவுவதற்காக அரசாங்கம், மல்லாகம் நீதிமன்றத்திலிருந்த வழக்கை கொழும்புக்கு மாற்றியிருந்தது.

1984ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் லலித் அதுலத் முதலி தேசிய பந்தோபஸ்து அமைச்சராகப் பதவியேற்ற போது, இராணுவத்தின் நிரந்தர சேவையில் பதினொரா யிரம் பேரும் இராணுவத் தொண்டர்களாக இரண்டாயிரத் திலிருந்து நாலாயிரம் பேர் வரையுமே இருந்தனர். மூன்றாண்டுகளுக்குள் இந்த எண்ணிக்கை ஐம்பதாயிரம் வரை அதிகரிக்கப்பட்டது. 1992ஆம் ஆண்டின் ஆரம்பத் தில் ஆயுதப் படையினரின் மொத்த எண்ணிக்கை எண் பதாயிரமாக அதிகரிக்கப்பட்டது. இராணுவப் பலத்தைப் பெருக்கி தமிழ்த் தீவிரவாத இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்ட அரசாங்கம், வெளிநாடுகளிலிருந்து இராணுவ மற்றும் புலனாய்வு உதவிகளையும் பெற முனைந்தது. 1983ஆம் ஆண்டு ஜூலை இனக் குழப்பத்தைத் தொடர்ந்து இவ்வாறு வெளிநாட்டு நண்பர்களைத் தேடிப் பிடிக்கும் முயற்சியில் ஜனாதிபதி ஜெயவர்த்தன இறங்கினார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழீழக் கோரிக்கைக்கும் இந்தியாவுக்குமெதிராக உலக அபிப்பிராயத்தைத் திரட்டும் நோக்கில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் சகோதரரான எச்.டபிள்யூ. ஜெயவர்த்தன ஆசிய நாடுகளுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டார்.

அவர் இந்தோனேஷியா, தென் கொரியா, ஜப்பான் ஹொங்கொங், சீனா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற் கொண்டார். இந்த நாடுகளின் தலைவர்கள் தமிழீழக் கோரிக்கையைக் கண்டிப்பதற்கு தூண்டப் பட்டார்கள். ஆனால் இவர்கள் எவரும் இந்தியாவை நேரிடையாகவோ மறைமுகமாகவோ விமர்சிக்க முன்வர வில்லை. சீனா மட்டும் இந்தியாவை மறை முகமாக கண்டித்தது. சிறிய நாடுகளைப் பெரிய நாடுகள் அடக்கக்கூடாதென ஒரு வரி சீனாவின் அறிக்கையில் சேர்க்கப் பட்டிருந்தது.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

அமெரிக்காவிடமிருந்து இராணுவ உதவி கோரித் தனது வெளிவிவகார அமைச்சர் ஏ.சீ.எஸ்.ஹமீதை ஜனாதிபதி ஜெயவர்த்தன அனுப்பி வைத்தார். இலங்கை விவகாரத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட அமெரிக்கா விரும்பவில்லை. இதற்குப் பதிலாக இலங்கைக்கு உதவுமாறு பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேசியா போன்ற நாடுகளை அமெரிக்கா கேட்டுக் கொண்டது. அமெரிக்காவின் உயர்மட்ட அதிகாரியான வேர்ணன் வோல்டர்ஸ், ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்திப்பதற்கு கொழும்பு வரவிருப்பது குறித்து இலங்கை இந்தியாவுக்கு அறிவித்தது.

ஜனாதிபதி ஜெயவர்த்தன இஸ்ரேலிடமிருந்து உதவி பெறுவதற்கு 1984ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தீர்மானித்தார். இதற்கான பொறுப்பை அவர் தனது மகனான ரவி ஜெயவர்த்தனவிடம் கையளித்தார். அப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவிருந்த ஜி.வி.பி.சமரசிங்கவிற்கும் இஸ்ரேலியப் பாதுகாப்பமைச்சு அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று ஐரோப்பிய நாடொன்றில் 1983ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்றது. பின்னர் அம்மாதப் பிற்பகுதியில் வாஷிங் டனில் அவர்கள் சந்தித்துப் பேசினர். அப்போது இஸ்ரேலிய - இலங்கை அதிகாரிகளுக்கிடையில் ஒப்பந்த மொன்று செய்து கொள்ளப்பட்டது. இதன்படி இலங் கைக்கு சிற்சில இராணுவ உதவிகள் வழங்கப்பட்டன. கொழும்பிலுள்ள அமெரிக்க உயர் ஸ்தானிகராலயத்தில் இஸ்ரேலிய நலன் பேணும் பிரிவொன்றை அமைக்கவும் இணக்கம் காணப்பட்டது. இஸ்ரேலுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் குறித்து 1984ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதி ஜெயவர்த்தன அமைச்ச ரவைக்குத் தெரிவித்தார். இந்த ஒப்பந்தத்திற்கு அப்போது அமைச்சரவையில் அங்கம் வகித்த முஸ்லிம் அமைச் சர்களான எம்.எச்.முஹமதுவும் ஏ.சி.எஸ்.ஹமீதும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தனர். அமைச்சர்களான லலித் அத்துலத் முதலியும் ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸும் இவ்வொப்பந்தத்தை வெகுவாக வரவேற்றுப் பேசினார்கள். தமிழீழப் போராட்டத்தை நசுக்குவதே இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் என்று அவர்கள் கூறினர்.

இஸ்ரேலிய நலன் பேணும் பிரிவு 1984ஆம் ஆண்டு மே மாதம் கொழும்பில் திறந்து வைக்கப்பட்டது. இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் பனாகொட இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் தொழில் நுட்பங்கள் பற்றியும் புலனாய்வு வேலைகள் பற்றியும் இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தனர்.

(தொடர்ந்து வரும்....)

# நள்ளிரவு மல்லிகை




**மெழுகு வர்த்தியை ஏற்றி வைத்து விட்டு திரும்பிப் பார்க்கையில் தனக்கு அருகாமையில் ஒரு இளம் பெண் நிற்பதை ஸ்ரீகுமார் காண்கிறார். அவள் தான் அந்த எலும்புக் கூட்டிற்கு சொந்தக்காரி என்று அவள் பேசுவது மூலம் தெரிந்து கொண்ட அவர் அவ்விளம் பெண் இடும் கட்டளைக்கு கீழ்ப்படிய ஆரம்பிக்கிறார்....**

"இந்த இரவு நேரத்தில் அதுவும் முன்பின் தெரியாத இந்தப் பேரழகியோடு வெளியே போகக்கூடாதென்று ஸ்ரீகுமார் நினைத்தார். அந்தக் காலேஜின் வாட்ச்மேன் இவளோடு பார்த்தால் என்ன நினைப்பார்?

ஸ்ரீகுமார் வாட்ச்மேனைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கும்போதே.....

"வாட்ச்மேனைப் பத்திக் கவலைப்படறீங்களா? அதை நான் பார்த்துக்கறேன்" சௌபர்ணிகாவின் குரல் உறுதியுடன் தெறித்தது.

ஸ்ரீகுமாருக்கு ஆச்சரியத்தில் தலை சுற்றியது. மறுபடி யோசித்தார்.

"நள்ளிரவு நேரத்தில் மற்றொரு கல்லூரிக்குள் நுழைந்து, அங்கிருந்து எலும்புக்கூடு ஒன்றை எடுத்துக் கொண்டு எப்படி வெளியேறி இங்கு வருவது"

சௌபர்ணிகாவின் குரல் வெட்டியது.

"நீங்க என்ன யோசிக்கிறீங்கன்னு எனக்குத் தெரியும். நாம எப்படி இந்த இடத்துக்குத் திரும்பி வர்றதுங்கிறதுதானே? அதைப்பத்தியும் நீங்க கலைப்பட வேண்டாம். நானே உதவறேன்; உங்களுக்கு எந்த மாதிரி உதவி வேண்டுமானாலும் நான் செய்யறேன்.

அந்தக் காலேஜ்ல ரெண்டாவது மாடிக்கு ஒரு பெரிய பைப் போகுது. அது ஜன்னலை ஒட்டித்தான் இருக்குது. ஜன்னலில் குறுக்குக் கம்பிகள்கூடக் கிடையாது. நீங்க அதுக்கு உள்ள நுழைஞ்சுட்டா, மிச்சத்தையெல்லாம் நான் பார்த்துக்கிறேன்." அவளது பேச்சு ஸ்ரீகுமாரை அச்சுறுத்தி வற்புறுத்தியது. அவரால் மறுக்க முடியவில்லை.

லாபரெட்டரிலிருந்து செலுத்தப்பட்டவர் போல் வெளியேறிப் படிக்கட்டுகளைத் தாண்டிக் கீழ்ப்புறத்துக்கு வந்தார்.

கேட்டை நெருங்கியபோது வாட்ச்மேன் ராமச்சந்திரன் பீடி ஒன்றைப் புகைத்தபடி நின்றுகொண்டிருப்பது தெரிந்தது.

**எழுதுவது**
**சிவன்**

"என்ன ஸார்...வெளியில போறீங்களா?" ராமச்சந்திரன் கேட்டார்.

ஸ்ரீகுமாருக்கு மனம் படபடத்தது. தன் பின்னால் நிற்கும் சௌபர்ணிகாவைப் பற்றி என்ன சொல்லிச் சமாளிப்பது என்று குழம்பிக் கொண்டிருந்தார்.

"தூக்கம் வரலை. சும்மா இப்படியே போய் கடை ஏதாவது திறந்திருந்தா காபி சாப்பிட்டு வரலாமேன்னு பார்த்தேன்". ஸ்ரீகுமாரின் வார்த்தைகள் தடுமாறின.

"அதோ பாருங்க! ஒரு ஆட்டோ ரிக்ஷா வருது. அதை முதல்ல நிறுத்துங்க" சௌபர்ணிகாவின் குரல் பின்னாலிருந்து கட்டளையிட்டது.

அப்படியே செய்தார். ஆட்டோ அவர் அருகில் வந்து நின்றது.

"எங்க போகணும் சார்!" ஆட்டோ டிரைவர் விசாரித்தார்.

"ஆட்டோ டிரைவருக்கோ, வாட்ச்மேனுக்கோ சௌபர்ணிகா கண்ணில் படவே இல்லையா?"

ஸ்ரீகுமாருக்கு இது வியப்பை ஏற்படுத்தியது.

இறங்க வேண்டிய இடத்துக்குச் சற்று முன்னாலேயே ஆட்டோவை நிறுத்திவிட்டு ஸ்ரீ குமார்



இறங்கிகொண்டார்; சௌபர்ணிகாவும் இறங்கினாள்.

அந்தக் காலேஜின் கேட் உட்புறமாகப் பூட்டப்பட்டிருந்தது.

'எப்படி இதற்குள் நுழைவது?' என்று யோசித்தபடி நின்றார்.

"இப்படி வாங்க; இதோ இந்தப் பக்கச்சுவர் வழியா உள்ளே போயிடலாம். நீங்க பயப்படவே வேண்டியதில்லை. வாட்ச்மேன் நல்ல தூக்கத்துல இருக்கார். நான் உங்க பின்னாலேயே வர்றேன். என்னை மீறி எதுவும் நடக்காது....ம்...புறப்படுங்க" சௌபர்ணிகாவின் குரல் அவரைச் செலுத்தியது.

உடைந்து கிடந்த காம்பவுண்ட் சுவரைக் கடந்து உட்புறம் வந்தார் ஸ்ரீகுமார்.

வாட்ச்மேன் அடித்துப்போட்ட மாதிரி ஆழ்ந்த உறக்கத்திலிருந்தார்.

"அவரோட இடுப்பில இருக்கிற சாவிக் கொத்தை எடுத்துக்குங்க, லாபரெட்டரியோட சாவியும் அதிலதான் இருக்கு" சௌபர்ணிகாவின் குரல் இருட்டில் கட்டளையிட்டது.

ஸ்ரீகுமார் மெல்ல குனிந்து அந்த வாட்ச்மேனின் இடுப்பிலிருந்த சாவிக்கொத்தை எடுக்க கையை நீட்டினார்.

காலேஜ் வராந்தாவில், படுத்திருந்த வாட்ச்மேன், சத்தம் கேட்டதால் எழுந்திருக்க முயன்றார்.

"ஸ்ரீகுமார் துணுக்குற்றார். ஒருகணம் என்ன செய்வது என்று புரியவில்லை.

எதுக்காகக் கண் விழிக்கணும்? அப்படியே அமைதியா தூங்குங்க...."ஸ்ரீகுமாரின் முதுகுப் புறத்திலிருந்து சௌபர்ணிகாவின் குரல் கேட்டது.

அந்தக் குரலைக் கேட்டதும், சொன்னபடி கேட்கும் ஒரு நல்ல குழந்தையைப் போல், வாட்ச்மேன் நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொண்டார்.

"இப்ப...சாவியை எடுங்க!" என்றாள் அவள்.

ஸ்ரீகுமார் இயந்திர கதியில் இயங்கி, வாட்ச்மேனின் இடுப்பிலிருந்த சாவியை எடுத்தார். வாட்ச்மேன் மயக்கத்தில் ஆழ்ந்திருப்பவர் போல் கிடந்தார்.

ஸ்ரீகுமார் மேற்புறப் படிக்கட்டுக்குச் செல்லும் வாசல் கதவைத் திறந்தார். அந்தக் கொத்துச் சாவியிலிருந்து, சுலபமாகத் தன்னால் சரியான சாவியைக் கண்டுபிடிக்க முடிந்தது பற்றி, அவருக்கே வியப்பாக இருந்தது.

படிகளிலேறி மேல் தளத்துக்கு வந்தார்.

லாபரெட்டரியின் சாவியை அடையாளம் தெரிந்து கொள்ளவும், கதவைத் திறக்கவும் ஸ்ரீகுமார் அதிகம் கஷ்டப்படவில்லை.


அறைக்குள் வெளிச்சமில்லாதிருந்தது.

(வாசனை வீசும்....)

# கைகளைக் குவித்து.... கண்களை மூடி....

குறைவாகப் பேசவேண்டும், அதிகமாகக் கேட்க வேண்டும் என்பதற்காகத்தான் ஆண்டவன் நமக்கு ஒரு வாயையும் இரண்டு காதுகளையும் கொடுத்திருக்கிறான். ஆனால், நம்மில் பலருக்கு உலகிலேயே இனிமையான ஓசை நம் சொந்தக் குரல்தான்! அதனால்தான் பலர், தாங்கள் பேசும் வார்த்தையில் அர்த்தம் இருக்கிறதோ இல்லையோ.... ஓயாமல் பேசிக்கொண்டே இருப்பார்கள்!

மேலைநாட்டுச் சித்தாந்தத்திலும் சரி, நமது முன்னோர்கள் சொன்ன முக்கிய தத்துவங்களிலும் சரி.... 'கேட்பது' என்பதற்கு நிறைய முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள்! மற்றவர் பேசுவதை நாம் கேட்க வேண்டும் என்றால், முதலில் நாம் பேசுவதை நிறுத்த வேண்டும். ஆனால், நமக்குத்தான் அது பிடிக்காதே!



பெண்மணி ஒருத்தி கைகளைக் குவித்துக் கண்களை மூடி மேரி மாதாவை நோக்கிப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தாள். அதைப் பிரார்த்தனை என்றுகூடச் சொல்ல முடியாது. 'எனக்கு அது வேண்டும்.... இது வேண்டும்....' எனக் கடவுளிடம் விண்ணப்பப் பட்டியல் படிப்பது மாதிரி இருந்தது அவளின் நீண்ட பிரார்த்தனை!

புகழ்பெற்ற ஓவியர் மைக்கேல் ஏஞ்சலோ, அவளைக் கேலி செய்வதற்காக மறைவிலே நின்றுகொண்டு, "பிதா குமாரனான யேசு பேசுகிறேன்.... பக்தையே, உனது பக்தியை மெச்சினோம்! உனக்கு என்ன வேண்டும்....?" என்று கேட்க - அந்தப் பெண்மணி, "சும்மா இருங்கள் ஜீசஸ்! நான் உங்கள் தாயிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். தொந்தரவு செய்யாதீர்கள்...." என்றாளாம்!

அதாவது பேசுவதில் ஒருவருக்கு ஆர்வம் வந்துவிட்டால் எதற்குப் பேசுகிறோம் என்ற நோக்கம் கூடப் பின்னால் தள்ளப்பட்டுவிடுகிறது. பேசுவதால் கிடைக்கக்கூடிய மகிழ்ச்சிக்காகவே பலர் முடிவில்லாமல் பேசுகிறார்கள்! பேசுவதை நிறுத்திக்கொண்டு, அடுத்தவர் பேசும் பேச்சைக் கேட்டாலும் அதைச் சரியான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியது, அதைவிட முக்கியமானதாக இருக்கிறது.

புத்தர் ஒரு சமயம் தன் சீடர் ஒருவருக்கு, "தினமும் தூங்குவதற்கு முன் உன் கடமையைச் செய்ய மறக்காதே...." என்று அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தார். பக்கத்திலே புதரிலே மறைந்திருந்த ஒரு திருடனும் இதைக் கேட்கிறான்! அவன் பரம்பரைத் திருடன். புத்தர் சொன்னதைக் கேட்டுவிட்டு, 'என் கடமை திருடுவது. தினமும் திருடிவிட்டுத்தான் தூங்க வேண்டும்' என்று அந்தத் திருடன் அர்த்தம் எடுத்துக் கொண்டானாம்!

பைபிளில் 'Silly Christ' என்று ஒரு சொற்றொடர் உண்டு. 'Silly' என்பதற்கு, இன்றைய காலகட்டத்தில் அர்த்தம் வேறு. ஆனால், பைபிள் காலத்தில் 'Silly' என்றால், 'சூதுவாது தெரியாத' 'Innocent' என்று அர்த்தம்! அந்தக் காலத்து அர்த்தத்தில் புனையப்பட்ட இந்தச் சொற்றொடரை இந்தக் காலத்து அர்த்தத்தில் புரிந்துகொண்டால், எந்த அளவுக்கு மனவருத்தம் உண்டாகும் பாருங்கள்.

அர்த்தம் புரியாமல் தப்பாக எடுத்துக்கொள்வது ஒருவகை என்றால், பல சமயம் நாம் திறந்த மனதுடன் பிறர் சொல்லும் கருத்துகளைக் கவனிப்பதில்லை! பேசுகிறவர் யார்....? அவர் இப்படிப் பேசுவதன் உள்நோக்கம் என்ன....? இந்தச் சந்தர்ப்பத்தில் ஏன் அவர் இந்தக் கருத்துகளைச் சொல்ல வேண்டும்...?' என்பதைத் தீர யோசித்து, அது நமது நன்மைக்காகத்தான் சொல்லப்படுகிறது என்று புரிந்து கொண்டு ஏற்றுக்கொள்ளும் பக்குவம்கூடப் பலருக்கு இருப்பதில்லை.

காது கொடுத்துக் கேட்பதன் முக்கியத்துவம் பற்றி மேலைநாட்டு அறிஞர்கள் சமீபகாலமாகத்தான் அதிகம் வலியுறுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால், இந்த விஷயம் இந்து மதத்தில் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே சொல்லப்பட்டிருக்கிறது!

விநாயகக் கடவுளின் காதுகளை அகலமாகக் காட்டியிருப்பதற்கான காரணம், மற்றவர் பேசுகிற வார்த்தைகளை உன்னிப்பாக, கவனமாகக் கேட்க வேண்டும் என்பதற்குத்தான்!

சரி, இதற்கு என்ன அத்தாட்சி என்று கேட்கலாம். 'மனிதன் எப்படி இருக்க வேண்டும்...? என்ன குணநலன்களோடு இருக்க வேண்டும்....?' என்பதை விநாயகரின் ஒவ்வொரு அங்கமும் சொல்லுவதை வைத்துப் புரிந்துகொள்ளலாம் -

விநாயகரின் பெரிய வயிற்றுக்கும் அர்த்தம் உண்டு! உலகில் எத்தனையோ கஷ்ட நஷ்டங்களை மனிதன் சந்திக்க வேண்டியிருக்கிறது! இதையெல்லாம் அவன் ஏற்று ஜீரணிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்குத்தான் விநாயகரின் பெரிய வயிறு ஒரு குறியீடு!

மனிதன் தனது திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான குறியீடுதான் விநாயகரின் துதிக்கை! பிரமாண்டமான பருத்த துதிக்கையால், தரையில் இருக்கின்ற சின்னஞ்சிறு ஊசியையும் எடுத்துவிட முடியும்! அதே சமயம் ஒரு பெரிய மரத்தையும் வேரோடு பிடுங்கிவிட முடியும்!

மனிதன் தன் விருப்பு வெறுப்புகளை உடைத்தெறிவதால்தான், அவன் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதைச் சொல்வதுதான் விநாயகரின் உடைந்த தந்தம்! 'ஆசை'களை வெட்டியெறியச் சொல்வதற்குத்தான் விநாயகரின் கையில் சின்னக் கோடரி!

- இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.....

இந்தக் கருத்துக்களையெல்லாம் ஒரு காதில் வாங்கி, இன்னொரு காது வழியாக விடாமல் மூளைக்கு அனுப்பி வையுங்கள். 'எது சரியான கருத்து? எது தவறான கருத்து?' என்பதை உங்கள் அறிவே முடிவு செய்யட்டும். நான், விநாயகரிலிருந்து மைக்கேல் ஏஞ்சலோ, புத்தர் என்று எல்லோரையும் துணைக்கு அழைத்துக் கூறிய கருத்துகளை, வள்ளுவர் ஒன்றேமுக்கால் வரிகளில் சொல்லி விட்டார் -

**'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் - அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு'!**

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 122க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

சீ. தங்கவடிவேல், அரசினர் வைத்தியசாலை, மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. சி. அன்னலிங்கம், கல்விளான், நெல்லியான், சுழிபுரம்.
2. கே. அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
3. எம்.எம். றிம்ஸி, பழக்கடை, புன்னைக்குடா வீதி, ஏறாவூர் - 03.
4. க. கமால்தீன், புன்னைக் குடா வீதி, ஏறாவூர் - 03.
5. எம்.ரி.எம். அமீன், 19/2 புவக்கொட்டுவ, ஹேகொட, பதுளை.
6. இஷாரா பேகம் ஜெமில், 390A, செமனரிவத்த ரோட், தென்னக்கும்புர, கண்டி.
7. சோ. வரதராஜன், மணிமேகலை இல்லம், வந்தாறுமூலை.
8. ம. அபூர்வா, செல்வி அகம், கோவில் வீதி, கல்முனை - 03.
9. இ. சங்கீதா, வாசிகசாலை வீதி, கொம்மாதுறை, செங்கலடி.
10. பூவதி தாமோதரம்பிள்ளை, தபால் கந்தோர் வீதி, மன்னார்.

### குறுக்கெழத்துப் போட்டி 124

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | ■ | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | ■ | 12 |
| 13 | ■ | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | ■ |
| 21 | ■ | ■ | 22 | 23 |

### இடமிருந்து வலம்

1. சூரியகிரகணம் தோன்றும் நாள்.
2. சோகம் (குழம்பியுள்ளது.)
9. கிரணம் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது).
14. வாகனங்களில் பயணிப்போரின் பாதுகாப்பு 'இவர்' கையிலேயே உள்ளது.
17. கட்டிடங்கள் கட்டுவதற்குப் பயன்படும் பொருள் ஒன்று (குழம்பியுள்ளது).
22. பிரணவம் எனும் புனித மந்திரம் (திரும்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1. 'மரகதத் தீவு' என வர்ணிக்கப்படும் ஐரோப்பிய நாடு.
3. நூல் நிலையம் (குழம்பியுள்ளது).
4. முற்காலத்தில் 'இதன்' மூலமும் தண்டனை வழங்கப் பட்டது (தலைகீழ்).
8. வடமராட்சி பிரதேசத்திலுள்ள ஊர் ஒன்று (குழம்பியுள்ளது.)
15. சுமை/பொறுப்பு (குழம்பியுள்ளது).

### குறுக்கெழுத்துப் போட்டி 122 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ஜெ | 2 டு | 3 மா | 4 ம் | ■ |
| 5 தா | 6 ஆ | 7 ல | 8 ம் | 9 ம் |
| 10 வி | 11 ண் | 12 மீ | 13 ன் | ■ |
| ■ | ■ | 14 ன் | ■ | 15 றி |
| ■ | 16 சா | 17 ம | 18 ந் | 19 தி |
| 20 ட் | 21 தி | 22 டு | ■ | 23 யு |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 15.06.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-124
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# இவ்வாரச் சிறு கதைகள்

## கருத்தடை

அலங்கார அறையில் தோழியரின் கேலிப்பேச்சில் வெட்கிப்போய் உள்ளூர மகிழ்ந்த கௌசல்யா, இன்னும் சொற்ப நேரத்தில் முதலிரவிற்காக பால் செம்போடு பள்ளியறை போகப்போகின்ற புதுமணமகள். முப்பத்தைந்தைக் கடந்த பின்னர் வாழ்வை ஆரம்பிக்கப்போகின்ற முதுமணவாட்டி என்றும் சொல்லலாம். கன்னியாகவே வாழ்க்கை முழுதும் இருந்து விடுவேனோ என வாடிநின்ற ஏக்கங்களுக்கு ஒரு விடைகொடுத்து, - வாழ்வை ஆரம்பிக்கப்போகின்ற இந்த சமயத்தில் அவள் மனதை ஒரு விசயம் அரித்துக்கொண்டிருந்தது.

கல்யாணத்திற்கு முன்பே விசயத்தைச் சொல்லி கல்யாண ஏற்பாட்டைச் செய்யும்படித்தான் தன் அம்மாவிடம் கேட்டுப்பார்த்தாள். ‘உனக்கென்ன பைத்தியமா? ரொம்ப நாளைக்கப்புறமா ஒருமாதிரி இந்த கல்யாணம் கூடிவந்திருக்கு. இந்த சமயம் பார்த்து இதைச்சொல்லி காரியத்தைக் கெடுத்திட பார்க்கிறாயா?’ ‘இல்லம்மா கல்யாணத்திற்குப்பின் தெரியவந்து ஏதாவது பிரச்சினையாயிடுச்சின்னா?’ ‘அதெல்லாம் ஒன்னும் வராது நீ வீணா மனச போட்டு குழப்பிக்காதே இப்படி அவள் வாயை அடைத்துவிட்ட அவளம்மாவை, எதிர்த்து எதுவும் பேசமுடியாமல் இருந்து விட்டாள். என்றாலும் வாழ்க்கைத்தந்த கணவனிடம் எதையும் மறைக்காமல் சொல்லிவிட வேண்டும். என்றாவது இது தெரிய வந்து அவர் பிரச்சினைப்படுத்துவதற்குள் சொல்லியாகவேண்டும் என தனக்குள் தீர்மானித்து அதை எப்போது சொல்லலாம் என்பது பற்றிய ஆலோசனையில் இருந்தாள். இன்று கல்யாணமும் முடிந்து முதலிரவில் கணவனை உரிமையுடன் சந்திக்கப்போகின்ற சந்தர்ப்பத்தில் இதுபற்றிய பயமும் நடுக்கமும் ஆட்டிப்படைக்க, தோழியர் கௌசல்யாவை தனியறைக்குள் தள்ளிவிட, வெட்கத்தை சேலையாக்கி அணிந்து கொண்டு விரல்கள் தரையில் கோலம்போட்ட வண்ணம் அவனருகே போய் நின்றாள்.

நந்தவனத்திற்குள் நிலவு வந்ததை உணர்ந்த சந்தோசத்தில் துள்ளி எழுந்த ஆசைகளோடு அவளை அள்ளிப்பருக கண் என்னும் கிண்ணத்தை அவள் மேனி எங்கும் போட்ட சௌந்தர்யனும், அவளை தன்னருகினில் அழைத்து அமரவைத்தான். அங்கே ஒளிமயமான தங்கள் வாழ்க்கையை இருளில் ஆரம்பிக்கமுன் ஒழிவு மறைவு இன்றி தீன் கடந்த காலத்தை பற்றி கௌசல்யாவிடம் எல்லாம் கூறிமுடிந்தான். அவன் சொன்னதையெல்லாம் கேட்டு தனக்கு இப்படி ஒரு கணவன் அமைய வேண்டுமென்றோ அந்த இறைவன் என் கல்யாணத்தை இவ்வளவு காலம் தாமதப்படுத்திவிட்டான் போலும் என்று மனசுக்குள் ஆனந்தப்பட்டுக்கொண்டாள். தான் நினைத்ததற்கு மேலாகவே தனக்கு நல்லதொரு கணவன் அமைந்து விட்டதற்காக மானசீகமாக இறைவனுக்கு நன்றி சொன்னபோது, இப்படி ஒரு கணவனிடம் இனி ஒரு நிமிசமும் தன்னைப் பற்றிய இரகசியம் எதையும் மறைத்து வைக்கக்கூடாது என்ற முடிவுக்கு வந்தாள்.

இவள் முடிவெடுத்த அதே சமயத்தில் சௌந்தர்யனும் ‘கௌசல்யா நீயும் உன்னைப்பற்றி என்னிடம் ஏதாவது சொல். உன்னைப் பற்றி நான் தெரிஞ்சிக்கக்கூடாதா? எது இருந்தாலும் நீ பயப்படாமல் என்னிடம் கூறு. கல்யாணத்திற்கு முன் நீ எப்படி இருந்திருந்தாலும் பரவாயில்லை. என்னோடு வாழப்போகின்ற. எதிர்கால வாழ்வு நமக்குள் நல்லதாக இருக்கவேண்டும் என்றால் உன்னைப் பற்றியும் நான் தெரிஞ்சி வைத்திருப்பது நல்லதுதானே. உனக்கு விருப்பம் இருந்தால் கூறு நான் வற்புறுத்தவில்லை. இப்போதே நீ சொல்லனும் என்று இல்லை பிறகு ஆறுதலாக நீ கூறினாலும் போதும்.’ ‘என்னோட வாழ்க்கையில் பெரிசா சொல்றதுக்கு ஒன்னும் இல்லைங்க. ஆனால் கல்யாணத்திற்கு முன் எங்க வீட்டிலே ஒரு விசயத்தை மறைச்சிட்டாங்க. அதை நான் உங்ககிட்ட சொன்னா நீங்க எப்படி எடுத்துக் கொள்வீங்களோ தெரியாது’ என தயங்கியவளை ‘பரவாயில்லை சொல்லு நீ சொல்ற விசயத்தைப் பொருத்துத்தான் நான் எடுத்துக்கொள்வது பற்றி தீர்மானிக்கவேண்டும்.’ ‘அதுவந்து நான் ரெண்டு மூணு தடவை கருத்தடைக்குப் போயிருக்கேங்க. இதுதாங்க என் மனசை உருத்திக்கிட்டேயிருந்த பெரிய விசயங்க’ ‘என்னது கருத்தடையா!’ ‘ஆமாம் எனக்கு வயசு கொஞ்சம் அதிகரிச்சிட்டதால் லேசா தலையிலே நரை எட்டிப்பார்த்திடுச்சி. அதுக்குத் தெரியுங்களா நான் இன்னும் கல்யாணமாகாத கன்னிப்பெண், இப்போது என்னிடம் வரக்கூடாதுன்னு. அதுதான் முன்னமே இதை சொன்னா நீங்களும் என்னை நிராகரித்து விடுவீங்களோன்னு பயந்து பக்கத்திலே உள்ள பியூட்டி சென்டருக்குப்போய் நீங்க என்னை பார்க்க வருவதா சொன்ன நாட்களில்



என் நரை முடிக்கு கருத்தடை அடிச்சிருக்கேங்க.’ ‘ச.சே...இதுதானா சொல்றதை புரிகிறமாதிரி விபரமா சொல்லவேண்டாம். இப்படியா கருத்த ‘டை’ என்பதை கருத்தடை என்று என்னை கொஞ்ச நேரம் அதிர்ச்சியடைய வச்சிட்டியே! இதுதான் தமிழையும் ஆங்கிலத்தையும் கலந்து பேசுறதிலே வார பிரச்சினை’ என செல்லமாய் கடிந்தவனை ‘ஐயோ நீங்க எங்கேயோ போயிட்டீங்களே ச.சீ.....’ எனச் சிரித்தவளை அணைத்தவன் ‘பயப்படாதே நீயாவது டை அடிச்சி என்னை ஏமாத்திட்டே ஆனால் நான்...’என்றவன் தன்தலையில் இருந்த பொய்முடிக்கிரீடத்தை எடுத்து அவள் கையில் கொடுத்து தலையை காண்பித்தபோது இரவில் சூரியனைக் கண்ட அதிர்ச்சிக்குள்ளானாள். ஆம் சௌந்தர்யத்திற்கும் அவன் தலைக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்றல்லவா சொல்லாமல் சொன்னது அந்த வழுக்கை.

**-மெய்யன் நட்ராஜ், டோஹா கட்டார்.**

## உணர்ச்சியற்ற உணர்வுகள்

நீலச்சேலை எங்கும் விரித்தாற் போல காட்சியளிக்கும் கடல் ஒரு புறமும்; பச்சைப் பசேல் எனக்காட்சி யளிக்கும் வயல்வெளிகள் மறுபுறமும் கொண்ட ஓர் அழகிய கிராமம். அந்தக் கிராமத்தில் வாழ்ந்து வந்தவன்தான் ராஜா. இளமைப் பருவமும், நிறைந்த அறிவும், எதையும் சிந்தித்து செயல்படக்கூடிய தன்மையும் இவ்வாறு அவனின் ஆற்றல்களைப் பற்றி எழுதிக் கொண்டே போகலாம். பல திறமைகள் கொண்ட அவனின் வாழ்வில் குறுக்கே ஒரு கோடு. அதுதான் அவனின் குடும்பம். அவன் ஊரில் மட்டுமல்ல, பக்கத்து கிராம மக்கள் மதிக்கும் அளவுக்கு அவனின் பெற்றோர். ஆனால் இவனோ?

இனவாத அடக்குமுறையால் கொதி தெழுந்த இளைஞர்களில் இவனும் ஒருவன். தனது ஊரில் நடைபெறும் பொது விடயங்கள் அனைத்திலும் அவன் பங்கு கொள்வான். அங்கு பெரியோர் என்றும் பாராமல் பிழை, சரிகளை எடுத்துரைப் பான். இதனால் இவனுக்கு கெட்ட பெயர்.

காலங்கள் கடந்து செல்கின்றன. அவன் வாழ்க்கையும் நகர்கின்றது. ஆனால் அவன் அடி மனதில் ஓர் ஏக்கம். ஒரு கவிஞனின் பாடல் வரிகளை அவன் அடிக்கடி நினைவு கூருவான்.



தான் செல்லும் பாதையையே அவன் காதலாக நினைத்தான். ஒரு பெண்ணில் வைப் பது காதல் அல்ல என்று உணர்ந்திருந்தான். இதனால் என்னவோ அந்தக் கவிஞனின் வரிகள்

இளமை துள்ளி எழுந்து நின்று காதல் என்றது - அதில் குடும்ப நிலைமை எதிரில் வந்து கடமை என்றது.

அவனைக் கவர்ந்தன. தனது முன்னேற்றப் பாதையின் உணர்வுகளை உறங்க வைக்கின்றான். தனது குடும்பச் சுமையைச் சுமக்க ஆரம்பிக்கின் றான். தனது தாய் நாட்டைவிட்டு வெளியேறுகின்றான். தனது இலட்சியப் பாதையில் இருந்து விலகிவிட்டேன் என்ற ஏக்கம் ஒரு புறமும், தாய் தந்தை உடன் பிறப்புக்களை விட்டு வெகு தூரம் செல்கின்றேனே என்ற தவிப்பு மறுபுறமும் அவன் உள்ளத்தை நெருடுகிறது. தான் இரவு பகலாக உலாவிய இடங்கள், தன் தோழமை உள்ளங்களுடன் பசுமையாகப் பழகிய நினைவுகள் எல்லாம் அவன் மனதை வாட்டுகின்றது. கடலுக்குள் மீன் அழுவதுபோல் தன் மனத்தினுள் அவன் அழுது புலம்புகின்றான். உணர்ச்சிகள் யாவும் உணர்வற்ற நிலையில் அவன் தனது ஊரில் இருந்து விடைபெறு கின்றான். தாய், தந்தை, சகோதர சகோதரி கள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் என எல்லோரும் விடை பகர, அவனும் பதிலுக்கு தன் கைகளை அசைத்து விடைபெறுகின்றான். அவன் கிராமமும் கண்களில் இருந்து மறைந்து செல்கின்றது. பறவைகள் வானத்தில் பறந்து செல்லும் உணர்வோடு அவனும் வானத்தில் பறக்கின்றான்.

புதிய மண்ணில் காலடி பதிக்கின்றான். புதிய மனிதர்கள், புரியாத மொழி, எங்குமே இருள் சூழ்ந்த கடும் குளிர். ஒன்றுமே புரியாத சூழலில் மேலும் தன்னைத் திடப்படுத்துகின்றான். சிறிது நேரத்தில் அங்குள்ள காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு விடுதிக்கு அழைத்துச் செல்லப்படுகின்றான். அங்கு எம் தாயக உறவுகளைச் சந்திக்கின்றான். வெளிநாட்டு வாழ்க்கை பற்றி கேட்டறிகின்றான். வெட்கம்....வெட்கம்...இலட்சிய விடுதலை உணர்வோடு வாழ்ந்த அவனுக்கு அகதி அந்தஸ்தா?

ஒன்றுமே புரியவில்லை. குடும்பத்தின் சுமையை நினைத்த வண்ணம் அதையும் ஏற்றுக் கொள்கின்றான். இருள் படர்ந்த அவன் காலங்கள் வளர்ந்து செல்கின்றன. அவனது உணர்ச்சிகள் மேலும் உணர்வற்றுச் செல்கின் றன. அவன் வழமையாக அங்குள்ள கடற் கரைக்குச் சென்று வருவான். அன்றும் தாயக உறவுகளுடன் அங்கு செல் கின்றான். அங்கு ஓர் இளம் பெண்ணைக் காண் கின்றான். வானத்து நிலவே எதிரில் வந்து நிற்பதுபோல் அவளின் வட்ட முகமும், மெல்லிய இடையும், புன்னகைக்கும் முகமும் அவனைக் கவர்ந்தன. கண்களால் பேசும் அளவிற்கு இருவரும் நெருங்குகின்றார்கள். நீண்ட நாட்களின் பின் இருள்படிந்த அவனின் மனதில் ஓர் அமைதி, முகத்தில் புன்னகை வீசும் ஓர் தோற்றம்.

அவனுக்கு அவள் முகத்தையே என்றும் பார்க்கவேண்டும்; பேச வேண்டும் என்ற தவிப்பு. நாளடைவில் இருவரும் நெருங்கிப் பழகுகின்றார்கள். அவர்களின் நெருக்கம் காதலாக மாறுகின்றது. ஒருவர் கையில் மற்றவர் தவழும் அளவிற்கு அன்பைப் பகிர்ந்து கொள்கின்றார்கள். கணவன், மனைவி என்ற வட்டத்தினுள் வாழத் தொடங்கினார்கள். இதனால் தாயக உறவுகளின் சொற் பிரயோகங்களுக்கு ஆளானார்கள். இதன் காரணமாக அவர்களை விட்டு விலகி வெகு தூரம் சென்று வாழ்ந்தார்கள். இருவர் வாழ்வும் சந்தோசத்துடன் நகர்ந்தது. வருடங்கள் பல கடந்தன. அவளின் பெற்றோர் திருமண விழாவை எதிர்பார்த்த வண்ணம் நெருக்கடிகளைக் கொடுக்க ஆரம் பித்தார்கள். இவனோ காலத்தைக் கடத் தினான். அவளுக்கு அவன் தனது குடும்ப நிலையை மீண்டும்...மீண்டும் எடுத்துரைத் தான். ஆனால் அவள் மனமோ படிப்படியாக இவனிடம் இருந்து விலகிச் சென்றது. ஒன்றாய்ப் படுத்துறங்கிய இருவரும் தனித் தனியாக உறங்குகின்றார்கள். அவளின் வார்த்தைகள் இவனை மனம் நோகச் செய்கின்றன. மனத்தாலும் செயலாலும் அவன் பணிந்தே செல்கின்றான். ஆனால் அவளோ?.....

எதிரியைப் பார்ப்பது போன்ற அவளின் பார்வையும், அவளின் சொற்பிரயோகங்களும் அவனை மேலும் வாட்டுகின்றன. உறவால் பிரிந்தாலும் ஊராருக்கு நாம் சகோதரர்கள் என்பதுபோல் உள்ளுக்குள் இருவரும் பிரிந்து வாழ்கின்றார்கள். வெளியில் ஒற்றுமையாக நடந்து கொள்கின்றார்கள்.

திடீரென ஒரு நாள் அவள் வேறு ஒருவனோடு வந்து “ராஜா என்னை மன்னிக்க வேண்டும். நீர் உன்னுடைய சாதி, மதப் பெண்ணாகப் பார்த்து திருமணம் செய்து கொள். உன்னுடைய நல்ல குணங்கள் எல்லாம் என்னைக் கவர்ந்தாலும் என்னால் உன்னுடன் வாழ முடியவில்லை. ஏனென்றால் நான் இவனைக் காதலிக்கின்றேன், பல மாதங்கள் இவனோடு வாழ்கின்றேன்” என்று சாதாரணமாகக் கூறிச் சென்றாள்.

இருள் சூழ்ந்த வானத்தில் மின்னிய மின்னல் ஒளியிழந்து மீண்டும் வானம் இருள் சூழ்ந்தது போல அவன் வாழ்வும் மீண்டும் இருள்படிந்து, உணர்வுகள் யாவும் உணர்ச்சி யற்றுச் செல்கின்றன.

**-ஜெயம், இத்தாலி**

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## சுறுசுறுப்பாக இருங்கள்

வேலை செய்வது என்பது எல்லா நேரங்களிலும் மனத்திருப்தியைத் தராது.

எந்தவொரு குறிக்கோளும் இல்லாது, வெறுமனே இருப்பது மனத்திருப்தியை தராது.

எந்தவொரு குறிக்கோளும் இல்லாத, வெறுமனே இருப்பது மனத்திருப்தி பெற்ற வாழ்க்கை வாழ்பவர்களைவிட சில பேர் இன்னும் மகிழ்ச்சியற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

குழந்தைகள் தங்களுக்கு வேலை ஏதும் செய்யத் தோணாத பட்சத்தில் அவர்கள் தன் அம்மாவிற்குப் பாரமாக இருப்பார்கள். வேலையில்லாதவர்களின் கீழ்த்தரமான எண்ணங்கள் - இவர்களுக்கு அரசின் நிவாரணம் அல்லது பிரிட்டிஷ் அரசின் நிவாரணம் போன்றதொரு அரசின் உதவி ஆகியவைகள் கொடுத்தாலும் நிலைமை எப்போதும் அப்படியேதான் இருக்கும். வாழ்க்கையில் இனிமேலும் ஏதும் சந்திப்பதற்கு இல்லை என்ற நிலையில் ஓய்வு பெற்ற ஒரு மனிதர், புள்ளி விபரங்களின் எடுத்துக் காட்டின்படி, சுறுசுறுப்பாக இல்லாத ஒரு நிலை ஏற்படும்போதுதான் அழிந்து போகும் நிலை ஏற்படும்.

ஒரு சுற்றுப்பயண நிறுவனம் கவர்ச்சிகரமான சுற்றுலா திட்டங்களைக் கூறி, சுற்றுலா பயணியைக் கவர நினைத்தாலும், சுற்றுப்பயணி ஒருவர் சுற்றுலா வழிநடத்துனரிடம் வருத்தப்படும்படியாக நடந்து கொண்டாலும், இவரால் நிறுவனத்திற்கு எந்தவிதமான இழப்பும் ஏற்படாது.

ஏதாவதொரு வேலையில் சுறுசுறுப்புடன் ஈடுபடும்போது, நம்முள் இருக்கும் துயரங்கள் கூட கொஞ்சங் கொஞ்சமாக குறைய ஆரம்பித்துவிடும்.

- 'மகிழ்ச்சி' எனும் நூலிலிருந்து.



# இரவில் வந்தது புயல்! பகலில் வந்தது தென்றல்!!

தருவது முழுடில்யன்



கடைத் தெருவில் அவளைக் காண நேர்ந்ததில் பிங்கலன் நெஞ்சு துள்ளியது.

என்னை இங்கே எதிர்பார்த்திருக்க மாட்டாள். கண்டவுடன் அவள் முகத்திலுள்ள கொலைக் கத்திகளில் ஆச்சரியம் துளிர்க்கப் போகிறது. கன்னங்களில் செவ்வரத்தை பூக்க என்னைக் குறுகுறுப்புடன் பார்க்கப் போகிறாள்.

ஆனால், அவள் இன்னும் பிங்கலனைக் காணவில்லை என்று தெரிந்தது. அம்மாவுடனும் தங்கையுடனும் பரம சாதுவாக இமைகளை நிமிர்த்தாமல் நடந்து வந்துகொண்டிருந்தாள். காதருகே சுருண்டலைந்த கூந்தல் அவள் கன்னத்தை மேலும் பிரகாசமாக்கியிருந்தது. அந்தப் பிரதேசத்தையே பிரகாசமாக்கிக் கொண்டிருப்பதறியாத அமைதியுடனும் பேதமையுடனும் அவள் வந்து கொண்டிருந்தாள்.

அவள் இமைகள் உயரும், அந்தக் கத்திகள் இரண்டும் தன் கண்களை நோக்கிப் பாயும் சமயத்தில் கொடுக்க வேண்டிய சமிக்ஞைக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டு இவன் காத்திருந்தான். காற்றில் ஒரு முத்தம் கொடு என்று ரகசியமாகக் கேட்டு வாங்கிச் சட்டைப் பைக்குள் போட்டுக்கொள்ள நினைத்திருந்தான்.

ஊஹூம்.... அவள் இவன் பக்கம் திரும்பவேயில்லை.

பிங்கலனுக்கு இப்போது சந்தேகமாயிருந்தது. அவள் என்னைப் பார்த்துவிட்டதால்தான் பார்க்காத மாதிரி வருகிறாளா?

இல்லாவிட்டால் ஏன் தற்செயலாக வேனும் நிமிர்ந்து பார்க்காமலிருக்கிறாள்?

அவளுக்கு மாறாக, தங்கை அங்குமிங்கும் குறுகுறுத்த விழிகளை ஓடவிட்டபடி வந்தாள். அவளை உருவாக்கிய அச்சிலேயே பிரமன் இவளையும் உருவாக்கியிருக்க வேண்டும். ஆனால் கொஞ்சம் நிறம் மங்கிய படைப்பாக இருந்தாள்.

தங்கை அங்குமிங்கும் காட்டி எதையோ சொல்லியபடி இருந்தாள். இவள் அதுவொன்றும் தனக்குச் சொல்லப்படாதவை போன்ற சலனமற்ற முகபாவனையில் மிக அடக்கவொடுக்கமாகத் தாயருகே அணைந்து நடந்தாள், பால் என்றால் என்னவென்று தெரியாத ஒரு பூனையாக!

எப்போதாவது ஓரக்கண்களைத் தங்கை மீது ஓடவிட்டாள். அந்தக் கணங்களில் மின்னிய கவிதை வரிகளை இவன் தவறவிடாமல் வாசித்துக்கொண்டிருந்தான்.

ஒரு முறையேனும் அந்தக் கத்திகளில் ஒன்று தன்னை நோக்கிப் பாயாதா? தான் காயப்படுவதை அவள் அறியும்படி எப்படித் துடிப்பது என்பதையெல்லாம் இவன் ஒத்திகை செய்தபடி இருந்தான்.

அவளோ அநியாயத்துக்கு அமைதிப் பெண்ணாய் நடந்தாள்.

நேற்றிரவு அவள் நடந்துகொண்டதையெல்லாம் நினைத்துப் பார்த்தான் பிங்கலன். இவளா அவள்! நம்பமுடியாமல் இருந்தது.

ஓட்டப் பந்தயத்தில் ஜெயிக்க முந்துகிறவள் போல அல்லவா நடந்து கொண்டாள். நம்மை ஒரு குழந்தையாக உணரச் செய்து, அவள் விளையாட்டின் விதிகளுக்கும், அதிகாரங்களுக்கும் ஈடுகொடுக்க முடியாமல் பின்தொடர்ந்து தடுமாற்றத்துடன் ஓடும் சவலை போலல்லவா நானிருந்தேன்!

இதோ என் உடம்பில் இன்னும் அவளது வாசனை ஒட்டிக்கொண்டிருக்கிறதே! சந்தனமாகவன்றோ தன்னையவள் உரசினாள்! இவள்தானா நேற்றிருந்தவள்?

பிங்கலனுக்குப் புரிந்தது. அவள் தூரத்திலேயே தன்னைக் கண்டுகொண்டு விட்டாள். வேண்டுமென்றேதான் இந்தப் பக்கம் பார்வையைத் திருப்பாமல் செல்கிறாள்.

உதடுகளை எவ்வளவு அழுத்தமாக மூடியிருக்கிறாள்! கண்களில் என்ன சாந்தம்! நடையில் எத்தனை பதவிசு!

"அடடா! அழகான புதுக் கவிதையை ஏன் இங்கே எழுதி வைத்திருக்கிறாய்?" அவள் ஈர உதடுகளைப் பார்த்தவாறு சொன்னான்.

"இதோ, நீயும் பிரதி எடுத்துக்கொண்டு விடு!" என்று சடாரென்று அவன் உதடுகளில் அந்தக் கவிதையை அழுத்தி ஒற்றினாள்.

அவன் அதிர்ச்சியில் முனங்கிய சில நிமிடங்களுக்குள்ளாகவே அவனது முகம் முழுவதிலும் கவிதைகளை எழுதினாள்.

பின்னர் தான் கொண்டுவந்த மலர்ச்சரத்தை அவன் கரத்தில் கொடுத்து விட்டுத் திரும்பி இருந்து கொண்டாள்.

தரையிலும் வீழ்ந்து பரவிய அந்தக் கருங் கூந்தலைக் கைகளில் அள்ளி எடுத்தான். மலரை அதில் செருகி, அவளை இழுத்து முகர்ந்தான்.

அவள் திடீரெனத் திரும்பி, "உன்னை விடப்போவதில்லை" என்று வெறி கொண்டவளாய் அவனை வீழ்த்தினாள்.

அவளா இவள்! பிங்கலன் அதிர்ச்சி கலையாமல் தன்னைக் கடந்து செல்லும் மூவரையும் பார்த்தபடி நின்றான்.

அவள் கூந்தல் எண்ணெய் தடவிப் படிய வாரிவிடப்பட்டிருந்தது. ஓரிரு குழல்கள் கட்டை மீறிக் கன்னத்தில் அலைந்தன. எண்ணெய்யை விட அதிகமாய் முகத்தில் அமைதி வழிந்தது. அம்மாவையும் தங்கையையும் விட்டால் வேறு உலகமே தெரியாதவள் போல அப்பாவித்தனமாய் அவர்களுடன் அடங்கிச் சென்றாள்.

இவளுக்குள்ளேயா நேற்றிருந்தவளும் உறைந்திருக்கிறாள்? எல்லா அடையாளங்களையும் உதறிவிட்டு எப்படி வேறொருத்தியாக இந்த ஊருக்குத் தன்னை மாற்றிக் காட்டிவிட முடிகிறது இவளால்? இரவுக்கும் பகலுக்கும் தன்னை வேறு வேறாக அறிவிக்கும் கள்ளத்தனத்தை இவள் எங்கு கற்றாள்?

அமைதியே உருவாகச் சென்று கொண்டிருந்தவளை திகைப்படங்காமல் பார்த்து நின்றான் பிங்கலன்.

***இரண்டறி கள்வி நம் காதலோளே***
***முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்***
***முள்ளூர்க் கானம் நாற வந்து***
***நள் என் கங்குல் நம்மோர் அன்னள்***
***கூந்தல் வேய்ந்த விரவு மலர் உதிர்த்துச்***
***சாந்து உளர் நறும்கதுப்பு எண்ணெய் நீவி***
***அமரா முகத்தள் ஆகித்***
***தமர் ஓர் அன்னள் வைகறை யானே.***

(குறுந்தொகை : 312.)

✉ இந்தியாவை வழிக்குக் கொண்டு வருவதற்கு, தமிழர்களின் ஒருமைப்பாட்டை புலிகள் அவசரமாக ஏற்படுத்திக் காட்டவேண்டும் என்கிறார்களே வாரக் கட்டுரையாளர்கள்! ஏகப்பிரதிநிதித்துவத்துக்கும் மேலாக இன்னும் என்ன செய்யச் சொல்லிக் கேட்கிறார்கள்?

வி. சண்முகரட்ணம், யாழ்ப்பாணம்.

மாற்றுக் கருத்துக்களுடன் இன்னும் மிச்சம் மீதி இருக்கிறவர்களை கெதியாப் போட்டுத் தள்ளிவிடுங்கள் என்றுதான்.


✉ 'ராம்' படம் எப்படி?

எம்.ராஜு". கொழும்பு 12.

படம் வியாபாரம் ஆவதற்கு, நம்ப முடியாக் காட்சிகள் சிலதைச் சேர்த்தாக வேண்டும் என்ற தமிழ்ப்பட விதியை புதிய படங்கள் துணிச்சலாக மீறிவருவதைப் பாராட்ட வேண்டும். இவ்வளவு யதார்த்தமாய் பொலிஸ்காரர்களைத் தமிழ்ப் படத்தில் கண்டதில்லை என்று சொல்லுமளவுக்கு இயக்குநர் உழைத்திருக்கிறார். மக்களோடு மக்களாக காட்சிக்குள் எங்களையும் இழுத்துச் சென்றுவிடுகிற ஒளிப்பதிவு உத்தியில் இன்றைய படங்கள் தேறி வருவதைப் பாராட்ட வேண்டும்.

✉ ஒரு பெண்ணை நான் விரும்புகிறேன். அந்தப் பெண் என்னை விரும்புகின்றாளா என்று எப்படி அறிவது?

மணிவேல் ருத்ரா, மாத்தளை.




உடல் மொழியை வைத்துத்தான்! வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல.

✉ யுத்த காலத்தை விட இப்போதுதான் அதிக கொலைகள் நடந்து வருவதாகத் தெரிகிறதே?

எப்.எம்.முஸம்மில், கல்முனை.

வழக்கம்போல எதிர்த் தரப்பில் அதிகமாய் விழும்போது, விடுதலை நமக்கு நெருங்கி வருகிறது என்று சந்தோஷப்பட்டுக்கொண்டும், நம் தரப்பில் அதிகம் விழும்போது மிலேச்சத்தனமான அந்த மனித உரிமை மீறலை வன்மையாகக் கண்டித்துக்கொண்டுமிருக்க வேண்டியதுதான்! (முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது, யுத்தத்தை மீண்டும் கொண்டு வருவது எதிர்த் தரப்புதான் என்று காட்டிவிடுவது!)

✉ எல்லாவற்றையும் துறந்து இறை மார்க்கத்தில் செல்ல மனதைப் பக்குவப்படுத்திக் கொள்வது எவ்வாறு?

என்.ஆர். சுரேந்திரன், வவுனியா.

நீங்கள் எவ்வளவோ பிரயத்தனங்களுக்குப் பிறகு கடவுளை போய்ச் சந்தித்தால் அவர் உங்களிடம் கேட்கப் போவது இதைத்தான் : "உங்களுக்குத் தரப்பட்ட வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்தீர்களா, இல்லையா?"

ஏனெனில், நீங்கள் பிறந்தது மனிதனாக வாழவே தவிர... துறப்பதற்கல்ல! என்று சொன்ன ஞானியின் வார்த்தைகள்தான் உங்களுக்குப் பதில்.

✉ சிந்தியா, சமீபத்தில் படித்ததில் பிடித்தது?

வி. மாலினி, கொழும்பு 06.

ஜே.பி. சாணக்யாவின் 'என் வீட்டின் வரைபடம்' கதைத் தொகுப்பு. தமிழ்ச் சிறுகதைகளின் வேறொரு பரிமாணம் தெளிவாக உருவாகி வருகிறது.

✉ சிந்தியா, விதி வலியது தானா?

மனோ கோபாலன், ஹப்புத்தளை.

"விதி என்பது சர்வாதிகாரிகள் குற்றத்துக்கும் முட்டாள்கள் தோற்றதற்கும் சொல்லும் சால்ஜாப்பு" என்று அறிஞரொருவர் சொல்லியிருக்கிறார். அந்தக் கருத்து வலியதுதான்.

✉ பட்டாசுத் தொழிற்சாலையில் உழைக்கும் சிறுவர்களுக்குப் போதிய ஊதியம் போய்ச் சேருவதற்காக, ஆயிரக்கணக்கான ரூபாய்களுக்குப் பட்டாசுகளை வாங்கிக் கொளுத்துவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இ.முருகன், ஹட்டன்.

ஜாக் ஹண்டி என்கிற ஒரு குடி மகான் சொன்னார்: "இதுவரை நான் குடித்த மதுவகை அனைத்தையும் யோசித்தால் அவமானமாக இருக்கிறது. கையிலிருக்கும் கண்ணாடி டம்ளரைப் பார்க்கிறேன். சாராயத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் அனைத்து தொழிலாளர்களின் நம்பிக்கைகளையும், கனவுகளையும் யோசிக்கிறேன். இந்த மதுவை நான் குடிக்காமல் இருந்தால், அவர்களது கனவுகள் அனைத்தும் சுக்குநூறாகும். கவலை சூழ்கிறது. நான் என்னிடமே சொல்லிக்கொள்கிறேன், சுயநலத்துடன் என்னுடைய ஈரலைப் பற்றி கவலைப்படுவதைவிட, இந்த மதுவை அருந்தி அவர்களின் கனவை நிறைவேற்றுவதே சிறந்தது என்று முடிவெடுக்கிறேன்" போங்கள்! சிறுவர்களைப் பள்ளிக்கூடம் அனுப்பி வைப்பதற்கு முயற்சி எடுப்பீர்களா, பட்டாசு வாங்கிக் கொளுத்திக் கொண்டிருப்பீர்களா?

✉ கோபிகா முதலிடத்தைப் பிடிப்பாரா?

இரா. புவனீந்திரன், கொழும்பு - 13.

தமிழ் ரசிகப் பெருமக்கள் நடிகையரின்

## சிந்தியா பதில்கள்

திறமையை இரு வகைகளில் அங்கீகரிக்கிறார்கள். குஷ்பு, சிம்ரன், ஜோதிகா ஒருவகை என்றால் சினேகா, சந்தியா, கோபிகா மறுவகை. இரண்டாவது குழுவினருக்கு முதலிடம் கிடையாது.

✉ ஆற்ற முடியாத் துன்பத்திற்கு என்ன செய்ய முடியும்?

எம். ஜனார்த்தனன், திருகோணமலை.

அதற்கும் மூன்று வழிகள் உண்டு. தேர்ந்துகொள்ள முடிகிறதா பாருங்கள்.

அம்மாவின் மடி.
மனைவியின் தோள்/கணவனின் தோள்.
குழந்தையின் சிரிப்பு.

விட்டது?

பி.எம்.பைசல், கரம்பை.

இன்னும் காலம் இருக்கிறது. வட் மோரிடம் நம்பிக்கை வைத்துக் காத்திருக்கலாம்.

✉ இக்காலத்து ஆண்கள் தங்கள் மனைவியரை அம்மா என்று அழைப்பதற்கு காரணம் என்ன?

கோபி பிரியா, வெலிமடை.

அவர்களையும் பதிலுக்கு அப்பா என்று சொல்லும்படிச் செய்து, 'அடாபுடா' என்ற அளவிற்குப் போய் விடாமல் தற்காத்துக் கொள்ளத்தான்.

✉ கொள்கையில் விடாப்பிடியாக இருப்பதையும், கடைசி வரை இலக்கில் உறுதியாயுமிருப்பதை நாம் பாராட்ட வேண்டுமல்லவா?

ந. கனகசபை, மட்டக்களப்பு.

ம்.... சற்றும் மனந்தளராமல் விக்கிரமாதித்தன் செய்ததெல்லாம் வேதாளத்தை வீழ்த்தியதுதான்!

✉ 'கப்பல் பார்த்த சேவகன்' என்று சொல்கிறார்களே அது என்ன?

க. கமால்தீன், ஏறாவூர் - 02.

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தடவை சென்று அறிந்து வராமல், ஒரே தடவையிலேயே எல்லாவற்றையும் கவனித்து வந்துவிட வேண்டும் என்பதற்காகச் சொல்லப்படும் கதை அது!

அதையும் கிண்டல் பண்ணும் முல்லாவின் கதை ஒன்று உண்டு. தேவையானதை எல்லாம் ஒரே தடவையிலேயே செய்து முடித்து வந்து விடுவதுதான் புத்திசாலித்தனம் என்று முல்லாவின் எஜமானர் எப்போதும் சொல்லிக் கொண்டிருப்பார்.

ஒரு நாள் அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. அவர் முல்லாவை அழைத்து வைத்தியரை அழைத்து வரும்படி சொன்னார்.

உடனே புறப்பட்டுச் சென்ற முல்லா, சிறிது நேரத்தில் மூன்று நபர்களுடன் திரும்பி வந்தார்.

"என்ன மூன்று பேரை அழைத்து வந்திருக்கிறாய்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் எஜமானர்.

"இவர் வைத்தியர்" என்றார் முதலாவது நபரைக் காட்டி. பிறகு இரண்டாவது நபரைக் காட்டி "இவர் ஒரு வக்கீல்". உங்களுக்கு உடல் நிலை மிகவும் மோசமாகிவிட்டால் "உயில் எழுதுவதற்காக அழைத்து வந்தேன்" என்றார். மூன்றாவது நபரைக் காட்டி, "இவர் இறுதிச் சடங்கு செய்பவர். வைத்தியரின் மருந்து பலிக்காமல், ஒரு வேளை நீங்கள் இறந்து விட்டால் இவர் தேவைப்படுவாரே என்று அழைத்து வந்தேன்" என்றார்.

இது என்ன முட்டாள்தனம்! என்று சினந்தார் எஜமானர்.

"இல்லை ஐயா!" நான் முட்டாள்களைப் போல் ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு முறை போய்க் கொண்டிருப்பதில்லை". என்றார் முல்லா பணிவாக.




பத்தாயிரத்தையும் தாண்டிய எண்ணிக்கையிலான டெஸ்ட் ஓட்டங்களைப் பெற்றுள்ள இந்திய அணியின் நட்சத்திர ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகத் திகழ்ந்த சுனில் க்வாஸ்கர், மூன்று டெஸ்ட் போட்டிகளின்போது முதலாவது பந்து வீச்சிலேயே ஆட்டமிழந்துள்ளார்.

1974ஆம் வருடம் இங்கிலாந்து அணிக்கு எதிராக பர்மிங்ஹாம் மைதானத்தில் வைத்து இடம்பெற்ற டெஸ்ட் போட்டியின்போது ஜி.ஜி.ஆர்னோர்ல்ட்டின் பந்து வீச்சில் இவ்வாறு ஆட்டமிழந்த கவாஸ்கர், 1983 - 84களில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக மெல்கம் மாஷலினால் வீசப்பட்ட போட்டியின் முதலாவது பந்திலும் இவ்வாறு ஆட்டமிழந்துள்ளார். பின்னர் 1989-90களில் பாகிஸ்தான் அணிக்கு எதிராக ஜெய்ப்பூரில் இடம்பெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது இம்ரான்கானின் முதலாவது பந்து வீச்சிலேயே ஆட்டமிழந்துள்ளார்.

இந்தியாவில் தோன்றிய மிகச் சிறந்த கிரிக்கெட் வீரராகவும், உலகில் தோன்றிய மிகச் சிறந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகவும் திகழ்ந்த சுனில் கவாஸ்கர், 1949 ஜூலை மாதம் 10ஆம் திகதி பம்பாயில் பிறந்தவராவார்.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பத்தாயிரம் ஓட்டங்களைப் பூர்த்தி செய்துள்ள முதலாவது வீரர் என வரலாற்றில் இடம் பிடித்துக்கொண்டுள்ள இவர், 1970 முதல் 1986 வரை 125 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 10,122 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். (சராசரி 51.12 இதில் 34 சதங்களும் 45 அரைச் சதங்களும் அடங்குகின்றன, டெஸ்ட் போட்டியொன்றின் போது இவர் பெற்றுள்ள ஆகக் கூடிய எண்ணிக்கை 236ஆகும். டெஸ்ட் போட்டிகளின் போது இவர் 108 'கெச்'களைப் பிடித்துள்ளார்.

உலகில் தோன்றியுள்ள சிறந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களுள் இன்னுமொருவரான இங்கிலாந்து அணி சார்பில் விளையாடிய ஜெக் ஹொப்ஸ், டெஸ்ட் போட்டிகளின்போது முதலாவது விக்கெட்டுக்காக 24 சதங்களுக்கான தொடர்பினை வைத்துக் கொண்டுள்ளார்.

1907-08ஆம் வருடங்கள் முதல் 1931ஆம் வருடம் வரை இங்கிலாந்து அணி சார்பில் 61 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள இவர், முதலாவது விக்கெட்டுக்கான 24 சதங்களின் தொடர்புகளைத் தக்கவைத்துக் கொண்டுள்ளதுடன், இதில் 15 சதங்கள் இன்னுமொரு சிறந்த துடுப்பாட்ட வீரரான ஹர்ட் சட்பலிப் என்பவருடன் இணைந்து பெறப்பட்டதாகும். இதில் எட்டு சதங்கள் வில்பிரட் ரொட்ஸ் உடனும் ஒரு சதம் சி.பி.பிர்ஸி என்பவருடன் இணைந்தும் பெறப்பட்டவையாகும்.

டெஸ்ட் போட்டிகளில் 5,000 ஓட்டங்களை முதன் முதலில் பெற்றவர் என்ற சாதனையும் ஜெக் ஹொப்ஸையே சாரும்.

டெஸ்ட் போட்டிகளின்போது இவர் 15 சதங்கள், 28 அரைச் சதங்கள் உட்பட 5,410 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். சராசரி 56.94 ஆகும்.

இதனிடையே முதலாவது விக்கெட்டுக்கான கூடிய சதங்களுக்கான தொடர்புகளைக் கொண்டிருந்த துடுப்பாட்ட வீரர்களிடையே சுனில் கவாஸ்கர் (இந்தியா), ஹோர்டன் க்ரினிஜ் (மேற்கிந்தியத் தீவுகள்) ஆகியோர் 22 சதங்கள் வீதமான தொடர்புகளையும், ஹர்பட் சட்க்லிப் (இங்கிலாந்து) 21 சதங்களின் தொடர்புகளையும், ஜெப் பொய்கொட் (இங்கிலாந்து) 20 சதங்களுக்கான தொடர்புகளையும் கொண்டுள்ளனர்.

முன்னாள் இங்கிலாந்து அணித் தலைவர் எலன் போர்டர் டெஸ்ட் போட்டிகளின்போது 62 சதங்களுக்கான தொடர்புகளைக் கொண்டுள்ளார்.

1955ஆம் வருடம் ஜூலை மாதம் 27ஆம் திகதி பிறந்த போர்டர், 1978 - 79ஆம் வருடங்கள் முதல் 1993 - 94ஆம் வருடங்கள் வரை அவுஸ்திரேலிய அணி சார்பில் 156 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 27 சதங்களையும் 63 அரைச் சதங்களையும் பெற்றுள்ளார்.



அலன் போர்டர் · கவாஸ்கர் · ஹோர்டன் கிறிஸிஜ் · இம்ரான்கான்

இவர் பெற்றுள்ள மொத்த ஓட்ட எண்ணிக்கை 11, 174 ஆகும்.

எலன் போர்டர் தான் பங்குபற்றிய 156 போட்டிகளைப் போலவே இப்போட்டிகளின் போது 156 'கெச்'களையும் பிடித்துள்ளார் என்பது ஒரு சிறப்பம்சமாகும்.

டெஸ்ட் போட்டிகளின்போது அதிகமான சதங்களுக்கான தொடர்பாட்டங்களை கொண்டுள்ள ஏனைய வீரர்கள் பின்வருமாறு :-

* சுனில் கவாஸ்கர் - இந்தியா - 58.
* ஜாவெட் மியன்டாட் - பாகிஸ்தான் - 50.
* ஜெப் பொய்கொட் - இங்கிலாந்து - 07.
* ஹோர்டன் ரினிஜ் - மேற்கிந்தியத் தீவுகள் - 46.

**- மைந்தன்**

---

### எந்த கிழமையில் பிறந்தீர்கள்?

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலாபலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமீ J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

#### ஆதிக்கம் 9 : பிறந்த கிழமை செவ்வாய்

பிறப்பெண் 9ஐயும் செவ்வாய்க் கிழமையினையும் கொண்டுள்ள நீங்கள் சிரமத்தைப் பாராது உழைக்கக் கூடிய திறன் வாய்ந்தவர். எப்படியாவது தன் காரியத்தைச் சாதிக்க நினைப்பவராக இருப்பீர்கள். யாரைப் பற்றியும், எதனைப் பற்றியும் கருத்தில் கொள்ளமாட்டீர்கள். தனக்கு எது சரி என்று படுகிறதோ அதை எப்படியாவது செய்து முடிப்பீர்கள்.

ஒரு மனிதனுக்கு அன்பு போல் இன்பம் தருவது எதுவுமேயில்லை. ஆனால் நீங்கள் இதற்கு விதி விலக்கானவர். பிறர்மீது அன்பு செலுத்தவோ இரக்கப்படவோ மாட்டீர்கள். தான் உண்டு தன் காரியம் உண்டு என்று சுயநல நோக்குடன் தொழிற்படக் கூடியவர்தான் நீங்கள். தனக்கு இலாபம் தரக் கூடியது எதுவோ அல்லது பிரயோசனம் தரக்கூடியது எதுவோ அதைத்தான் செய்வீர்கள். பிறரின் நன்மை பற்றியோ அல்லது நலன் பற்றியோ சிறிதும் சிந்திக்க மாட்டீர்கள்.

வீண் பேச்சில் காலத்தைப் போக்குவதில் வல்லவராக இருப்பீர்கள். ஒன்றை நேரடியாகப் பேசாமல் சுற்றி வளைத்துத் தான் பேசுவீர்கள். மேல் வேலை பார்ப்பவர்களின் கருத்துக் களுக்கோ, சொல்லுக்கோ மதிப்பும் மரியாதையும் கொடுக்க மாட்டீர்கள். இதனால் மேலதிகாரிகளின் பகைக்கும் கண்டிப்புக்கும் ஆளாக நேரிடும். பணிந்து போகும் தன்மையோ விட்டுக் கொடுத்து செயற்படும் மனநிலையோ உங்களிடம் இல்லை. இதனால் பல இடங்களிலும் மாறிமாறி வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை உங்களுக்கு ஏற்படும். மனிதர்களுக்குப் பலவீனங்கள் பல உண்டு. அந்தப் பலவீனம் என்ன என்று தெரிந்தால் அதை மாற்றிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். ஆனால் நீங்கள் உங்களுக்குள்ள பலவீனத்தை உங்களுடைய பலம் என்று நினைப்பவர்.

மற்றவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கூடிய தன்மை உங்களிடம் கிடையாது. அடங்கிப் போகக்கூடிய மனநிலை இல்லாதவர் நீங்கள். தான், நான் என்ற நிலையிலும் தனக்கும் முடியும், தனக்கும் தெரியும் என்ற ரீதியிலும் நடப்பவர்தான் நீங்கள். 'எப்படியோ சரி, நன்றாக வருமானம் பெற வேண்டும், அறுசுவை உணவுடன் நன்றாக சாப்பிடவேண்டும், ஆனந்தமாக வாழ்க்கையினை அனுபவிக்க வேண்டும்' என்ற நோக்கும் போக்கும் உடையவர் நீங்கள். இந்த மனநிலை உங்களுக்கு இருப்பதினால் வீண் செலவுகளில் தாராளமாக ஈடுபடுவீர்கள். இதனால் அடிக்கடி பணக்கஷ்டமும் மனக்கஷ்டமும் உங்களுக்கு ஏற்படும். சேமிப்பைப் பற்றியோ பிற்காலத் தேவை பற்றியோ கொஞ்சமும் எண்ணிப்பார்க்க மாட்டீர்கள். பணம் இருக்கும் பொழுது அதன் பெறுமதி உங்களுக்குப் புரியாது. பணம் இல்லாதபோதுதான் அதன் அவசியம் பற்றி உணர்வீர்கள்.

18 வயதிலிருந்தே தொழில் செய்ய ஆரம்பிப்பீர்கள். பின்னர் படிப்படியாக முன்னேற்றம் அடைவீர்கள். வருமானம் கிடைக்கும். பின்னர் வருமானம் இல்லாமல் இருக்கும். இந்த ஏற்ற இறக்க நிலை 30 வயது வரை தொடரும். இதன் பின்னர்தான் உங்கள் போக்கின் குறைபாடுகள் உங்களுக்குப் புரிய ஆரம்பிக்கும். இதன் பிற்பாடு உங்கள் போக்கினை நீங்கள் மாற்றிக் கொள்வீர்கள்.

முன்னர் விட்ட குறைகளை நீக்கி நிறைவான மனநிலையை அடைவீர்கள். உங்கள் நோக்கிலும் போக்கிலும் மாற்றத்தை ஏற்படுத்தி முன்னேறுவீர்கள். தொழில் விடயத்தில் அக்கறை காட்டுவீர்கள். பிறரை மதிக்கும் பண்பு உங்களுக்கு ஏற்படும். சுயநலப் போக்கைத் தவிர்த்துப் பொதுநலமாகச் சிந்திப்பீர்கள். செயற்படுவீர்கள். இதனால் 31 வயது தொடக்கம் தொழில் முறையிலும் மனநிலையிலும் அதிக முன்னேற்றம் அடைவீர்கள். வீண் செலவுகள் செய்யாமல் யோசித்துத்தான் செயற்படுவீர்கள். 32, 35, 38, 41, 44 வயதுகளில் உங்கள் வருமானம் மிகக் கூடுதலாக இருக்கும். மற்றவர்கள் மீது அன்பு செலுத்தவும், இரக்கப்படவும் செய்வீர்கள். எல்லோருடனும் அன்பாகப் பேசிப் பழகுவீர்கள். வீண் பேச்சுக்களைத் தவிர்ப்பீர்கள்.

உங்களுடைய 45ஆவது வயதில் ஒரு பெரிய பணத்தொகை உங்கள் கைக்கு வந்து சேரும். இதனைக் கொண்டு உணவுப் பொருள் சம்பந்தப்பட்ட வியாபாரம் ஆரம் பித்து வருமானத்தைப் பெருக்கி சுகமாகவும், சந்தோசமாகவும் ஆயுள் உள்ளவரை வாழ்வீர்கள். 21, 27 ஆகிய வயதுகளில் உங்களுக்கு ஆபத்துக்கள் நேரிடும். ஆனால் உயிருக்கு ஆபத்தில்லை.

உங்கள் தேகம் சூடானது. அதனால் சூடு சம்பந்தமான நோய்கள் உங்களுக்கு ஏற்படும். இதனால் குளிர்ச்சி தரக்கூடிய உணவு வகைகளை நீங்கள் சாப்பிட வேண்டும். மோர், தயிர், நெய், பால், போன்றவற்றை உண்ண வேண்டும், வெள்ளை நிறம் உங்களுக்கு அதிர்ஷ்டமான நிறமாக இருப்பதனால் வெள்ளை நிற ஆடைகளை விரும்பி அணியுங்கள்.

உங்களுடைய அதிர்ஷ்ட எண் 9. மாதத்தில் வரக்கூடிய 9,18, 27 ஆகிய திகதிகளில் உங்கள் முக்கியமான காரியங்களை வைத்துக் கொள்ளுங்கள். இந்தத் திகதிகள் செவ்வாய்க் கிழமைகளில் அமையுமானால் நல்ல பலன் இரட்டிப்பாகும். நீங்கள் எந்த இலக்கமுள்ள வீட்டிலும் வசிக்கலாம். ஆகவே ஆதிக்க எண் 9ஐயும் செவ்வாய்க் கிழமையினையும் கொண்டுள்ள நீங்கள் வாழ்வில் அனைத்துச் சந்தோஷங்களையும் அனுபவிக்க என் நல்லாசிகள்.

**சுயநலப் போக்கினைத் தவிர்த்தால் தூய வாழ்வு எண் ஒன்பதுக்கு. பொது நலப் போக்கினைக் கொண்டால் மேலான வாழ்வுண்டு செவ்வாய்க்கு.**

அடுத்த வாரம் ஆதிக்கம் 9 புதன்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

---

17ஆம் பக்கத் தொடர்ச்சி......

எமது போராளிகளை அரவணைத்து.... அகதிகளாக ஓடிப்போன மக்களாகிய உங்களை அரவணைத்த அன்னை இந்திரா காந்தியின் புதல்வர் ராஜீவ் காந்தியைக் கொன்றொழித்தது புலித்தலைமை! அதன் ஊடாக எமது அயலக அரசியல் உறவை நிரந்தரமாக பகைத்துக்கொண்டது புலித் தலைமை!

இதில் பாதகம் என்னவென்றால் எமக்கென இருந்த நேச நாடாகிய இந்தியாவின் உதவிக் கரங்களை மக்களாகிய நீங்கள் இழக்க வேண்டி ஏற்பட்டதுதான்! இதில் தண்டிக்கப்பட்டது மக்களாகிய நீங்கள் மட்டும்தான்!

ஆகவே, மக்களாகிய உங்களது சார்பாக இந்திய அரசிடமும், எங்கள் தமிழ் நாட்டு இரத்த பாச உறவுகளிடமும் ஈ.பி.டி.பி. பகிரங்க மன்னிப்புக் கோருகின்றது!

இந்தப் பகிரங்க மன்னிப்பு புலித் தலைமையினால் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பிடமும் கேட்கப்பட்டிருக்கவேண்டும்!

ஆனால், அவர்கள் இன்னமும் துப்பாக்கிகள் மீதும்... குறி தவறிய துப்பாக்கி குழாயிலிருந்து பிறக்கின்ற நெறி தவறிய வன்முறை மீதும்.... மேலும் மேலும் மோகம் கொண்டு நிற்கின்றனர்!

அவர்களுக்கு மக்கள் குறித்த அக்கறை இல்லை! மக்களின் விடுதலை குறித்த எண்ணங்கள் இல்லை! தாங்கள் ஆள வேண்டும் என்பதற்காகவே எதையும் செய்துகொண்டிருக்கிறார்கள்!

ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சி என்ற வகையில்.... நாங்கள் ஆள வேண்டும் என்பதற்காக அன்றி, மக்கள் வாழ வேண்டும் என்று விரும்பி உழைக்கின்றவர்கள் என்ற வகையில், ஈ.பி.டி.பி. தமிழர் விடுதலைஎனும் பெயரால் நடந்த தவறுகள் குறித்து சம்பந்தப்பட்ட சகல தரப்பிடமும் பகிரங்க மன்னிப்புக் கோருகின்றது!

இதன் ஊடாக நாம் சொல்வது என்னவென்றால், எமது மக்கள் முகம் கொடுக்கும் நெடியதும் கொடியதுமான அவலங்களுக்கு முடிவு கட்ட அனைத்துத் தரப்பினரும் தங்களது ஆதரைவை நல்க வேண்டும் என்பதையே!....

சர்வதேச சமூகத்திடமும் நாம் இதைத்தான் கூறி வைக்க விரும்புகிறோம்! எமது மக்கள் புலிகள் தோற்றம் காட்டியவாறு பயங்கரவாதிகள் அல்ல! பயங்கரவாதத்திற்கு ஆதரவளிப்பவர்களும் அல்ல! அவர்கள் ஜனநாயகத்தை விரும்புகிறார்கள்! மனித நேயத்தை நேசிக்கின்றார்கள்!

சர்வதேச சமூகம் மட்டுமன்றி, சிங்கள, முஸ்லிம் சமூகங்களும் இதைத் தெளிவாக உணரவேண்டும்!

புலிகளது பிரச்சினை வேறு! எமது மக்களது பிரச்சினை வேறு! புலிகள் மீது கொண்ட வெறுப்புக்காக எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை யாரும் வெறுத்து ஒதுக்க மாட்டார்களென நாம் திடமாக நம்புகிறோம்!

சுனாமி அழிவுகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய பணிகளை விரைந்து செயற்படுத்த அனைத்துத் தரப்பும் முன்வர வேண்டும்!

அதற்காக அமைக்கப்பட இருக்கும் பொதுக் கட்டமைப்பு என்பது ஜனநாயகப் பன்மைத்துவ அடிப்படையில் சகல கட்சிகளையும், சகல இன, மத குழுக்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்!

இந்த விடயத்தில் எமது நட்பு நாடான இந்தியா எடுத்திருக்கும் நிலைப்பாட்டினை ஈ.பி.டி.பி. மகிழ்ந்து வரவேற்கிறது! எமது ஜனநாயகப் பன்மைத்துவ எண்ணங்களுக்கு இந்திய அரசு ஆதரவுக்கரம் நீட்டியிருப்பது குறித்து நாம் என்றும் நன்றியுடைவர்களே!

இதை ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு அனைத்து சர்வதேச நாடுகளும் இந்த விடயத்தில் ஒரு ஆரோக்கியமான முடிவிற்கு வரவேண்டும் என ஈ.பி.டி.பி. இன்றைய தினத்தில் வேண்டுகோள் விடுக்கின்றது!

எமது ஜனநாயகப் பன்மைத்துவ எண்ணங்கள் குறித்தும்.... எமது மக்களின் அரசியலுரிமை குறித்தும் நாங்கள் நடத்தும் ஜனநாயக வழியிலான தர்மயுத்தத்திற்கு தார்மீக ஆதரவு வழங்குமாறு ஈ.பி.டி.பி. சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றது!

சுனாமி அழிவுகளினால் அவஸ்தைப்பட்டு எமது மக்கள் முகம் கொடுக்கும் உடனடிப் பிரச்சினைகளுக்கு, தீர்வு காணும் அதே நேரத்தில் எமது மக்களின் அரசியலுரிமைக்கான நிரந்தரத் தீர்வு குறித்த அக்கறையும் இங்கு அவசியமாகும்!

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது புலித் தலைமைக்கோ.... அல்லது ஈ.பி.டி.பி. யினராகிய எமக்கோ... அல்லது ஏனைய மாற்று அமைப்புகளுக்கோ அல்ல! மாறாக அரசியல் தீர்வு என்பது எமது மக்களுக்கானதே!

ஆகவே, சர்வதேச சமூகத்தின் ஆதரவோடு அரசாங்கம் எமது மக்களுக்கான அரசியல் தீர்வினை விரைவாக முன்வைக்கவேண்டும்!

மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள்... மக்களை உண்மையாக நேசிப்பவர்கள் அதை ஏற்றுக்கொள்ளட்டும்!

நடைமுறைச்சாத்தியமான ஒரு நியாயமான தீர்வு முன்வைக்கப்படும் பட்சத்தில் அதை ஏற்று நடைமுறைப்படுத்துவதன் மூலம் எமது மக்களின் துயரக்கதைக்கு முடிவுரை எழுத ஈ.பி.டி.பி. என்றும் தயராக இருக்கின்றது!

இது குறித்து மாற்று ஜனநாயக அமைப்புகளுக்கும் மற்றும் மனிதநேய வாதிகள், சமூக அக்கறையாளர்கள்,உலகெங்கும் பரந்து சிதறி வாழும் இலக்கிய ஆர்வலர்கள், சிறு பத்திரிகையாளர்கள், சஞ்சிகையாளர்கள், முற்போக்கு ஜனநாயக சக்திகள், முன்னாள் போராளிகள், மாற்றின் மாற்றான மறுசிந்தனையாளர்கள் அனைவருக்கும் ஈ.பி.டி.பி. வேண்டுகோள் விடுக்கின்றது!

இதுவே இன்றைய விடுதலை வித்துக்கள் தினத்தில் ஈ.பி.டி.பி. யினராகிய நாம் சர்வதேச சமூகத்திடமும் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகத்திடமும் தெரிவிக்க விரும்பும் செய்தியாகும்!

பேரினவாதத்திற்கு எதிராகவும் தமிழ்ப் பாஸிசத்திற்கு எதிராகவும் போராடி மரணித்த அனைத்து போராளிகளுக்கும், பொது மக்களுக்கும் இன்றைய விடுதலை வித்துக்கள் தினத்தில் எமது வீர மரியாதையைச் செலுத்துகின்றோம்.

உரிமைக்கு குரல் கொடுப்போம்ஓ
உறவிற்குக் கைகொடுப்போம்.

தாயக தேசத்தின் விடிவிற்காக
மரணித்த அனைவரினதும்
இலட்சியக் கனவுகளைச் சுமந்தபடி
இன்னமும் நடப்போம்!
விழ விழ எழுந்து.....
குருதி துடைத்து....
இலட்சியப் பயணத்தின்
இறுதி வெற்றிக்காக....
உறுதி கொள்வோம்!
இறுதி வெற்றி மக்களுக்கே!

*திட்டங்கள் எங்களது!..... தீர்மானம் உங்களது!.....*
*தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!...*
*என்றும் நாம் மக்களுக்காக!....*

*பிரியமுடன்*
*செயலாளர் நாயகம்*

**தோழர் டக்ளஸ் தேவானந்தா...**

---

## 2ஆம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 05 03 1957



இறப்பு 15 06 2003

### பொன்னையா. ராமச்சந்திரன்

**(பிரதாப் மாமா)**

**அப்பா உங்களைப் பரிந்து**
**ஆண்டுகள் இரண்டானாலும்**
**உங்களுக்காக அழுதவிழிகளில்**
**இன்னும் ஈரம் காயவில்லையே**
**பாஸிச வெறிக்குப் பலியாகிப் போனவரே**
**பாசமிகு எங்களின் பிரார்த்தனையில்**
**அன்புள்ள அப்பாவே உங்கள் ஆத்மா**
**சாந்தி பெறட்டும்.**

4ஆம் குறுக்கு, கடற்கரை வீதி,
திருச்செந்தூர், மட்டக்களப்பு.

பிரிவால் துயருறும்
**மனைவி தேவகி, சுபா, சுதா, சுனேஸ், தோழர்கள்**

# முதலாம் எலிசபெத் அரசி (1533 - 1603)

## உலகை வியக்க வைத்தவர்கள்

முதலாம் எலிசபெத் அரசி இங்கிலாந்தின் வரலாற்றில் மிகச் சிறப்பு வாய்ந்த ஆட்சியாளராகக் கருதப்படுகிறார். அவருடைய 45 ஆண்டு ஆட்சியில் பொருளாதாரச் செழிப்பும், இலக்கிய மலர்ச்சியும் ஏற்பட்டன. இங்கிலாந்து உலகக் கடலாதிக்க நாடுகளுள் தலையாய இடத்தைப் பெற்றது. ஆங்கிலேய அரசர்கள் வெறும் பொம்மையாக இராமல், உண்மையான அதிகாரம் செலுத்தி வந்த அந்நாளில், இங்கிலாந்தின் பொற்காலச் சாதனைகளுக்கு எலிசபெத் அரசியும் முக்கிய காரணமாவார் என்பதில் ஐயமில்லை.

எலிசபெத் 1533இல் இங்கிலாந்திலுள்ள கிரீன்விட்ச்சில் பிறந்தார். அவருடைய தந்தையார் இங்கிலாந்தில் மதச் சீர்திருத்தத்தை நடத்திய எட்டாம் ஹென்றி மன்னராவார். எலிசபெத்தின் அன்னை, ஹென்றியின் இரண்டாம் மனைவியான ஆன்பொலின், 1536இல் தூக்குத் தண்டனை பெற்றாள். சில மாதங்கள் கழித்து பாராளுமன்றம், அப்போது 3வயதாக இருந்த எலிசபெத்தை திருமணத்திற்குப் புறம்பாகப் பிறந்த பிள்ளையென்று அறிவித்தது. (ஆங்கிலேய கத்தோலிக்கர் பலர் அவ்வாறே கருதினர்). நாடாளுமன்றம் இவ்வாறு ஒதுக்கிவைத்த போதிலும், எலிசபெத் அரண்மனையிலேயே வளர்ந்து சிறந்த கல்வி பெற்று வந்தார்.

எட்டாம் ஹென்றி 1547இல் இறந்தார். அப்போது எலிசபெத்திற்கு 13 வயது. அடுத்த 11 ஆண்டுகளாக ஆட்சி செய்த ஆங்கிலேய மன்னர்கள் சிறப்புற ஆட்சிசெய்யவில்லை. எலிசபெத்தின் சகோதரர் ஆறாம் எட்வர்ட் 1547 முதல் 1553 வரை ஆட்சி செய்தார். அவராட்சியில் அரசாங்கம் புரட்டஸ்தாந்து சமயம் எனப்படும் மறுப்புச் சமயத்தையே பெரிதும் ஆதரித்து வந்தது. அடுத்த ஐந்தாண்டுகள் ஆட்சி புரிந்த முதலாம் மேரி அரசி, போப்பாண்டவரின் மேலாண்மையை ஆதரித்து ரோமன் கத்தோலிக்க சமயத்தை முந்திய நிலைக்கு உயர்த்த முயன்றார். அவரது ஆட்சியில் ஆங்கிலேய மறுப்புச் சமயத்தார் நசுக்கப்பட்டனர். அவர்களுள் ஏறக்குறைய 300 பேர் கொல்லப்பட்டனர். (இதனால்தான் அரசிக்கு 'இரத்த வெறியுள்ள மேரி' எனும் வசைப் பெயர் வந்தது). எலிசபெத் கைது செய்யப்பட்டு அரச சிறையில் அடைக்கப்பட்டார். பிறகு அவர் விடுதலையான போதிலும், கொஞ்ச காலம் அவர் உயிருக்கு ஆபத்து இருந்து வந்தது. மேரி (1558இல்) இறந்ததும், 25 வயதுள்ள எலிசபெத் அரியணையேறினார். அப்போது இங்கிலாந்து மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

அப்போது இளம் அரசியைப் பல பிரச்சினைகள் எதிர்நோக்கி நின்றன. பிரான்ஸ"டன் போர், ஸ்கொட்லாந்து, ஸ்பெயின் ஆகிய பகுதிகளுடன் பிணக்கு, எல்லாவற்றிற்கு மேலாக இங்கிலாந்தில் நிலவிய சமயப் பிளவுகள் போன்ற பல பிரச்சினைகளை அவர் சந்திக்க நேரிட்டது.

இறுதியாகக் கூறப்பட்டதையே அவர் முதலில் தீர்க்க முயன்றார். எலிசபெத் பதவியேற்றதும் விரைவில் மேலாண்மைச் சட்டமும், ஒரு வழிபாட்டுச் சட்டமும் (1559) நிறைவேற்றப்பட்டன. இவை அங்கிலிக்கன் சமயத்தை இங்கிலாந்தின் அரசுச் சமயமாக நிறுவின. இதனால் மிதவாத மறுப்புச் சமயத்தினர் உளநிறைவடைந்தனர். ஆனால், பியூரிட்டான்கள் எனப்படும் தூய்மைச் சமயத்தினர் இன்னும் தீவிரமான சீர்திருத்தத்தை விரும்பினர். ஒருபுறம் பியூரிட்டான்களும் மறுபுறம் கத்தோலிக்கர்களும் எதிர்த்த போதிலும்,




எலிசபெத் தமது ஆட்சி முழுவதும் 1559 இல் ஏற்படுத்திய சமரச இணக்கத்தை உறுதியாக நிலைநாட்டி வந்தார்.

ஸ்கொட்லாந்து மேரி அரசியின் நிலை சமயச் சூழலைச் சிக்கலாக்கியது. ஸ்கொட்லாந்தை விட்டு வெளியேற்றப்பட்ட மேரி, இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்திருந்தாள். விரைவில் எலிசபெத் அவளைச் சிறைப்படுத்தினார். எலிசபெத்தின் செயல் எதேச்சாதிகாரமான செயலன்று. மேரி ஒரு கத்தோலிக்கர். மேலும் எலிசபெத்திற்குப் பின் இங்கிலாந்தின் அரியணையேறும் உரிமையுடையவர். ஒரு புரட்சி அல்லது அரசியல் கொலை நிகழுமென்றால், இங்கிலாந்தில் திரும்பவும் கத்தோலிக்க அரசி பதவியேற்க நேரிடும். மேரி சிறையிலிருந்த 19 ஆண்டுகளில் எலிசபெத்திற்கு எதிராகப் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. அவற்றிற்கு மேரியும் உடந்தையாக இருந்ததாகப் போதிய சான்றுகள் இருந்தன. ஆகவே, இறுதியில் 1587இல் மேரி கொல்லப்பட்டாள். எலிசபெத் விருப்பமின்றி மேரியின் கொலைத் தண்டனை ஆணையில் கையொப்பமிட்டார். எலிசபெத்தின் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் பலரும் மேரி விரைவில் தூக்குத் தண்டனை பெற வேண்டுமென்று விரும்பினர்.

சமயப் பூசலினால் எலிசபெத்திற்கு ஆபத்துக்கள் ஏற்பட்டன. 1570இல் ஐந்தாம் பயஸ் போப்பாண்டவர் எலிச பெத்தைக் கத்தோலிக்கச் சமயத்திலிருந்து விலக்கி, அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக ஆணையிட்டார். 1596இல் 13ஆம் கிரிகோரி போப்பாண்டவர். எலிசபெத்தைக் கொலை செய்தல் பாவமன்று என்று அறிவித்தார். ஆயினும் அச்சூழ்நிலையினால் எலிசபெத்திற்கு நன்மைகள் ஏற்பட்டன. கத்தோலிக்க முடியாட்சி திரும்பவும் இங்கிலாந்தில் ஏற்படக்கூடுமென்று மறுப்புச் சமயத்தினர் அஞ்சினர். அவ்வாறு நிகழாதவாறு தடுக்கும் சிறந்த அரணாக எலிசபெத் விளங்கினார். ஆங்கிலேய மறுப்புச் சமயத்தினருள் பெருந்திரளானோர் அவரை ஆதரித்ததற்கு இது முக்கிய காரணமாக இருந்தது.

எலிசபெத் அயல்நாட்டுக் கொள்கையைத் தூதாண்மைத் திறத்துடன் கையாண்டு வந்தார். அவர் 1560ஆம் ஆண்டிலேயே எடின்பரோ உடன்படிக்கையைச் செய்தார். அதனால் ஸ்கொட்லாந்துடன் அமைதி ஏற்பட்டது. பிரான்ஸ"டன் நிகழ்ந்து வந்த போரும் நிறுத்தப்பட்டது. இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவு வளர்ந்தது. ஆயினும் நாளடைவில் இங்கிலாந்து ஸ்பெயினுடன் போரிட நேர்ந்தது. எலிசபெத் போரைத் தவிர்க்க முயன்றார்.


**வியப்புகள் தொடரும்....**


# காதிலை பூ கந்தசாமி



### நோட்டீஸ் பலகை

நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

*வணக்கமுங்கோ...ஓ....ஓ....*

"ஒரு பொம்மலாட்டம் நடக்குது. ரொம்ப புதுமையாக இருக்குது. நாலு பேரு நடுவிலே நூலு ஒருவன் கையிலே..... நாலு பேரு நடுவிலே நூலு ஒருவன் கையிலே...ஒரு பொம்மலாட்டம் நடக்குது. ரொம்பப் புதுமையாக இருக்குது." உந்தப் பாட்டை தன்ர பேவரிட் பாட்டாக ஒருவர் பாடிக்கொண்டு திரியிறாருங்கோ....." அவரைப் பார்க்கவே பாவமா இருக்கு. என்னதான் தள்ளாத வயசா இருந்தாலும் அவையின்ர நூல் இழுப்புக்கெல்லாம் விளையாட்டுப் பிள்ளை கணக்கா ஓடி ஓடித் திரிஞ்சவருக்கு அவையள் செய்த பிரதியுபகாரம் இதுதானா எண்டு நினைக்கேக்கையே நெஞ்சு பதறுதுங்கோ.

ஜனாதிபதியோடை சரியான விதத்தில பேச்சு நடத்தயில்லை யெண்டும் திருவாணமலையில ஒரு பெரிய ஹர்த்தாலை நடத்த முன்வரயில்லை யெண்டும் பெருங் குற்றச்சாட்டுக்கள் போக, இன்னும் ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்களாம். மனிசன் மனசு உடைஞ்சுபோய் இருக்காருங்கோ. கடந்துபோன ஒரு வருஷத்திலை யும், தான்பட்ட கஷ்டம், தான் அனுபவிச்ச மனக்கசப்புகள் எல்லாத்துக்கும் ஒரு பிரயோசனமில்லாமப் போட்டுதுங்கோ. இப்பதான் சங்கரியாரை நினைச்சுப் பார்க்கிறார். மானமுள்ள மனிசன் அவர். இவையின்ர ஆட்டத்துக்கு ஆடவும், மானங்கெட்டுத் திரியவும் தன்னால முடியாதெண்டு மனிசன் உதறித்தள்ளிப்போட்டு, எம்.பி.பதவி இல்லாட்டிலும் கௌரவத்தோடை வாழுறார் எண்டு தன்ர பழையகால வாழ்க்கையை நினைச்சு நினைச்சு கவலைப்படுகிறாராம். ஒரே ஒரு எம்.பி.ப் பதவிக்காக அரசியல் மேடையில தன்னை அம்மணமா விட்டிட்ட மாதிரி மனிசன் பீல் பண்ணுறாராம். தான் அரசியல் செய்யேக்க அரை ட்ராயரோடை மூக்கை சீறிக் கொண்டு திரிஞ்ச பெடியனை, தன்னுடைய தலைமைப் பதவிக்கு நியமிக்கப் போகினமே எண்டதுதான் அவருக்கு ஜீரணிக்க ஏலாம இருக்குதெண்டு மனிசன் புலம்பித் திரியிறாராம். கொடுமை கொடுமை யெண்டு கோயிலுக்குப் போனால் அங்க ஒரு கொடுமை தலையை விரிச்சுக்கொண்டு ஆடுதெண்ட கதையா மனம் உடைஞ்சு போயிருக்கிற இந்த நேரத்தில தேசியப் பட்டியலில எம்.பி.யானவர், பாராளுமன்றத் துக்குள்ள எதிர்க்கட்சி ஆசனத்துக்கு எந்த வழியாலை போகவேணுமெண்டு தெரியாமல் ஆளும் கட்சி ஆசனப் பக்கமா வந்து அவமானப்பட்ட உந்த வேந்தன், நாலு பேருக்கு முன்னால எதிர்த்துக் கதைக்கிற அளவுக்கு என்னுடைய நேரம் ஆயிட்டுதே எண்டு அழாத குறையாச் சொல்லுறார்.

'நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால் நிழலும் கூட மிதிக்கும்' எண்டு கண்ணதாசன் என்ன அனுபவத்திலை எழுதினாரோ தெரியலை; எனக்கு அந்த உண்மை தெரிஞ்சுட்டுது. கொஞ்சம் தலைமைப் பொறுப்பில இருந்து தூக்குப்பட்டதுதான். மிச்சம் என்னுடைய வயதென்ன, என்னுடைய அனுபவமென்ன, நேற்றுப் பேஞ்ச மழையில இண்டைக்கு முளைச்ச காளான்கள் மாதிரி - புதுமாப்பிள்ளையள் மாதிரி - பாராளுமன்றத்துக்கு வந்தவை இண்டைக்கு ஒரு எகத்தாளமாய், ஏளனமாய் பார்க்கிறதும், சிரிக்கிறதும், நினைக்கேக்க வாய்விட்டு அழ வேணும் போல இருக்கு. என்ன செய்யிறது எல்லாம் எண்ட தலையெழுத்து. உப்பிடியெல்லாம் வேதனையின் உச்சத்திலை நிண்டு வெந்துகொண்டிருக்கிறது யாரெண்டதை இன்னும் புரிஞ்சு கொள்ளாமலா இருந்தீங்கள்.

இண்டைய நிலைமையில இத்தனை வேதனைக்கும், சோதனைக்கும் ஐ.எஸ்.ஓ. உரிமையாளர். திருவாண மலையின்ர திருமகன் எண்டும், இவ்வளவு நாளும் கூத்தமைப்பின்ர கொடித் தலைவன் எண்டும், திருவாணமலை வாழ் மக்களின்ர வாசலடிக்கு தேர்தல் காலத்திலைமட்டும் குழைஞ்சுகொண்டு கும்பிடுபோடுற எதிர்கால மாமனிதர் எண்டும் பல பட்டங்களுக்குச் சொந்தக்காரரான எங்கட வல்லவர், நல்லவர், பெண்ட் எடுக்கிறதில கெட்டிக்காரர், மகான். சே! அவரைப் பற்றி புகழுற தெண்டால் உப்பிடி நீட்டிக் கொண்டே போகலாமுங்கோ...ஏன் எண்டால் அவரின்ர பொலிரிக்ஸ் மற்றும் பொலிடிக்ஸ் எக்ஸ்பீரியன்ஸ் அப்பிடியுங்கோ. அதாலதான் அவரின்ர திருப்பெயரை என்னுடைய திருவாயாலை உச்சரிக்க முதலில உப்பிடியான சில, பல அடைமொழிகளை சொல்லவேண்டியதாப் போச்சுங்கோ. தனக்கு மரியாதை இல்லாத - தனது கௌரவத்துக்குப் பங்கம் விளைவிக்கிற மானங்கெட்ட கூத்தமைப்பு தலைவர் பதவியை துணிந்து தூக்கி எறியமுன்னம், தூக்கி எறியப்பட்ட தன்மானச் சிங்கம், புரட்சித் தமிழன், திருமலை மண், பத்தியமிருந்து பெற்றெடுத்த தவப் புதல்வன். இத்தனைக்கும் சம்மந்தமிருந்தும் சம்மந்தமில்லாமலும், சம்பந்தமில்லாம போன சம்பந்தமானவரைத் தானுங்கோ இவ்வளவு நேரமும் சொன்ன நான்.

இந்தப் பெரிய பொலிரிக்ஸ் மலையானவரையே மண் கௌவ்வ வச்சுப் போட்டாங்கள். மனிசன் மனசு ஒடிஞ்சு போய் இருக்கிறாருங்கோ. இந்த நேரத்திலதான் அனுதாபிகள் ஐயாவுக்கு. ஆறுதல் சொல்ல வேணுமுங்கோ. பிளீஸ் ஆறுதல் சொல்லுங்கோ.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(09.06.2005 தொடங்கி 15.06.2005 வரை)

**சோதிட மாமணி தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

இடபம் - சூரியன், மிதுனம் - வெள்ளி, புதன், கர்க்கடகம் - சனி, கன்னி - வியாழன், கேது, மீனம் - செவ்வாய், இராகு.
சந்திரன் மிதுனம், கர்க்கடகம், சிங்கம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நிலை கஷ்டம், வீண் பிரயாசம், மன உளைச்சல், அன்னியர் சகவாசம், செலவு மிகுதி, தேகசுகக் குறைவு, உத்தியோக பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், சோம்பல், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் நன்மை, காரியானுகூலம், உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக உயர்ச்சி, மாணவர் கல்வி நன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் நன்மை, பாரிய செலவு, கடன் பயம், வீண் கலக்கம், தேகசுகக் கஷ்டம், குடும்பப் பொறுப்பு, உத்தியோக சிரமம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் பயம், செலவு மிகுதி, மறைமுக எதிர்ப்பு, குடும்ப நன்மை, சுபகாரிய முயற்சி, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் நிலை மந்தம், செலவு மிகுதி, பயனற்ற செயல், அன்னியர் சகவாசம், குடும்பத் தொல்லை, மனக்கிலேசம், உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பொருள் வரவு, பெரியோர் சகாயம், குடும்பப் பொறுப்பு, உத்தியோகச் சிறப்பு, புதிய பதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் நன்மை, எதிர்பாரா செலவு, மனக் கலக்கம், பணியாளர் தொல்லை, புதிய முயற்சி, குடும்பக் கலகம், மனச்சோர்வு, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் நன்மை, மன மகிழ்ச்சி, இனசனச் சிறப்பு, பெரியோர் சகாயம், பிரயாண மிகுதி, வெளியிட வாழ்க்கை, குடும்பப் பேறு, உத்தியோக முயற்சி, புதிய பதவி நன்மை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 05.

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.)
தொழில் கஷ்டம், செலவு மிகுதி, அன்னியர் நட்பு, புதிய முயற்சி, பிரயாண மிகுதி, குடும்பப் பொறுப்பு, சுபகாரியத் தடை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் அலைச்சல், எதிர்பாரா செலவு, மனக் கிலேசம், வெளியாரால் தொல்லை, குடும்பப் பற்று, உத்தியோகக் கலகம், பதவி மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் சிறப்பு, பண வரவு, பெரியோர் சகாயம், மன அமைதி, குடும்ப மகிழ்ச்சி, பிள்ளைகளால் சிறப்பு, உத்தியோக பயம், எதிர்பாரா மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் அலைச்சல், மனக்கலக்கம், செலவதிகம், பெரியோர் சகாயம், கடன் தொல்லை, குடும்பச் சிக்கல், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# இதய வீணை

தினமும்

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை


கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Localization : | 13° East |
| Frequency : | 11013 MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |

## படகு பற....பற....





## கொஞ்சம் நீளம்

ஸ்ரீபன் டெயிலர் எனும் பிரித்தானிய நாட்டவர் ஏதோ நாக்கில் சாதனை செய்து காட்டுகிறார். அது என்னவென்றால் இவருக்குக் கொஞ்சம் நாக்கு நீளம். அதாவது 9.4 சென்ரி மீற்றர் (3.7 அங்குலம்) நீளமுடையது இவருடைய நாக்கு. இச் சாதனையை 2002ஆம் ஆண்டு வெஸ்ட்வூட் மருத்துவ நிலையம் வெளியிட்டது. வாய் கொஞ்சம் நீளம் என்பார்களே அது இதுதானா?

கடலில் படகு விட்ட காலம் போய் இப்போது ஆற்றில்கூட பெரிய கப்பல்களை அனுப்புகிறார்கள் அமெரிக்கர்கள். அந்த வகையில் இங்குள்ள கப்பலும் ஒரு ஆற்றில் செலுத்துவதற்காகவே. 'அமெரிக்கன் குயின்' என அழைக்கப்படும் இக் கப்பல் 127.4 மீற்றர் (418 அடி) நீளமுடையது. மற்றும் 4,891 தொன் நிறையுடையது. அமெரிக்க மதிப்பின்படி இக் கப்பல் 65 மில்லியன் டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இக் கப்பலில் 6 தட்டுக்களும் 450 பயணிகள் நிற்கக்கூடிய பல்கனி வசதியும் உள்ளன. ஆற்றில் ஓடும் கப்பல்களில் சொகுசானதும், விலை கூடியதுமான கப்பல் எனும் பெருமையைப் பெற்றுள்ளது இது. இப்படித்தான் டைட்டானிக்கும் இருந்ததாம்.....

## பலன்



படத்தில் உள்ளவர் இருமுடி தரித்து சபரிமலைக்குச் செல்பவரா? இல்லவேயில்லை. இவர் தனது தோட்டத்தில் விளைந்த எலுமிச்சம்பழங்களுடன் அளிக்கும் காட்சியே இது. எலுமிச்சம் பழம் என்றால் இவ்வளவு பெரிதா என்று யோசிக்கிறீர்களா? இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த கபீர் செயின்டிம் என்னும் விவசாயி, தனது தோட்டத்தில் தான் பாடுபட்டதற்கான கைமேல் பலனே இது. இவரது தோட்டத்தில் 5.26 கிலோ கிராம் நிறையுடைய 2 எலுமிச்சம் பழங்கள் விளைந்திருக்கின்றன.

ஒரு எலுமிச்சம் பழத்தின் வீட்டம் 74 சென்ரி மீற்றர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இச் சாதனை இன்னும் முறியடிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

## 2 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



திரு.திருமதி கேதீஸ்வரன் கஜமுகி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஷபீன் தனது 2ஆவது பிறந்த நாளை 25.05.2005 அன்று சுவிற்சர்லாந்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா கேதீஸ்வரன் - அம்மா கஜமுகி, தம்பி ஷாகீசன் குடும்பத்தினரும் மற்றும் பேர்லின் ஆசை இரத்தினம் அப்பம்மா, கொழும்பு ஆசை சகுந்தலாதேவி அம்மம்மா, பேர்லினில் வசிக்கும் நந்தகுமார் மாமா, கஸ்தூரி மாமி, பரமேஸ்வரன் பெரியப்பா, பவானி பெரியம்மா, பரிஸில் வசிக்கும் ஞானேஸ்வரன் ஆசையப்பா, ஆனந்தி, ஆசையம்மா, சுவிஸில் வசிக்கும் செல்வக்குமார் மாமா, சித்திரலதா மாமி, குறிஞ்சிக்குமரன் மாமா, சோதி மாமி, லண்டனில் வசிக்கும் இதயகுமார் சித்தப்பா, கஜவதனி சித்தி, கொழும்பு கஜமதி சித்தி, மற்றும் மச்சான்மார்கள், சுதாகரன், பிரதீபன், ஷாதனன், திவாகரன், மச்சாள் சாரனா, அண்ணாமார்களான பாலதீபன், சாரங்கன், காண்டீபன், இதுஷன், ரெனிக்ஷன், அக்காமார்களான சங்கவீ, கதிர்கிளி, மற்றும் உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் : அப்பா கேதீஸ்வரன் (சுவிஸ்)

ஷபீன் கேதீஸ்வரன்

25.05.2005

## 3 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி அமிர்தா/12.06.2005

இணுவிலைச் சேர்ந்த சீ.அழகரத்தினம் - மாலினி தம்பதிகளின் செல்வப் புதல்வி அமிர்தா தனது மூன்றாவது பிறந்தநாளை 12.06.05 இல் ITALY NAPOLI எனும் இடத்திலுள்ள தனது இல்லத்தில் மிகவும் விமரிசையாக கொண்டாடுகிறார்.

அன்புச் செல்வம் அமிர்தாக் குட்டியை அன்பு அப்பா - அம்மா மற்றும் இலங்கையில் இருக்கும் அப்பம்மா- அம்மம்மா லண்டனில் வசிக்கும் சின்னம்மா குடும்பத்தினர் இத்தாலியில் இருக்கும் பெரியப்பா குடும்பத்தினர் இலங்கையில் இருக்கும் பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், மாமாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் கடவுள் கிருபையுடன் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் :- சீ. அழகரத்தினம், இத்தாலி.

